May - 2018 Volume-4 issue-44

# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

மே - 2018 பருவம் - 4 புனல் - 44 தனிச்சுற்று நன்கொடை ரூ 20

for private circulation only



## பெரியார் பார்வையில்

# அரசியல்

# அன்னையர் தினமும் அரைவேக்காட்டுத்தனமும்

**தோழர் உ.திலகவதி** சட்டக் கல்லூரி மாணவர்



இந்த மாதம் "அன்னையர் தின மாதம்" எனச் சொல்லும் அளவிற்கு அன்னை குறித்தான புனிதப் பிதற்றல்கள் எங்கும் வலம் வந்து கொண்டிருக்கின்றன.

'அம்மா' 'அன்னை' 'தாய்மை' இவை அனைத்துமே பெண்ணை நோக்கி நீளக்கூடிய சொற்றொடர்கள். இதில் கற்பிதமாகவே சில பண்புகள் தாய்மைக்காகப் புகுத்தப்பட்டுள்ளன. 'தாயுள்ளம்' 'தாய்மைக் குணம்' என வரும்போதே, அதைக் கொண்டிருப்பவர் சுயநலமற்றவராக, தியாகம் செய்யக்கூடியவராக, பொறுமை உடையவராக, கோபமற்றவராக, தன் உயிரையே கொடுக்குமளவிற்கு உன்னதமானவராக இருக்க வேண்டும். இவையே தாய்மைக்கான பண்பாகவும் தாயுள்ளத்தின் அடிப்படையாகவும் சொல்லப் படுகின்றது.

நாம் 'தந்தைமை' என்கிற வார்த்தையைக் கேள்வியுற்றிருக்கிறோமா?

அப்படியே அந்த வார்த்தை இல்லாமல் போனாலும் தந்தை குறித்தான புரிதலில் பெற்ற பிள்ளைகளை நல்ல நிலைக்கு கொண்டுவருதலே தந்தைக்கு உரிய செயலாகக் கருதப்படுகிறது.

இங்கே தாய்மை என்பதற்கான அர்த்தம் மிருகங்களிடமிருந்து கூட எடுத்துக்காட்டப் படுகின்றது. ஒரு கோழியும் தன் குஞ்சை எவ்வாறு பார்த்துக்கொள்கிறது என வியந்து பார்த்து தாய்மைக்கு அடிக்கோடிடுகிறார்கள்.

இயற்கை பெண்ணுக்குத் தன் குட்டியை, முட்டையைப் பேணிக்காக்கும் அடிப்படைப் பணியைக் கொடுத்துள்ளது என்பது மறுப்பதற் கல்ல. அதேசமயம் இயற்கை பெண்ணைத்தான் அனைத்துக் குலத்தின் தலைவியாய் நியமித்தது. அடுத்த தலைமுறையை உருவாக்கும் பேணிக்காக்கும் அவளைத்தான் கடவுளைப்போல் துதிக்கச் சொன்னது. ஆனால் அதே இயற்கையின்படி நாம் வாழவில்லை. நம் பகுத்தறிவைக் கொண்டு பல்வேறு அறிவியல் மாற்றங்களை நிகழ்த்தியுள்ளோம். உலகையே புரட்டிப்போட்டுள்ளோம். "சுரண்டல்களும் அடிமைத்தனமும்" எந்த விதத்திலும் இருக்கக் கூடாது என்பதற்காக சித்தாந்தங்களையும் தலைவர்களையும் புரட்சிகளையும் படைத்துள்ளோம். இந்தப் புள்ளியில் தான் இயற்கையின் அறநெறியைக் காரணம் காட்டி, பெண்ணைச் சுரண்டி அடிமைப் படுத்துவதை முற்றிலும் எதிர்க்கிறோம்.

பிள்ளை பெறுவதும் மறுப்பதும் ஒரு பெண்ணின் தனிப்பட்ட விருப்பம். இன்றைய உலக மக்கள் தொகையைப் பொறுத்தமட்டில் பெண்கள் குழந்தை பெற்றுக்கொள்ள மாட்டோம் என சொன்னால் மனித குலம் அழிந்துவிடப் போவதில்லை. அப்படி மக்கள்தொகை குன்றி மனித குலம் அழியும் காலத்தில் இதனை விவாதப் பொருளாக்கி, சட்டத்தின் துணையுடன் இதற்குத் தீர்வு காணலாம். ஆனால் அதற்கான அவசியம் இன்னும் பல ஆண்டுகளுக்குக் கிடையாது என்பதே நிதர்சன உண்மை.

ஒரு வேளை ஒரு பெண் விருப்பத்தின் பெயரிலோ சமூகக் கட்டாயத்தின் பெயரிலோ குழந்தை பெற்றுக்கொண்டாலும் அதனை வளர்ப்பது யார் பொறுப்பு?

அதற்கு நிச்சயம் "அம்மா தான் பொறுப்பு" எனக் கூட்டுக்குரல் வரும். ஏனென்றால் நாம் வாழ்வது, "எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே....அவர் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே" எனப் பாடிக்கொண்டிருக்கும் சமூகத்தில்.

அவன் பொறுக்கித்தனம் போக்கிரித்தனம் செய்தாலும் இந்த சமூகம் "அவன் அம்மா வளர்த்த லட்சணம் அப்படி" என்று கூறி 'வேசி மகன்' என்னும் கெட்ட வார்த்தையை வேறு நியாயப் படுத்தும்.

அம்மா தான் வளர்க்க வேண்டுமா? குழந்தை வளர்ப்பில் அப்பாவிற்கும் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் பங்கில்லையா?

"அப்பா வேலைக்கு போறாரு, அம்மா தானே வீட்ல இருக்காங்க, அவங்க தான வளர்க்கனும்"னு பதில் சொல்பவர்கள் தான் "குழந்தையைப் பாத்து வளர்க்க வேண்டியது அம்மாவோட கடமை, அவங்க அதத்தவிர வேறு வேலை எப்படி செய்ய முடியும்?" என்கிறார்கள். வேலைக்குச் செல்லக் கூடாது என்பதற்குக் குழந்தையைக் காரணம் காட்டி, குழந்தை வளர்ப்பிற்கு அம்மா வீட்டில் சும்மா தானே இருக்கிறார் என்று வெட்கமே இல்லாமல் இதனைக் காரணம் காட்டுகிறார்கள்.

இவர்கள் செய்யும் கலாச்சார நாடகங்களால் தான் அம்மாக்கள் வேலைக்கு அனுப்பப்படுவதில்லை என்பதை அவர்கள் உணரப்போவதில்லை.

இங்கே கொடுமை என்னவென்றால் வேலைக்குச் செல்லும் அம்மாக்களும் குழந்தைகளை அவர்களே தான் பார்த்துக்கொள்ள வேண்டும்.

"குழந்தைக்கு அம்மா தானே பால் கொடுக்க வேண்டும்" என்ற மழுப்பல் பதில்கள் மேலும் எரிச்சலூட்டுபவையாக இருக்கின்றது. பால் என்பது ஒரு குழந்தைக்கான உணவுரிமை. அது குறிப்பிட்ட மாதங்களுக்குத்தான் அதன் தேவையும் கூட. ஆனால் அதைக் காரணம் காட்டி குழந்தை வளர்ப்பை பெண் மீது திணிப்பது எப்படி நியாயமாகும்?

"பெற்ற குழந்தை அம்மாக்கு பாரமா? அதை வளர்ப்பதில் பங்கு கேட்பதா?" இந்தக் கேள்விகள் ஏன் அந்த குழந்தையின் மேல் சரிபாதி உரிமை கொண்டாடும் ஆணை நோக்கி எழுவதில்லை.

பிள்ளைப்பேறுக்குப் பிறகு பெண்ணின் உடலிலும் மனதிலும் பல மாற்றங்கள், சிக்கல்கள் நிகழ்கின்றது. இந்த நிலையில் குழந்தையின் முழுப்பொறுப்பும் அவள் மீதே சுமத்தப்படுகின்றது. இதே நிலையில் குழந்தை வளர்ப்பைச் சரிபாதியாகப் பகிர்ந்துகொள்ளாமல் அவளிடம் திணிப்பதும் ஒரு வன்முறையே...

என்னைக் கேட்டால் பெண்களுக்கு "பேறுகால விடுப்பு" அளிப்பது போல் ஆண்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் விடுப்பு அளித்து "குழந்தை வளர்ப்பை" சரிபாதி பிரித்துக்கொள்ள உறுதி செய்ய வேண்டும் என்பேன். ஒரு குழந்தை என்பதே நாளைய சமூகம் ஆகும். அப்பா அம்மாவைத் தாண்டி குழந்தை வளர்ப்பென்பது ஒரு சமூகக் கடமையாகும்.

**அதை விடுத்து அன்னையர் தினத்தில்**

"ஐ லவ் மை மாம்.. என் அம்மா இல்லனா நான் இல்ல.. என் அம்மா சமைக்கலனா, பாத்திரம் கழுவலனா, துணிதுவைக்கலனா வீட்ட சுத்தமா வச்சுக்கலனா என்னால வாழவே முடியாது. எனக்காக வாழ்க்கையையே தியாகம் பண்ணவங்க என் அம்மா.. இதுக்காக அவங்களுக்கு நான் அன்னையர் தினத்துல நன்றி செலுத்துறேன்"..

இப்படி பதிவுகள் இட்டு அன்னையர் தினம் கொண்டாடுறவங்க உண்மையில் வெட்கப்படனும். ஒரு பெண்ணைக் கலாச்சார வளையம் போட்டுச் சுரண்டி அடிமையாக்கி அவங்களோட ஆசைகள கனவுகளப் பொசுக்கிட்டு உனக்காகவே வாழுற ஒரு உயிரினமா நீங்க மாத்தி வச்சுருக்கீங்கன்னா... நீங்க அதற்காக அசிங்கம் தான் படணும்.

"இல்ல.. அது அவங்க விருப்பத்தின் பேருலதான் பண்றாங்க, நான் கட்டாயப்படுத்தல, அடிமைப்படுத்தல" னு நியாயம் பேசுனா ..அந்த நிலையிலிருந்து அவங்க வெளிய வர நீங்க என்ன முயற்சி செஞ்சிறுக்கீங்கனு சிந்திச்சி பாருங்க...

"தினமும் ஒரு ஆள் வந்து என் செருப்பத் துடைக்கிறாரு... ஆனா நான் அவர வந்து துடைக்கச் சொல்லல, அதனால எம்மேல தப்பில்லனு சொல்ல முடியுமா? அவரே வந்து துடைத்தாலும் அவரைச் சமமா மதிச்சி ஒரு மனிதத்தின் அடிப்படையில் அவர் யாருக்கும் அடிமையில்ல, இந்த வேலையை அவரு செய்ய வேண்டாம்னு தடுத்து, புரிதல ஏற்படுத்துறதுதான என்னோட நியாயமான மனிதத் தன்மையா இருக்க முடியும்? அதை விடுத்து அவரின் அறியாமையை பயன்படுத்தி அவர் விரும்புறாரு செய்றாரு என சொன்னால் அது மனிதத்தன்மையா?

**தாய்மை என்பது ஒரு பதவியல்ல. அது ஒரு உணர்வு**

"பெண்கள் தாய்மை எனும் வரம் படைத்தவர்கள் புனிதமானவர்கள்" என்ற கற்பிதம் சூழ்ந்துள்ளது. பத்து மாதம் சுமந்து பெற்றல் மற்றும் ஒரு குழந்தையின் தாய் என்பது தாய்மை அல்ல. தந்தையிடமும் தாய்மை உண்டு. அதற்கான பெயர் வைத்தலில் தான் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளீர்கள். எல்லாத் தாயும் தாய்மை கொண்டவரல்ல. வற்புறுத்தலின் பேரில் விருப்பமின்றி பிள்ளையை பெற்றல் குழந்தைகளை பெற்றுவிட்டோமே என்று குழந்தைகள் காப்பகத்தில் வளர்ப்பவர்களும் உள்ளனர். அவர்களிடம் உங்கள் கற்பிதத் தாய்மையைத் திணிக்க முடியாது.

தாய்மை என்பது ஒரு உன்னத உணர்வு அது யாரிடமிருந்து வேண்டுமானாலும் கிடைக்கும் என்பீர்களானால் தாய்மை பெண்ணுக்கானது மட்டுமல்ல...

தந்தையுடையது. காதலனுடையது. பாட்டியுடையது. அண்ணனுடையது. நண்பனுடையது. அக்காவுடையது... அல்லது தாய்மை எனப்படுவது குழந்தையை ஈன்ற பாலூட்டும் ஒரு பெண்ணிடமே புதைந்துள்ளது என்பீர்களானால் உங்கள் தாய்மை எனும் கற்பிதத்தைத் தூக்கி எறியுங்கள். அடிமைப் படுத்தி வைத்திருக்கும் அன்னையர்களை விடுவிக்காமல், அவர்கள் அடிமையாக இருக்கிறார்கள் என்பதை அவர்களுக்கு உணர்த்தாமல், அவர்களைப் புகழ்வதும் பரிசுப்பொருட்கள் வாங்கித் தந்து அன்னையர்தின வாழ்த்துச் சொல்வதும் அயோக்கியத்தனம் என உணருங்கள்.

உழைப்பாளர்களைச் சுரண்டிக்கொண்டு 'சிறந்த உழைப்பாளர்' பட்டங்களையும் போனஸ் களையும் காட்டி ஏமாற்றும் முதலாளிகள்போல், மனித மலத்தை மனிதர்களே அள்ளும் கொடுமையை ஒழிக்காமல் அவர்களைப் புனிப்படுத்தி, அவர்களைத் தெய்வமாக வணங்க வேண்டும் என்கிற ஆதிக்க சாதிக் கட்டமைப்பின் மூலாம் பூசப்பட்ட வார்த்தைகள் போல் தான் இருக்கிறது உங்கள் அறிவுக்கெட்ட அரைவேக்காட்டுத்தன அன்னையர் தினமும்.

**அன்னையர் தினத்தில் அவர்களின் வேலைகளைப் பகிர்ந்துகொள்ள உறுதியேற்று, அவர்களுக்கான சுயவெளியை - சுதந்திரத்தை அடைய உதவி செய்து அவர்களின் வாழ்க்கையை அவர்களை வாழ விடுவதே சிறந்த வாழ்த்தாக பரிசாக இருக்க முடியும்.**

பொள்ளாச்சி சி.விஜயராகவன்

# சாதி ஒழிப்பு – சுயமரியாதைச் சுடரொளி
# ஆனைமலை தோழர் ஏ.என்.நரசிம்மன்

கலக்காரர் தோழர் பெரியாருக்கும் அவரது இயக்கத்துக்கும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பல தோழர்கள் உற்ற துணையாக இருந்து அவருடைய கொள்கைகள் நிறைவேற பல முனைகளில் மிகக் கடுமையாக உழைத்து வெற்றி தேடித் தந்துள்ளார்கள்.

அந்த வகையில் கிழக்கே மடத்துக்குளம் துவங்கி மேற்கில் ஆனைமலை வரை - தெற்கில் மலைப்பகுதியான வால்பாறை துவங்கி நீலமலை (ஊட்டி) முடிய இருந்த ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி வட்டத்தில் அமைந்துள்ள ஆனைமலை என்கிற சிறு கிராமத்தில் தனது உழைப்பால் தோழர்களின் அரவணைப் போடு ஒரு கிராமத்தையே மாற்றி அமைத்த கலகக்காரர் தோழர் பெரியாரின் சாதி ஒழிப்பு போராட்ட வீரர், சுயமரியாதை இயக்கச் சுடர்ஒளி - பெரியாரியல் கொள்கைகளை நிறைவேற்ற உழைத்த செயல் வீரர் தோழர் ஆனைமலை நரசிம்மன் அவர்களின் வாழ்வும் பணியும் இத்தொகுப்பில் இளைய தோழர்கள் அறியத்தக்க வகையில் தொகுத்து அளிக்கப் படுகிறது.



தோழர் பெரியார் அவர்கள் எப்பொழுதும் திராவிடர் கழகப் பணிகள் பற்றித் திட்டமிடுவ தானாலும், ஓய்வு எடுத்துக்கொள்வதானாலும் குறிப்பிட்ட சில அமைதியான இடங்களுக்குச் செல்வது வழக்கம். அத்தகைய இடங்களில் ஆனைமலையும் ஒன்று. கோவை மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்துள்ளது. வயல்களும், தோப்புகளுமான இயற்கை சூழப்பட்ட அமைதியான ஊர். ஊரை அடுத்து ஆழியாறும், உப்பாறும் ஒன்று கூடும் இயற்கைச்சூழல். எல்லா மதத்தினரும், சாதியினரும் ஒருங்கிணைந்து வாழும் இடம். அவ்வூரில் செல்வச் செழிப்பும், கல்விச் சிறப்பும் உடைய கன்னடிய நாயக்கர் குடும்பங்கள் உள்ளன. அவற்றில் நாராயண நாயக்கர் புகழ் பெற்றவர். அவர் துணைவியார் குஞ்சம்மாள் இவர்களுக்கு மூன்று ஆண்பிள்ளைகள், இரண்டு பெண்பிள்ளைகள், இவர்களில் கடைசி மகனாகப் பிறந்தவரே நரசிம்மன் ஆவார்.

**இளமைத் துறவு**

1906 ஆம் ஆண்டு நரசிம்மன் பிறந்தார். இவர் சென்னை அடையாற்றில் பள்ளிப்படிப்பை முடித்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மீனாட்சி கல்லூரியில் தத்துவப் பாடத்தில் பி.ஏ.பட்டம் பெற்றார். கல்லூரி மாணவராக இருந்தபோது காவி உடையும், தாடியுமாக இருந்துள்ளார். இமயமலை ரிஷிகேஷத்திலும் சென்று தங்கி இருந்தார். இவரது துறவு மனப்பான்மையை அறிந்து பெற்றோர்கள் மிகக் கவலையடைந்தனர். நரசிம்மனுடைய அண்ணன் சங்கரநாராயணன் என்பவர் ஏற்கனவே சன்னியாசி யாகிப்போனவர். அதனால் பெற்றோர் இவரைக் கட்டாயப்படுத்தி ஜானகி என்ற உறவுக்காரப் பெண்ணை மணம் முடித்தனர். அதனால் நரசிம்மன் ஆனைமலையிலேயே தங்க நேரிட்டது.

பிறந்த ஊருக்கே புதியவராகத் தோன்றினார் நரசிம்மன். ஊர்மக்கள் இவரை 'வேல் நாயக்கர்' என்று தான் குறிப்பிடுவார்கள். இல்வாழ்க்கையில் ஈடுபட்ட நரசிம்மனுக்கு நாட்டு விடுதலை உணர்வில் விருப்பம் ஏற்பட்டது. காந்தியாரின் நிர்மாணத் திட்டப்பணிகளில் பங்கு கொண்டார். அதன் ஒரு பகுதியாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வியில் முன்னேற்றம் அடைய படிப்பு அறிவு கொடுக்க தாழ்த்தப்பட்டோர் இரவுப் பாடசாலையை ஆரம்பித்தார். அதன் திறப்பு விழாவிற்கு சத்திய மூர்த்தி, இராஜாஜி ஆகியோரை அழைத்து இரவு விழா நடத்தினார். அதற்கு வெங்கட்டராஜ் (ராஜா பீடிகாரர் மாமா) என்பவரை ஆசிரியராக நியமித்து அவரே சம்பளம் கொடுத்து நடத்தினார்.

இராஜாஜி, சத்தியமூர்த்தி போன்றவர்கள் ஆனைமலையில் அந்தக் காலத்தில் ஊர் பண்ணாடி வீடு என்கிற (கோவிந்தராஜ் நாயக்கர் வீடு ) அதில் தங்கினார்கள்.

ஆனைமலையில் தாழ்த்தப்பட்ட மாணவர் களின் கல்வி வளர்ச்சிக்காக உண்டு உறைவிட இடம் உருவாக்கினார். பேரூராட்சி உறுப்பினர் தோழர் ஏ.எம்.மாசாணி அவர்களை வார்டனாக வைத்து சபாநாயகர் சிவசண்முகம் பிள்ளை அவர்களை அழைத்துத் திறப்பு விழா நடத்தினார். இந்தத் தங்கும் விடுதியில் சுற்றி 15 மைல் தொலைவில் உள்ள சிறிய கிராமங்களான சமத்தூர், கோட்டூர், அங்கலக் குறிச்சி, சேத்துமடை, காளியாபுரம், வேட்டைக் காரன்.புதூர், சுப்பே கவுண்டன்புதூர், பொன்னாயூர் ஆகிய பகுதிகளில் உள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களைப் பெற்றோர் சம்மதத்துடன் கல்வி பயில உதவி புரிந்தார். இங்கு தங்கி படித்த பல தாழ்த்தப்பட்ட மாணவர்கள் காவல்துறை, கல்வித்துறையில் ஆசிரியர்களாக, வங்கிகளில் அதிகாரிகளாக அரசுப் பணியில் பல பதவிகளில் இடம் பெற்று, இன்று அந்த அந்தக் கிராமங்களில் சுயமரியாதையுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

**பெரியார் இயக்கத்தால் தீண்டாமை ஒழிப்பு**

இந்தக் காலகட்டத்தில் கலகக்காரர் தோழர் பெரியாரின் சமூக மறுமலர்ச்சி இயக்கமான திராவிடர் கழகத்தில் இணைந்து பெரியாரின்

பெரும்பணிக்குத் துணை நின்றார். இவருடைய எளிமையும் பழகும் தன்மையும் ஒட்டி இவருக்கு உற்ற துணையாக ஏ.எம்.திருமூர்த்தி, ஏ.எம்.திரு வேங்கடம், நஞ்சப்பன், கே.காளிமுத்து, காதர் மைதீன், முகமது அனிபா, ஆறுமுகம் ஆகிய எட்டு தோழர்களுடன் இணைந்து அனைத்துக் கிராமங் களிலும் பெரியாரின் கொள்கைகளை, துண்டறிக் கைகள், தெருமுனைக் கூட்டங்கள் வாயிலாகப் பரப்புரை பணியையும், வாரம்தோறும் தாழ்த்தப் பட்ட மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள குழந்தைகளைத் திரட்டி ஊர்வலமாக சாதி, தீண்டாமை ஒழிப்புப் பாடல்களைப் பாடிக் கொண்டும் மக்கள் மத்தியில் பரப்புரை செய்து கொண்டும் ஆற்றங்கரையை அடைவர். அங்கு அவர்களுக்குத் தோழர்களின் உதவியோடு முடி திருத்தி, குளிக்கச் செய்து புதிய ஆடைகளை வழங்கி, தீண்டாமைக்கு எதிராகப் போராடினார். இதன் காரணமாக ஆனைமலையில் இரட்டைக் குவளை முறை உள்ளிட்ட தீண்டாமை வன் செயல்கள் 1960 க்கு முன்பே மறைந்து சமத்துவம் மலர்ந்தது.

தோழர் பெரியாரின் தொடர்பால் பல்வேறு சாதி ஒழிப்புப் பணிகளில் தனித்தும் ஒத்த கருத்து உடையவர்களுடனும் தோழர்கள் இணைந்து பல புரட்சிகரமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தார். அதில் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் (சேரியை) பகுதியில் பைமாசி நஞ்சப்ப கவுண்டருக்குச் சேர்ந்த காலியிடம் இருந்தது. அதில் தாழ்த்தப்பட்ட மக்கள் பல குடும்பங்கள் குடிசைகள் போட்டுக் குடியிருந்து வந்தார்கள். எதிர்பாராமல் அவை தீப்பிடித்து எரிந்துவிட்டன. தீப்பிடித்த இடம் வேண்டாம் என்று நஞ்சப்பகவுண்டர் அவர்கள் அதை விலைக்குக் கொடுக்கலானார்.

### தமிழ்நாட்டின் முதல் சமத்துவக் குடியிருப்பு

இத்தருணத்தில் தோழர் பெரியார் அவர்கள், தோழர் நரசிம்மனுக்குச் சில அறிவுரைகள் வழங்கி அதனைச் செயல்படுத்துவதின் மூலம் உங்கள் பெயரும் நமது கழகத்தின் கொள்கைகளும் மேலும் வலுவடைந்து மக்கள் உங்களை காலாகாலத்திற்கும் உங்கள் மறைவிற்குப் பிறகும் உங்கள் பெயர் நிலைத்து நிற்கும் என்று கூறினார்.

1. உங்களிடம் உள்ள நிலங்களின் ஒரு பகுதியை அல்லது புதியதாக வாங்கியோ உங்கள் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பகிர்ந்து கொடுங்கள்.
2. உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி உங்கள் பேரூராட்சியில் அரசு நிலத்தைச் சகல தரப்பு மக்களையும் உள்ளடக்கிய சமத்துவக் குடியிருப்பு ஒன்றை அமைத்துத் தாருங்கள்.
3. உங்கள் பேரூராட்சியில் ஒரு தாழ்த்தப் பட்டவரைப் பேரூராட்சித் தலைவர் ஆகக் கொண்டுவர முயற்சி செய்யுங்கள் என்றும் கூறினார்.

தோழர் பெரியாரின் ஆலோசனைகளை ஏற்று உடனடியாகச் செயல்படுத்தும் முனைப்புடன் செயல்பட்டார். முதலில் தீ விபத்தில் குடிசைகளை இழந்த தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருந்த இடத்தின் உரிமையாளர் பைமாசி நஞ்சப்பகவுண்டர் விற்க முன் வந்த அந்த இடத்தைத் தானே முழுத் தொகையும் கொடுத்து அந்த இடத்தை வாங்கி - அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பிரித்துக் கொடுத்தார். அந்த இடத்தில் குடியிருப்புகளைச் சொந்தப் பணத்தில் ஏற்பாடு செய்து கொடுத்தார். அந்த இடங்களை அவர்களுக்கே சொந்த மாக்கினார்.

### பொதுத்தொகுதியில் சக்கிலியர் தலைவராகத் தேர்வு

தோழர் பெரியாரின் மூன்றாவது ஆலோசனை யான ஆனைமலை பேரூராட்சிக்கு மன்றத் தலைவர் பொறுப்பில் ஒரு தாழ்த்தப்பட்டவரை நியமிக்க முன்முயற்சி எடுத்தபோது அப்பதவிக்கு உரிய இடம் 1948 இல் பொதுத்தொகுதியாக இருந்தது. அந்தத் தேர்தலில் தோழர் நரசிம்மனின் உறவினரான வெங்கிடுகிருஷ்ணன் போட்டியிட முடிவு செய்து மனுத்தாக்கலும் செய்திருந்தார். இந்நிலையில் தனது உறவினரின் வேட்பு மனுவைத் திரும்பப் பெறச்செய்து தனது முழு செல்வாக்கையும், மக்கள் ஆதரவையும் ஒன்று திரட்டி, தன்னுடன் காந்தி நிர்மாணப் பணிகளில் உடன் பணியாற்றிய தாழ்த்தப்பட்ட சக்கிலியர் சமுதாயத் தோழர் ஏ.எம்.மாசாணி என்பவரை நிறுத்தி வெற்றி பெறச் செய்தார்.

இந்தத் தோழர் ஏ.எம்.மாசாணி அவர்கள்தான் இந்தியாவிலேயே முதல் தாழ்த்தப்பட்ட பேரூராட்சி மன்றத் தலைவராகத் தேர்வானவர் ஆவார். தோழர் பெரியாரின் ஆலோசனைகளையும், தோழர் நரசிம்மனின் செயல்பாடுமே இந்தச் சரித்திரச் சாதனைக்குக் காரணமாகும். அப்போது தமிழக சட்டமன்றத் தலைவராக இருந்த திரு.ஜே.சண்முகம் பிள்ளை அவர்களை, ஆனைமலைக்கு அழைத்து வந்து தன் வீட்டில் தங்க வைத்து ஆனைமலையில் பல்வேறு பகுதிகளில் சமபந்தி விருந்து நடத்தி, சாதி தீண்டாமைக்கு எதிராகப் பரப்புரை நிகழ்த்தினார்.

### நரசிம்மன் நகர்

இவரால் பேரூராட்சி மன்றத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்ட தோழர் ஏ.எம்.மாசாணி மற்றும் மன்ற உறுப்பினர்கள் அனைத்துக் கட்சித் தோழர்களை இணைத்துக் கொண்டு அரசுடன் போராடி இன்றைய வார்டு எண் 18 பழைய வார்டு எண் 9ஆக இருக்கும் குடியிருப்புப் பகுதியை உருவாக்கி இதில் அனைத்துச் சாதியினரும் கலந்து வாழத்தக்க வகையில் குடியிருப்புப் பகுதிகளாகப் பிரித்து அரசுமூலம் மக்களுக்குப் பகிர்ந்து அளிக்கும் பணியில் வெற்றிகண்டார்.

இதனை நிறைவேற்ற அவர் உழைத்த உழைப்பிற்கு அனைவரும் சேர்ந்து அப்பகுதிக்கு ‘நரசிம்மன் நகர்’ என்று பெயர் சூட்டி வாழ்ந்து வருகிறார்கள். இவரது பெரும் முயற்சியில் ரங்காராம் பூங்கா நரசிம்மன் நகரில் 5 ஆம் வகுப்புவரை ஒரு ஆரம்பப் பாடசாலை, ஆனைமலையில் ஒரு ஆயுர்வேத மருத்துவமனை மற்றும் குடிநீர்த் திட்டம் போன்றவைகள் கொண்டு வரப்பட்டன.

தோழர் பெரியாருடன் இணைந்து செயல் பட்ட காலங்களில் 06.12.1938 இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் 2 ஆண்டு சிறைத்தண்டனை பெற்று பெரியார் உடன் பெல்லாரி சிறையில் இருந்தபோது அவர் பட்டதாரி என்பதாலும், வருமான வரி செலுத்துபவர் என்ற அடிப்படை யிலும் சிறையில் முதல்வகுப்பு தரப்பட்டது. ஆனால், "தோழர்கள் எல்லோரும் மூன்றாம் வகுப்பில் இருக்கும்போது எனக்கு மட்டும் முதல் வகுப்பா?" என்று மறுத்துவிட்டார்.

ஒருநாள் சிறையில் எம்.என்.ராய் எழுதிய ஆங்கிலப் புத்தகம் படித்துக் கொண்டிருந்த நரசிம்மனிடம் சிறை அதிகாரி தானும் அப்புத்தகத்தைப் படிக்க விரும்பினார். உடனே புத்தகத்தை அவருக்குக் கொடுத்துப் படிக்கச் சொன்னார். மறுநாள் அதிகாரி புத்தகத்தை நரசிம்மனிடம் கொடுத்துவிட்டு ஒன்றும் புரியவில்லை என்றார். நரசிம்மன் அவருக்கு புரியும்படி விளக்கிக் கூறினார். அப்போதிருந்த சிறை அதிகாரி அவர்மீது அன்பும், மரியாதையும் காட்டினார். சிறையில் தேர்வு எழுத விரும்பிய ஒரு கைதிக்குப் பாடம் நடத்தி தேர்வு எழுதச் செய்தார்.

## கருஞ்சட்டைத் தொண்டர் படைத் தளபதி

27.08.1944 இல் சேலம் மாநாட்டில் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்ற அண்ணா கொண்டு வந்த பெரியாரின் தீர்மானத்தை முழுமனதோடு வரவேற்றார். அதுமுதல் திராவிடர் கழகத்தில் தீவிரத் தொண்டராக மாறினார். பெரியாருக்கு மிகவும் நெருக்கமானவராக ஆனார். பெரியாரின் பயணத்தின் போது உடனிருந்து உதவிகள் செய்து வந்தார்.

1945 திருச்சி மாநாட்டுக்குப் பிறகு திராவிடர் கழகமும், கருஞ்சட்டைத் தொண்டர்படையும் செல்வாக்குப் பெற்றன. அப்பொழுது தொண்டர்படைத் தளபதியாக நரசிம்மன் செயல்பட்டார். சிறுவயதிலிருந்தே உடற்பயிற்சி, தண்டால், பஸ்கி அவருக்குக் கை வந்த கலை. அக்கலையைத் தொண்டர்களுக்கும் பயிற்சி அளித்து எழுச்சி அடையச் செய்தார்.

11.05.1946 இல் மதுரையில் கருஞ்சட்டைப்படை மாநாட்டுப் பந்தலைப் பார்ப்பனர்கள் தீயிட்டுக் கொளுத்தியபோது இமயம் என எழுந்து நின்ற நரசிம்மன் கழகத் தலைவர்களையும், தோழர் களையும், பாதுகாப்பான இடங்களில் சேர்ப்பதில் முனைப்புடன் செயல்பட்டார். பெரியாரின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் முன்னணித் தொண்டராகத் திகழ்ந்தார். மிக முக்கியப் பொறுப்புகளை பெரியார் நரசிம்மனிடம் ஒப்படைத்தார்.

## பெரியாருடன் பயணங்கள்

21.12.1944 முதல் 24.12.1944 வரை வடநாட்டில் தோழர் எம்.என்.ராய் அவர்களின் தீவிர ஜனநாயகக் கட்சியால் (Radical Democratic Party Conference) மாநாடுகள் நடத்தப்பட்டன. மாநாட்டில் தோழர்கள் பெரியார், மணியம்மையார் ஆகியோருடன் பிற்படுத்தப்பட்ட, பார்ப்பனர் அல்லாதார் மாநாட்டிலும் மேலும் பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டார்.

09.02.1950 இல் தோழர்கள் பெரியார், மணியம்மை செக்கரட்டரி சண்முகம், வேலூர் திருநாவுக்கரசு ஆகியோருடன் பம்பாய் திராவிடர் கழக மாநாட்டில் கலந்து கொள்ள பம்பாய் சென்றார்.

01.02.1959 இல் கார் மூலம் புதுடெல்லி சுற்றுப்பயணத்தில் தோழர் பெரியாருடன் அன்னை மணியம்மையார், ஆனைமலை ஏ.என்.நரசிம்மன், அவரின் உறவினர் இராமகிருஷ்ண அம்மாள், ஆசிரியர் கி.வீரமணி, புலவர். இமயவரம்பன், டிரைவர் சீனிவாசனுடன் 20 நாட்களுக்கு மேலாக பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ள மோட்டார் வேனிலேயே புதுடெல்லி பயணமானார்.

23.11.1954 இல் பர்மாவில் ரங்கூன் நகரில் நடந்த பௌத்த மாநாட்டிற்குத் தோழர் பெரியார், மணியம்மையார், ஆனைமலை இராமகிருஷ்ண அம்மாள், சேலம் கே.ராதாராம் ஆகியோருடன் சென்றார்.

09.07.1949இல் குறிப்பிட்ட சில தோழர்கள் உடனிருந்து பெரியார் - மணியம்மையார் பதிவுத் திருமணம் நடந்தது. உடனே அவர்கள் ஆனைமலை வந்து நரசிம்மன் வீட்டில் 15 நாட்கள் தங்கியிருந்தார். அப்பொழுது ஆசிரியர் கி.வீரமணி அவர்களும் முன்னாள் அமைச்சரான மறைந்த என்.வி.நடராசன் அவர்களும் உடன் இருந்தனர்.

## போராட்டங்கள் - சிறை வாழ்க்கை

அதன்பின் திராவிடர் கழகத்தில் தோழர் பெரியார் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்களாகிய சென்னை முரளிகபே பிராமணாள் பெயர் அழிப்புப் போராட்டம்., சென்னை கபாலீஸ்வரர் கோவிலில் தமிழ் அர்ச்சனைப் போராட்டம்.

1952, 1953, 1954 ஆகிய மூன்று வருடங்கள் ரயில் நிலையம், அஞ்சல் நிலையம் ஆகிய இடங்களில் குலக்கல்வி எதிர்ப்புப் போராட்டம், இந்தி ஒழிப்புப் போராட்டம். ஆகஸ்ட்டில் ராமன் பட ஒழிப்புப் போராட்டம்.

1953-இல் பிள்ளையார் உருவபொம்மை உடைப்புப் போராட்டம். 26.11.57 இல் அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம். சட்ட எரிப்பில் 9 மாத சிறை தண்டனைக் கொடுத்தார்கள். இது அல்லாமல் சாதி ஒழிப்பிற்காக நீடாமங்கலம் ஆறுமுகம் அவர்கள் தலைமையில் நீடாமங்கலத்திலிருந்து சென்னை வரை நடந்து பரப்புரை மேற்கொண்டார்கள்.

1952-இல் மத்தியில் காங்கிரசு ஆட்சி அமைத்தபோது தென்னாட்டு இரயில்வே நிலையங்கள் அஞ்சலகங்களின் பெயர் பலகைகள் இந்தி மயம் ஆக்கியது,இதனை எதிர்த்து 1952 ஆகஸ்டு 1.,1953-ஆகஸ்ட் 1, 1954 ஆகஸ்ட் 1 ஆகிய நாட்களில் தமிழகம் எங்கும் இந்தி எழுத்துக்களைத் தார் பூசி அழிக்கும் போராட்டம் பெரியாரால் நடத்தப்பட்ட

போது நரசிம்மனும் தீவிரமாக ஈடுபட்டார். 1953-இல் நடைபெற்ற பிள்ளையார் உருவ பொம்மை உடைப்புப் போராட்டத்திலும் முன்னணித் தொண்டராகச் செயல்பட்டார்.

### தாழ்த்தப்பட்டோர் கோவில் நுழைவுப் போராட்டம்

அன்னாரது கழகப்பணியில் சிறந்த பணியாக சாதி ஒழிப்பின் முத்தாய்ப்பாக தாழ்த்தப்பட்ட மக்களை அழைத்துக்கொண்டு ஏ.எம்.மாசாணி அவர்கள் தலைமையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கோவில் வழிப்பாடுக்குரிய பொருட்களைத் தனது சொந்தச் செலவில் வாங்கிக் கொடுத்து ஆனைமலை ஈஸ்வரன் கோவிலுக்குள் அழைத்துச்சென்று ஆலைய நுழைவுத் தீண்டாமையை முறியடித்து தாழ்த்தப்பட்ட மக்களின் சுயமரியாதையை மீட்டுக் கொடுத்த போராட்டம் இன்றளவும் அம்மக்களால் நினைவு கூறப்படுகிறது. மக்கள் அதை எண்ணி மகிழ் கிறார்கள்.

### பெரியாருடன் ஓய்வு நேரங்கள்

ஆனைமலை ஆற்றங்கரையை அடுத்து நரசிம்ம னுக்குச் சொந்தமான தென்னந்தோப்பு, குளிர்ச்சி யான சோலையும் உண்டு. மக்கள் போக்குவரத்து நிறைந்த பகுதி. அங்குள்ள நெடுஞ்சாலையையொட்டி திராவிடர் கழகக் கட்டிடமும் அதில் பகுத்தறிவுப் படிப்பகமும் நரசிம்மனால் அமைக்கப் பட்டிருந்தன.

தந்தை பெரியார் அவர்கள் ஆனைமலைக்கு வரும்போதெல்லாம் அங்கு தங்கி ஓய்வு எடுப்பார். அந்தக் கட்டிடத்தில் வெளிப்பகுதிக்கு வந்து நின்று கொண்டும், உலாவிக் கொண்டும் இருப்பார்.மக்கள் கூட்டம் அவரைக் கண்டு செல்லும்.

ஆனைமலை நாயக்கர் தெருவில் நரசிம்மனின் வீடு உள்ளது. மாடிக் கட்டிடம் முன்னால் பரந்த புல்வெளி. நுழைவு வாயிலில் உயரமான இரும்புக் கதவுகள். பெரியாரின் வேன் வருவதற்காகவே வீட்டின் முன் நுழைவுவாயிலில் தனி வழி அமைத்து இருந்தார் நரசிம்மன். அவ்வழி இப்பொழுதும் இருக்கிறது. மாலை வேளையில் புல்வெளியில் கட்டில் போட்டு பெரியார் அமர்ந்திருப்பார். அவரருகில் புல் தரையில் நரசிம்மன் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பார்.

நரசிம்மன் எப்பொழுதும் புத்தகம் படிக்கும் பழக்கம் உடையவர். ஆனைமலை ஊராட்சி மன்றத் தலைவராக நீண்ட காலம் பணியாற்றியுள்ளார். முரட்டுத் துணியாலான வட்டக் கழுத்து ஜிப்பாவும், லுங்கியுமே அவர் அணியும் ஆடைகள். பற்களால் நோய் உண்டாவதை அறிந்து எல்லாப் பற்களையும் எடுத்துவிட்டார். மொட்டைத் தலையுடனேதான் எப்பொழுதும் இருப்பார். தெருவில் நடக்கும்போது தலை குனிந்தவாறே செல்வார். எல்லாரிடமும் பணிவாகவும், சிரித்த முகத்துடன் பழகுவார். அதிகமாகவும் உரத்த குரலிலும் யாரிடமும் பேசமாட்டார். நரசிம்மனுக்கு சங்கர், பீட்டர், லில்லி என்ற மூன்று மகன்கள். லில்லி மட்டுமே இப்பொழுது இருக்கிறார்.

### தோழர்களின் குடும்பப் பாதுகாப்பு

26.11.1957-இல் தோழர் பெரியார் அறிவித்த சாதிக்கு பாதுகாப்பு அளிக்கும் இந்திய அரசியல் சட்டப் பிரிவுகளை எரிக்கும் போராட்டத்தில் ஆனைமலையில் தோழர் ஏ.என்.நரசிம்மன் தலைமையில் தோழர்கள் ஏ.எம்.திருமூர்த்தி, ஏ.எம்.திருவேங்கடம், நஞ்சப்பன், கே.காளிமுத்து, ஆறுமுகம், முகமது அனீபா, காதர் மைதீன் ஆகிய எட்டுத் தோழர்கள் கலந்துகொண்டு சட்டத்தைக் கொளுத்தி 9 மாதச் சிறைத் தண்டனை பெற்று கோவை மத்தியச் சிறையில் மற்றத் தோழர்களுடன் மூன்றாம் வகுப்பிலேயே இருந்தார்.

சிறையில் இவரின் அடக்கத்தையும், ஆற்றலையும் சிறை அதிகாரிகள் மதித்து வந்தனர். சிறையில் தலைமுடியும், தாடியும் வளர்த்து வந்தார். தண்டனையிலிருந்து விடுதலைச் செய்தி வந்தபோது சிறையில் ஒலிபெருக்கி ஏற்பாடு செய்து அதிகாரிகள் பாராட்டுரைகள் வழங்கினார்கள். சிறைக்கதவுகள் திறக்கப்பட்டு நரசிம்மனும்,தோழர்களும் வெளியில் வந்தபோது மக்களால் வரவேற்கப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். விடுதலைக்குப் பின்பும் கழகப் பணிகளைத் தொடர்ந்தார்.

சிறையில் இருந்து விடுதலை ஆனபின் தன்னோடு சட்டத்தை எரித்து தண்டனை பெற்று தன்னுடன் சிறையில் இருந்த தோழர்களைத் தனது குடும்ப உறுப்பினர்களாகவே பாவித்து அவர் களுடைய இன்ப துன்பங்களில் பங்கேற்று நல்ல தலைமைப் பண்பாளராகத் தன்னைத் தகவமைத்துக் கொண்டு அவர்களைப் பேணிப் பாதுகாத்தார்.

சாதி ஒழிப்பிற்கு நாட்டுப் பிரிவினையே வழி என்று பெரியார் முடிவு செய்தார். எனவே 1960 இல் தமிழ்நாடு நீங்கிய இந்திய தேசப்பட எரிப்புப் போராட்டம் பற்றி அறிவித்தார். அதிலும் நரசிம்மன் எழுச்சியுடன் பங்கு கொண்டார்.

09.03.1964 இல் காமராசர் ஆட்சியில் நில உச்சவரம்புச் சட்டம் இயற்றியதை உச்சநீதிமன்றம் செல்லாது என அறிவித்ததைக் கண்டித்து 15.03.1964 முதல் 05.04.1964 முடிய சுப்ரீம் கோர்ட் கண்டனநாள் கூட்டங்களை நடத்துமாறு பெரியார் ஆணையிட்டதை ஏற்று நரசிம்மன் செயல்பட்டார்.

### உடல்நலம் குன்றியும் கழகநலன் காத்தவர்

திராவிடர் கழகத்தில் இருந்து பணியாற்றுவதிலே நரசிம்மன் அளவற்ற மகிழ்ச்சியுடையவராய் இருந்தார். தோழர் பெரியாரும் நம்பிக்கையுள்ள உண்மையான தொண்டராகவே நரசிம்மனை மதித்தார். உடல் நலம் குன்றிய நிலையிலும் கழகப் பணிகளை ஆற்றி வந்தார். இந்த நிலையில் இதயநோய் தாக்கியது. மருந்து என்பதையோ, சிகிச்சை என்பதையோ அறியாது வாழ்ந்தவர் நரசிம்மன். அவரால் எழுந்து நடமாட முடியவில்லை. நாளுக்கு நாள் நோயின் வலிமை வளர்ந்தது. உடலிலும் செயல்கள் தளர்ந்தன.

பெரியாரின் எண்ணங்கள் மிக உயர்ந்தவை, உறுதியானவை பாமரர்களுக்காக பெரியார்

ஆற்றிவரும் செயல்கள் உண்மையானவை. அவரைப்போல் உலகில் ஒருவரைப் பார்க்கமுடியாது என்று தன்னைக் காண வருபவர்களிடம் அமைதியான குரலில் சொல்லுவார். இந்த ஒப்பற்ற தோழரை, கலகக்காரர் தோழர் பெரியார் பல்வேறு இயக்கப் பணிகளையும், போராட்டங்கள் தொடர்பான பணிகளையும் தாம் தலைநகரில் இல்லாமல் வெளிமாநில மற்றும் வெளிநாட்டுப் பயணங்களிலும், சிறைத் தண்டனைப் பெற்று சிறையில் உள்ளபோதும் இயக்கத்தை வழி நடத்தும் பொறுப்புக்களில் இவருக்கும் பகிர்ந்து அளித்தார்.

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தில் நிர்வாகக் குழுவிலும் இயக்கத்தின் பொறுப்பிலும் இவர்மீது நம்பிக்கை வைத்து இவரையும், இவரது உறவினரான ஆனைமலை இராமகிருஷ்ண அம்மாள் அவர்களையும் நியமனம் செய்தார்.

**எழுத்தாற்றல்**

தோழர் பெரியாரின் 85ஆம் ஆண்டு பிறந்த நாள் விடுதலை மலரில் (பக்-37) நரசிம்மன் எழுதிய கட்டுரை அவரது உண்மையான மனநிலையை வெளிப்படுத்துவதாகும் அதன் சுருக்கம் இதோ!

விஞ்ஞானம் வளர்ந்துள்ள இக்காலத்திலும் தமிழ்மக்கள் சாணியைப் பிடித்து வைத்து வழிபட்டால் எல்லா நன்மையும் கிடைக்கும் என்றும், பார்ப்பானின் காலை கழுவிக் குடித்தால் உடலும், உள்ளமும் சுத்தி பெறும் என நம்பி அதன்படி நடந்து தங்கள் பொன்னான நேரத்தையும், பணத்தையும் வீணாக்கி வருகிறார்களே.

இந்த நிலையில் பெரியார் அவர்களின் சுயமரியாதை இயக்கம் மிகமிகத் தேவையானதே திராவிடர் கழகக் கொள்கை, மக்கள் ஒவ்வொரு வரும் எதையும் துணிவுடன் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்கிறது. பெரியார் அவர்களின் சுறுசுறுப்பும், இடைவிடாத முயற்சியும், துணிவும், வாழ்க்கைமுறையும் என்னைக் கவர்ந்திருக்கிறது. மேலும் அவர் கருத்துகளை ஏற்று பிறரிடமிருந்து எதையும் எதிர்பாராமல், உறுதியுடன் செயல் ஊக்கத்தையும் கொண்ட தொண்டர்கள் கழகத்தில் ஏராள மானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடன் நெருங்கிப் பழகுவது எனக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் கொடுக்கிறது. இவைகளே என்னை இன்னும் பெரியார் தொண்டனாக கழகத் தொண்டனாக இருக்கச் செய்கிறது என்றார். செல்வச் செருக்கும், கல்விச் செருக்கும் சிறிதும் இல்லாத நரசிம்மன் தன்னுடைய தலைவர் மீதும், கழகத்தின் மீதும், தொண்டர்கள் மீதும் எத்தகைய அன்பும், மரியாதையும், ஈடுபாடும் வைத்திருந்தார் என்பதை இக்கட்டுரையில் விளக்குகிறார்.

**மறைவு**

இத்தகைய கொள்கை உறுதிமிக்க சாதி ஒழிப்புப் போராட்ட வீரரும் சுயமரியாதை இயக்க வீரருமான தோழர் ஆனைமலை நரசிம்மன் அவர்கள் 02.07.1967 அன்று இயற்கை எய்தினார்.

சென்னை மருத்துவமனையில் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுவந்த தோழர் பெரியார் ஆனைமலை செல்ல வேண்டும் என்று துடித்தார். மருத்துவர்கள் அடியோடு மறுத்துவிட்டனர். அதனால், மணியம்மையாரும் போகமுடியவில்லை. 03.07.1967 விடுதலையில் பெரியார் எழுதினார்.

“கழகத்தின் கண்போன்ற தோழர் நரசிம்மன் அவர்களை இயக்கத்தின் முக்கியப் பொறுப்பில் எனக்குப் பின்னால் அமர வைக்க நினைத்திருந்தேன். ஆனால் அவர் என்னை முந்திக் கொண்டார். எவ்வளவோ செல்வக் குடும்பத்தில் பிறந்தும் துறவிபோல், என்னிடம் உண்மை, அன்புவைத்து, என்னோடு சுற்றிக் கொண்டிருந்தார். அருமை நண்பர், அனைவரும் பின்பற்றத்தக்க மனிதர் (Exemplary)” என்று தன் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டார்.

27.08.1967 விடுதலையில் தோழர் ஏ.என். நரசிம்மன் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து, நாடெங்கிலும் உள்ள திராவிடர் கழகக் கிளைகள் நிறைவேற்றி அனுப்பிய இரங்கல் தீர்மான விவரம் விடுதலை யின் கடைசிப் பக்கத்தை நிறைத்து வந்தது.

அமைதிப் புரட்சியாளராக சாதி ஒழிப்பில் தீவிரக் களப் பணியாளராகப் பணியாற்றிய தோழர் ஆனைமலை நரசிம்மன் திராவிடர் கழக வானத்தில் சாதி ஒழிப்புச் சுடர் ஒளி வீசுகிறார்.

**நன்றி:**

1. சட்ட எரிப்புப்போராளி தோழர் ஏ.எம்.திருமூர்த்தி அவர்கள் தோழர் நரசிம்மன் அவர்களின் நேர்முக உதவியாளரைப் போலச் செயல்பட்டு வந்தவர். அன்னார் வாய்மொழியாகக் கூறிய பல தகவல்களை குறிப்பேட்டில் பதிய வைத்திருந்து - காட்டாறு குழு அணுகிக் கேட்டவுடன் அப்பதிவுகளை அளித்து இக்கட்டுரையின் ஆக்கத்திற்கு உதவிய தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர் ருக்மணி அவர்களுக்கும்,

2. திராவிடர் கழக வெளியீடுகளான வடநாட்டில் பெரியார் ஒரு சுற்றுப் பயணத் தொகுப்பு தொகுதி 1 மற்றும் 2

3. தமிழ்க் குடிஅரசு பதிப்பகம் சென்னை 5 - வெளியீடான “தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு” நூல்களுக்கும்

4. தோழர் நரசிம்மன் அவர்களின் நூற்றாண்டுவிழா 2006 இல் வந்தபோது தோழர் ஆனைமலை நரசிம்மன் அவர்களின் அபிமானிகள் மற்றும் தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஆனைமலைக் கிளையால் வெளியிடப் பட்ட துண்டறிக்கைக்கும்.

5. தோழர் ஏ.எம்.மாசாணி அவர்களின் மகனும், முன்னாள் பேரூராட்சி உறுப்பினரும், கிராம நிர்வாக அலுவலரும் (பணி ஓய்வும்) பெற்றவருமான தோழர் மா.சாமிநாதன் அலைபேசியில் பல செய்திகளை பகிர்ந்துகொண்ட அவருக்கும் நன்றி.

# வால்மார்ட் - ஃப்ளிப்கார்ட் = பார்ப்பன - பனியா மேட் ஓவர்




உலக அளவில் சில்லறை வணிகத்தில் முதல் இடத்தில் இருக்கும் உலகின் மிகப்பெரும் பன்னாட்டு நிறுவனமான வால்மார்ட் நிறுவனம் இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பே தனது கணக்கைத் தொடங்கி விட்டது. ஆனாலும், இந்தியாவில் உள்ள சிறு வணிகர்களின் எதிர்ப்பு, அரசுகளின் தாமதப் போக்கு, போட்டி நிறுவனங் களின் எதிர்ப்பு ஆகியவற்றால் இந்தியாவின் ஒட்டுமொத்த சில்லறை வணிகத்தையும் கைப்பற்ற இயலாத நிலை இருந்தது.

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் உள்ள அனைத்து சிறு சிறு கடைகள், டிபார்ட்மெண்ட் ஸ்டோர்களில் நடக்கும் ஒட்டுமொத்த வியாபாரத் திற்கு இணையாக ஆன்லைன் வர்த்தகமும் பெருகி யுள்ளது. ‘அமேசான்’ என்ற அமெரிக்க நிறுவனம் இந்தியாவின் ஆன்லைன் வர்த்தகத்தின் மூலமாக மிகப்பெரும் கொள்ளையை நடத்திவருகிறது.

அந்த நிறுவனத்தில் பணியாற்றிய சச்சின் பன்சால், பன்னி பன்சால் என்ற இரண்டு பனியாக்கள் அமேசானில் இருந்து தொழிலைக் கற்றுக்கொண்டு, 2007 இல் அந்நிறுவனத்தில் இருந்து விலகி, ஃப்ளிப்கார்ட் என்ற ஆன்லைன் வணிக நிறுவனத்தைத் தொடங்கினர். மிகச்சிறிய அளவில் தொடங்கப்பட்ட அந்த பனியாக்களின் நிறுவனம், சில ஆண்டுகளிலேயே உலகப் பெருங் கோடீசுவரர் பில்கேட்ஸ் பங்குதாரராக இணையு மளவுக்கு வளர்ந்தது.

நேரடி சில்லறை வணிகத்தைவிட, ஆன்லைன் வர்த்தகம் சூடுபிடித்துள்ள இன்றைய நிலையில், இந்தியாவின் சில்லறை வர்த்தகத்தைக் கைப்பற்றத் துடித்த அமெரிக்காவின் வால்மார்ட் மற்றும் அமேசான் நிறுவனங்களிடையே கடும் போட்டி நிலவியது. இப்போட்டியில் தற்போது வால்மார்ட் நிறுவனம் வென்றுள்ளது.130 கோடி இந்தியர்களைச் சுரண்ட இரண்டு அமெரிக்கர்களிடையே நடந்த போட்டியில் வால்மார்ட் வென்றுள்ளது.

2018 ஆம் ஆண்டு மே இரண்டாவது வாரத்தில் சுமார் 1 இலட்சத்து 35 ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஃப்ளிப்கார்ட்டின் 75 சதவிகிதப் பங்குகளை வால்மார்ட் வாங்கிவிட்டது. இந்தியாவிலும், தமிழ் நாட்டிலும் சில்லறை வர்த்தகத்தை நம்பி பல இலட்சக்கணக்கான சிறுகுடும்பங்கள் வாழ்கின்றன. தெருத்தெருவுக்குப் பெட்டிக்கடைகளும், அண்ணாச்சி கடைகளுமாக மக்களோடு மக்களாக அவர்கள் வாழ்ந்துவருகிறார்கள். நமது கஷ்ட நஷ்டங்களைப் புரிந்து, அதற்கேற்ப வணிகம் செய்பவர்களாக இருக்கிறார்கள்.

இந்த இலட்சக்கணக்கான குடும்பங்களும், அந்த இலட்சக்கணக்கான குடும்பங்களை வாழ வைத்த நமது அன்றாடத் தேவைகளும், இனி ஒன்று அல்லது இரண்டு மிகப்பெரும் பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்குள் செல்லப் போகின்றன. நாம் என்ன சாப்பிட வேண்டும், வீட்டில் எந்தப் பொருளைப் பயன்படுத்த வேண்டும் என்பவைகளை இனி அமேசானும், வால்மார்ட்டும் முடிவு செய்யப்போகின்றன.

இந்தக் கொள்ளைகள் சில்லறை வணிகத் தோடு மட்டும் நிற்கப்போவதில்லை. இந்தச் சில்லறை வர்த்தகத்திற்கு விவசாய விளைபொருட்களைக் கொண்டு செல்லப்போகும், சிறு விவசாயிகளின் எதிர்காலத்தையும் சேர்த்து அழிக்கப்போகின்றன. இப்படி கோடிக்கணக்கான, விவசாயிகளையும், சிறு வியாபாரிகளையும், நம்மையும் கொள்ளைஅடிக்கப் போகும் வால்மார்ட் நிறுவனத்திற்குத் தலைமை தாங்கும் தலைமைச் செயல் அதிகாரி யார் தெரியுமா? க்ரிஷ் அய்யர் என்ற பார்ப்பனர்.

ஆம். அய்யோ பாவம். அய்யர் அப்பாவி, நம்ம ஊர் கோவிலில் தட்டில் நாம் கொடுப்பதை வாங்கிக் கொண்டு பிழைப்பு நடத்துகிறார். அந்த அய்யர்கள் மீது ஒரு எப்.ஐ.ஆர். கூட இல்லை என்றெல்லாம் நாமேகூடப் பரிதாபப்பட்டிருப்போம். ஆனால், அந்தப் பரிதாபம்தான் மிகவும் பரிதாபமானது.

ஃப்ளிப்கார்ட் உரிமையாளர்கள் பன்சால் என்ற பனியாக்கள். வால்மார்ட் நிறுவனம் ஒரு பன்னாட்டு நிறுவனம். இந்த இரண்டு தரப்புக்கும் மீடியேட்டராக இருந்து ஒட்டுமொத்த இந்தியா வையும் கொள்ளை அடிக்கப்போகும் செயல் அதிகாரி க்ரிஷ் அய்யர் ஒரு பார்ப்பனர். இந்தியா விற்கு மட்டுமல்ல; வால்மார்ட் நிறுவனத்தின் அகில உலகத் தலைமைக்கே இந்தப் பார்ப்பனர் தான் துணைத்தலைவர். இந்த வால்மார்ட்டில் மட்டுமல்ல; இந்தியாவில் உள்ள 10,000 பன்னாட்டு நிறுவனங் களில் 8,387 (93 சதவீதம்) நிறுவனங்களில் தலைமைச் செயல் அதிகாரிகளாக இருந்து கொண்டு, நாட்டைச் சூறையாடுபவர்கள் பார்ப்பனர்கள் தான். அதனால் தான் தோழர் பெரியார், இந்திய விடுதலையை “பார்ப்பன - பனியாக்களுக்கு செய்துகொடுக்கப் பட்ட மேட் ஓவர்” என்றார்.

ஆதாரம்:
Economictimes,10.05. 2018, EPW August 2012

**அபிநயாசக்தி,** மனிதி அமைப்பு

எஸ் துர்காவாக மாறிய செக்ஸி துர்கா, சனல் குமார் சசிதரன் இயக்கிய மலையாளப் படம் செக்ஸி துர்கா. இது இவரின் மூன்றாவது படம். சில குறும்படங்களையும் இயக்கி உள்ளார். படம் பல விருதுகளைக் குவித்துள்ளது. தணிக்கையின் ஆரம்பம் முதலே பல தடைகளை சிக்கலைத் தாண்டியே செக்ஸி துர்கா வெளியிடப் பட்டது.. ஆனாலும் தடைகள் தொடர்கின்றன.

திருவிழாக் காட்சிகளுடன் தொடங்கும் இப்படம் ஒரு ஹைவேயில் நம்மை பதை பதைக்க வைத்து முடிவடைகிறது. படத்தில் இரண்டு துர்காக்கள் வருகிறார்கள். ஒன்று நாம் பார்க்காத, இருப்பதாய் நம்பும் அரூபமான துர்கா திருவிழா. அலகு குத்தல், தீ மிதித்தல் என துர்காவிற்கான நேர்த்திக்கடன் செய்வதாய்ப் படம் விரிகிறது. திருவிழா என்பது ஒரு குறியீடாகவும் அதன் உள்ளே கட்டமைக்கப்பட்டு இருக்கும் நம்பிக்கை, கலாச்சார அவலங்களைப் பருந்துப் பார்வையில் கேமரா பின் தொடர்கிறது. மிகப் பாதுகாப்பாய் அரூபமான துர்கா திருவிழாவிற்கு நடுவில் வலம் வருகிறார்.

அதே நேரத்தில் காதலனுடன் ஊரை விட்டுக் கிளம்ப நடு இரவில் யாருமில்லா சாலை அருகில் காதலனுக்காக காத்திருக்கும் துர்கா. இந்த இடத்தில் இருந்து நமக்கு பதட்டம் தொற்றிக் கொள்கிறது. காதலன் வந்துவிட்டான். சாலையைக் கடந்து ஏதாவது வண்டி கிடைக்குமா எனக் காத்திருக்கின்றனர். ஒரு கார் வருகிறது. அதில் ஓட்டுனர் மற்றும் அவருடன் ஒருவன் அமர்ந்து இருக்கிறான். ஏறச் சொல்கிறான். நம்பிக்கை இல்லை என்றாலும் வேறு வழியும் இல்லை என்பதால் ஏறுகின்றனர் துர்காவும் காதலனும்.

அந்தக் காரின் உள்ளே அரூபமான துர்காவின் சிறிய சிலையும் அந்தச் சிலைக்கு மேல் அறைத் தலையுடன் ஒரு பெண் பொம்மையும் தொங்கிக் கொண்டு இருக்கிறது. இந்த இரண்டுமே அவர்கள் யார் என்பதை நமக்கு உணர்த்திவிடும். துர்காவின் காதலன் பெயர் கபீர். இந்தப் பெயரே அவர்கள் ஊரை விட்டுக் கிளம்பப் பிரதானக் காரணமாக இருக்கும் என நமக்குப் புரிந்து விடுகிறது.

காரில் ஏறியதில் இருந்து காதலர்கள் இருவரையும் வார்த்தையால், கேள்விகளால் வன்முறைக்கு உள்ளாக்குகின்றனர் அந்த காரில் இருந்த இரண்டு பேரும். காதலர்கள் இடை இடையே காரைவிட்டு இறங்குவதும் பின்பு இரவு, சூழல் காரணமாய் அதே காரில் பயணிக்க வேண்டிய கட்டாயமுமாய் நகரும் போது அந்தக் கார் ஓட்டுனரின் நண்பர்கள் என மேலும் 2 பேர் ஏறுகின்றனர். அதன் பிறகு இன்னும் அதிகமாய் பார்வையால், செய்கையால், வார்த்தையால் வன்முறையை எதிர்கொள்கின்றனர் துர்காவும் கபீரும். பயத்தின் உச்சத்துடன் பயணிக்கின்றனர் நாமும் தான்.

இடையே போலிஸ் மறிக்கிறது துர்கா போலிசிடம் சொல்லலாம் என்கிறாள். கபீர் மறுக்கிறான். இந்த இடத்தில் சனல் ஒரு நேர்முகப் பேட்டியில் கபீர் ஈகோவுடன் துர்காவின் பேச்சைக் கேட்காமல் விவாதம் செய்வதாய்ப் பெண்ணின் ஐடியாவைக் கேட்க வேண்டுமா என அலட்சியம் செய்து தான் செய்வது சரி என்கிற தொனியில் விவாதம் செய்வான் போலிசிடம் சொல்ல விடமாட்டான் இக்காட்சியை ஆணின் அந்த ஈகோவைக் காட்டவே வைத்தேன் எனச் சொல்லி இருப்பார். படத்தின் மிக முக்கியக் கட்டம் இது. பின்பு போலிஸ் இவர்கள் யாரெனக் கேட்க டிரைவர் நண்பர்கள் என சொல்லிச் சமாளிக்கிறார்.




கார் இருட்டைக் கிழித்து ஹைவேயில் பயணிக்கிறது. இடை இடையே திருவிழாக் காட்சிகள் இந்தப் படத்தில் பதட்டம் இல்லாமல் இருப்பது இந்த நான்கு பேர் மட்டுமே.

ஒரு கட்டத்தில் சண்டை போட்டு இறங்கு கிறார்கள். கீழே இறங்கியவர்களை நகரவிடாமல் சுற்றி வளைத்து விவாதம் செய்கின்றனர். பத்திர மாய்க் கொண்டு போவதாய் உறுதி அளிக்கின்றனர். சில வீடுகள் இருக்கின்றன. வயதான தம்பதியினர் வெளியே வந்து காதலர்களுக்கு நடக்கும் வன்முறைகளைப் பார்க்கின்றனர். நாமும் நிம்மதி அடைவோம். அவர்களை வீட்டிற்கு அழைத்துச் செல்வார்கள் என அந்த வயதான தம்பதியினர் லைட்டுகளை அமர்த்தி, கதவுகளை அடைத்து

உள்ளே போய்விடுகிறார்கள் நமக்கேன் வம்பு என. அது வேறு யாரும் அல்ல சமுதாயமாகிய நாம் தான்..என்கிற குற்ற உணர்ச்சி நமக்கும் எழும்.

வன்முறையைப் பார்த்தும் கடந்து சென்றவன், வேடிக்கைப்பார்த்தவன் முதல் குற்றவாளி. பின்பு சமாதானப்படுத்தி ஏற்ற வைக்கிறார்கள். மறுபடியும் காடு கடந்து கார் பயணிக்கிறது. காதலர்கள் போக வேண்டிய இடமாக ரயில்வே ஸ்டேசனைச் சொல்வார்கள். ஆனால் ஸ்டேசன் கடந்து இப்போது கார் போய்க் கொண்டு இருக்கிறது. துர்காவும் கபீரும் என்ன ஆனார்கள்? ஊர் போனார்களா இல்லையா போன்ற கேள்விகளை சனல் நம்மிடம் தான் கேட்கிறார். .நாம் தான் பதில் சொல்ல வேண்டும்.. அந்த மிக மோசமான அசாத்திய சூழலில் நம்மால் கற்பனை செய்து கூடப் பார்க்க இயலாது.

ஆனால் இதே சூழலை இங்கு இருக்கும் பல துர்காக்கள் அனுபவிக்கிறோம்.. .செக்ஸி துர்கா என்கிற பெயருடன் படம் வெளிவரக் கூடாது என சனல் நிர்ப்பந்திக்கப்பட்டார். கடைசியில் எஸ்.துர்கா என மாற்றிக் கொள்ளுங்கள் ஆனால் என் படம் செக்ஸி துர்காதான் என படத்தை வெளியில் கொண்டு வந்தார். பல பிலிம் ஃபெஸ்டிவல்களில் விருதுகளைக் குவித்தது இப்படம்.

சென்னையில் 2 நாட்கள் 4 தியேட்டரில் மட்டும் ஓடியது. தமிழ் ஸ்டியோ என்கிற மாற்று சினிமாவிற்கான ஊடகம் மே 6 ஆம் தேதி படத்தைத் திரையிட்டது. திரையிடப்பட்ட இடத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டது.

கடவுளாய்ப் பார்க்கப்படும் கொண்டாடும் துர்கா ஒரு புரம் அதே பெயருடைய சாதாரண ஒரு துர்கா இரவில் தனியாக தன் வாழ்க்கைக்காக ஊர்விட்டு ஊர் காதலனுடன் செல்லும் போது இந்த ஆணாதிக்கச் சமூக வன்முறையை மட்டுமே வாரி வழங்குகிறது. ஒப்பீட்டு அளவில் அந்த இரவில் அந்த துர்கா நாம் தான் . தினம் தினம் மோசமான வன்முறைகளை, பாலியல் அத்துமீறல்களை எதிர் கொள்ளும் நம்மைப் போன்ற துர்காக்கள் இப்படத்தினைச் சரியாக உள் வாங்க முடியும்.

செக்ஸி என்கிற வார்த்தையை சனல் பயன்படுத்தப்பட்டிருப்பதன் அர்த்தம் படம் பார்த்தால் சரியாகப் புரியும். அதாவது கடவுளாய் கும்பிடும் துர்கா ஒரு புறம். செக்ஸியாய், சரக்காய் சமூகத்தால் பார்க்கப்படும், சுரண்டப்படும், கடவுளின் பெயராலேயே வன்புணர்வு செய்யப்படும் துர்கா மற்றொரு புறம் எனப் படம் நமக்கு ஒவ்வொரு காட்சியிலும் பல விசயங்களைக் கடத்துகிறது.

படம் பார்க்காமலேயே படத்திற்கு ஏன் இவ்வளவு எதிர்ப்புகளும், மிரட்டல்களும் மத நம்பிக்கை புண்படுகிறது என்கிற சப்பைக் கட்டுகளும் எழுந்தன என்பதைப் படம் பார்க்கும் போதே புரிந்து கொள்ள முடிந்தது. 1 மணிநேரம் 40 நிமிடங்கள் ஓடும் இப்படம் நம்மைப் பற்றியும் சமூகத்தைப் பற்றியும் பல நேரடிக் கேள்விகளைக் காத்திரமாய் முன்வைக்கிறது. நல்ல படங்கள் மிக முக்கியமான சமூக மாற்றத்திற்கான கருவி. ஒரு நல்ல காட்சி ஊடகம் வழியாக பல நல்ல மாற்றங்களைச் சமூகத்தில் கொண்டு வர முடியும் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.

ஜாபர் பனாகி என்கிற மிக முக்கியமான ஈரானிய சினிமா இயக்குனர். அவரின் ஒரு படத்திற்காக வீட்டுக்காவலில் பல வருடங்கள் வைக்கப்பட்டார். வீட்டில் இருந்தபடியே This is not a film என்கிற படத்தை ஒற்றை ஆளாய் அவரையே பிரதானக் கதாப்பாத்திரமாக்கிப் படம் எடுத்தார். கலைஞர்கள் எங்கு எந்தச் சூழலில் இருந்தாலும் இயங்குவார்கள். அதே நேரத்தில் அவர்கள் கொண்டாடப்படவும், காக்கப்படவும் வேண்டும்.

கேரளாவில் சனல் குமார் செக்ஸி துர்கா போஸ்டருடன் வேனில் பல இடங்களுக்குப் பயணித்து ஒரு ஆரோக்கியமான விவாதத்தை, பிரச்சாரத்தை ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறார். அவரைப் பற்றிய இந்தத் தகவல்களை நாம் படிக்கும் நேரத்தில் அவர் ஒரு நெடிய சமூக மாற்றத்திற்கான விவாதத்தைச் செய்துகொண்டு, உருவாக்கிக் கொண்டு இருப்பார். .இது ஏன் கேரளாவில் மட்டும் சாத்தியப்பட்டது என நாம் யோசிக்க வேண்டும்.

படம் என்பது வெறும் திரையில் ஓடும் காட்சிகள் அல்ல. நம் சமூகத்தின் போக்கைத் தீர்மானிக்கும் மிக முக்கியமான கருவி. ஒரு படத்தின் பெயரை வைத்தே நிராகரிப்பது, முத்திரைக் குத்துவது பாசிசத்தின் உச்சம் இல்லையா? மிக மோசமாகப் பெண்களை இழிவு படுத்தும் வார்த்தையால், இரட்டை அர்த்த வசனங்களால் ஏன் படத்தில் தலைப்பு கூட பெண்ணை - பெண்ணின் சுயத்தை மறுப்பதாய் - பாலியல் பிண்டமாய்ச் சித்தரிக்கும் படங்கள் தடையே இல்லாமல் தணிக்கையே இல்லாமல் வரும் போது, இந்தப் படத்திற்கு ஏன் இந்த எதிர்ப்பு? அதுவும் பெண்ணை மையமாய் - பெண்ணின் பிரச்சனையைப் பற்றி அதற்கு முழுப்பொறுபேற்கக் கோரிச் சமூகத்தை நோக்கிக் கேள்வி கேட்கும் ஒரு நல்ல படத்திற்கு ஏன் இவ்வளவு மிரட்டல்?

என்ன அரசியல் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பெரியார் மண் என்று நாம் மார்தட்டும் இவ்வேளையில் தான் நமக்குத் தெரியாமல் அல்லது நம் முன்னேயே நம் ரசனையை மழுங்கடித்து, பெண்களை இழிவு படுத்தும் படங்களைத் தணிக்கை இன்றி வெளியிடுகின்றனர். நாமும் எந்த வித எதிர்ப்பும் காட்டாமல் சினிமா தானே எனக் கடக்கிறோம்.

அரூப துர்காவிற்கு உதட்டு முத்தம்கொடுத்து மத, சாதி, கடவுள் நம்பிக்கையை வாழ வைக்கிறார்கள். பெண் என்பவள் இந்தப் பாசிச மதவாதிகளுக்கு எப்படி இருந்தாலும் சரக்குதான். அதை மழுங்கடிக்கத்தான் ஒரு கலைஞன் மேல் அத்தனை வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். சனல் குமார் சசி தரன் இன்னும் பல துர்காக்கள் பற்றிப் பேசுவார், பேசவேண்டும். நல்ல கலைஞர்களைக் காப்பது நம் சமூகப் பொறுப்பும் கூட.



முனைவர்.பூ.மணிமாறன்

# அறிவின் ஆரம்பம் ஆரம்பப் பள்ளிகள்

குழந்தைகள் மிகவும் வெறுக்கப் படக்கூடிய ஒரு இடம் உள்ளது என்றால் அந்த இடம் பள்ளிக் கூடம்தான். அது போன்று குழந்தைகள் மிகவும் பயப்படக்கூடியதும், வெறுக்கப்படக்கூடியதும் எதுவெனில் அது தேர்வுகள்தான். இவ்வாறாக, குழந்தைகளுக்குப் பிடித்தமில்லாத கல்விமுறைதான் தற்போது நடைமுறையில் உள்ளது.

பள்ளிக்கூடங்களுக்கு நாம் குழந்தைகளை அனுப்புவதை தோழர் லெனின், “சவுக்கால் அடித்து சொர்க்கத்துக்கு அனுப்புகிறோம்” என்று சொல்கிறார். “இக்கல்விமுறை பக்தியையும் மூட நம்பிக்கையையும் போதிப்பதாக உள்ளது. மேலும் கல்வி பெறுவதன் மூலம் பகுத்தறிவும் சுயமரியா தையும் பெறவேண்டும். மாணவப் பருவத்தில் படித்து பரீட்சையில் தேர்ச்சி பெறுவதிலேயே முனைப்புக் காட்ட வேண்டும்” என தோழர் பெரியார் வலியுறுத்துகிறார்.

மேலும் அறிவின் உச்சமாக, கற்றலின் உச்சமாக பகுத்தறிவு நிலையை முழுமையாக எய்த வேண்டும் எனவும் பெரியார் கூறுகிறார். மேலும் மாணவர்கள் அரசியலில் இருந்து விலகி, பொதுக் காரியங்களில் இருந்து விலகி, முழுக் கவனத்தையும் செலுத்தச் சொல்கிறார் பெரியார். நமது குழந்தைகள் ஏன் அவ்விதம் இருக்க வேண்டுமென்றால், பல காலங்களாக கல்வி மறுக்கப்பட்டு, தற்போதுதான் சமூகநீதி மூலம் கல்வி கிடைக்கப் பெற்றுள்ளது. அதனை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும், பயனடைய வேண்டும் என்ற சமூகப் பொறுப்போடு கூறுகிறார் பெரியார்.

போராட்டங்கள் பலகண்டு, பல அரசியல் மாற்றங்கள் மூலமாக கல்வியில் சமூக சமத்துவம் நோக்கி நாம் பயணித்து வருகிறோம். கல்வி குறித்து நாம் பேசும் போது குறிப்பாக இரண்டு விசயங்களைப் பேசியாகவேண்டும். 1. ஆரம்பக்கல்வி, 2. அருகாமைப் பள்ளி ஆகிய இரண்டும் முக்கியமானவை.

ஒரு குழந்தைக்கு ஆரம்பக் கல்வி என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். அதுவும் அரசே தனது குடிமக்களுக்கு வழங்கும் கல்வி மிகவும் சரியானதாக அமையவேண்டும். இந்த இடத்தில் நாம் ஒரு விஷயத்தை கவனத்தில் கொள்ளவேண்டும். அரசு பலவகை இனங்களில் இருந்து, வருவாயினை ஈட்டுகிறது. அதன் வருவாய் மூலம், அதாவது நாம் வாங்கும் அனைத்துப் பொருள்களிலும் வரி விதிக்கப் படுகிறது. அந்த வரியில் கல்விக்கென ஒரு தொகை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அந்தத் தொகையினைக் கண்டிப்பாக அரசானது மக்களுக்குக் கல்வியாகக்

கொடுக்கவேண்டும். அதனை நுகர்வது குடிமக்களின் உரிமையாகும்.

இதனை இந்திய அரசியலமைப்புச் சட்டம் 41-வது பிரிவு மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. இப்படியாக அரசியல் சாசனம் மக்களுக்கு கொடுத்துள்ள உரிமையை முறையாக வழங்காதது மிகப் பெரியகுற்றமே. 'சுதந்திரம்' என்பதை பெற்றதாகச் சொல்லி 71 ஆண்டுகள் ஆகிறது. ஆனால் மாணவர்களின் கற்றல் கற்பித்தலில் பலவேறுபாடுகள் உள்ளன. ஒரே மாதிரியான கல்விமுறை இல்லை இப்படியாக பாரபட்சமான, ஏற்றத்தாழ்வான கல்விமுறையே இங்கு உள்ளது. இந்த நிலையில் 'நிதிஆயோக்' ஒரு அறிவிப்பினை வெளியிடுகிறது.

'நிதிஆயோக்' (NITI-National Institution for Transforming India-Aryog ) என்ற அமைப்பு மத்திய திட்டக் குழுவுக்கு மாற்றாக பி.ஜே.பி.அரசு கொணர்ந் துள்ள ஒரு அமைப்பாகும். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு மாநிலங்களின் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவதற்காக 1950 ஆம் ஆண்டு அன்றைய நேருவின் அரசால் மத்தியத் திட்டக்குழு உருவாக்கப்பட்டது. அதனைக் கலைத்துவிட்டு பி.ஜே.பி.அரசு 'நிதிஆயோக்' என்ற அமைப்பினை ஏற்படுத்தி பிரதமர் நரேந்திரமோடி தலைவராகவும், அதில் 6 உறுப்பினர்களில் 4 பேர் பார்ப்பனர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய பின்னணி கொண்ட நிதிஆயோக் கல்வி தொடர்பான ஒரு அறிவிப்பினை வெளியிடுகிறது. அது என்னவெனில்,

"மாணவர்கள் போதுமான அளவு இல்லாத பள்ளிகள், ஆசிரியர்கள் போதுமான அளவு இல்லாத பள்ளிகள் ஆகியவற்றைக் கண்டறிந்து அவற்றைத் தனியார் வசம் கொடுக்கலாம்" எனப் பரிந்துரைக்கின்றது. அதன் விளைவாக தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறை பின்வரும் உத்தரவை வெளியிட்டுள்ளது.

"மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக உள்ள பள்ளிகளை மூடவேண்டும். மேல்நிலைப் பள்ளி களில் 15 பேருக்குக் குறைவாக இருக்கும் பிரிவை (GROUP) மூடவேண்டும். 30 பேருக்குக் குறைவாக இருக்கும் பிரிவு மாணாக்கர்களை அருகிலுள்ள பள்ளியில் இணைக்க வேண்டும். அந்தப் பிரிவில் பாடம் எடுக்கும் முதுநிலை ஆசிரியர்கள் அப்பள்ளியில் இருக்கும் 9 மற்றும் 10ஆம் வகுப்புகளுக்குச் சென்று பாடம் எடுக்க வேண்டும். அரசுப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை ஆங்கில வழிப்பிரிவில் 15 மாணவர்களுக்கு குறைவாக இருப்பின் அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்க வேண்டும்" .இவ்வாறாகப் பள்ளிக் கல்வித்துறை ஆரசு ஆணை வந்துள்ளது.

இது கல்வி பரவலாக அனைத்துத் தரப்பு மக்களும் பயன்படுத்தப்படவேண்டும் என்ற சமூகநீதியைக் குழிதோண்டிப் புதைக்கும் முயற்சியாகும். இது தற்போது தமிழகத்தில் காவிரி, நியூட்ரினோ, ஸ்டெர்லைட், கூட்டுறவுத் தேர்தல், குட்கா வழக்கு....இப்படியாக நகரும் அரசியல் அரங்கில் மேற்கண்ட ஆணை மிகவும் சத்தமில்லாமல் வெளி வந்துள்ளது. கல்வி, மருத்துவம், உணவு, நீர், இருப்பிடம் ஆகியவை ஒவ்வொரு மனிதரின் அடிப்படை உரிமைகளாகும். மேலும் இவை அத்தியாவசிய உரிமைகளும் ஆகும் .இதனை ஒரு அரசு தனது குடிமக்களுக்கு குறைவின்றிக் கொடுக்க வேண்டும். இது லாபம் ஈட்டும் தொழில்துறை போன்றதல்ல. அறிவுத்துறை என்பது அனைத்துத் துறைகளுக்கும் முன்னோடி யானதுமாகும். மேற்கண்ட அரசு ஆணை மூலம் கீழ்க்கண்ட விளைவுகள் ஏற்படும்.

தமிழ்நாட்டில் 29 ஆயிரம் தொடக்கப் பள்ளிகள் உள்ளன. அவற்றில் மாணவர்கள் இன்மையால் 1000 தொடக்கப் பள்ளிகள் மூடப்படும்.

20 மாணவர்களுக்கு குறைவாக உள்ள பள்ளிகள் எனக் கணக்கிட்டால் 12,000 பள்ளிகள் மூடப்படும் நிலையில் உள்ளது.

தொடக்கப்பள்ளிகளில் 7,500 ஆசிரியர் பணியிடங்கள் இல்லாமல் போகும். இப்போது பணியிலுள்ள ஆசிரியர்களை பணி நிரவல் செய்யப்பட்டாலும் 5000 ஆசிரியர்களின் நிலை கேள்விக் குறியாகும்.

ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரையுள்ள பள்ளிகளும் அல்லது 1 - 8 வகுப்புகள் உள்ள நடுநிலைப் பள்ளிகளும் இணைந்து முதற்கட்டமாக 2018 - 2019 ஆம் கல்வியாண்டில் 1,200 பள்ளிகளை மூட அரசு உத்தேசித்துள்ளது.

ஆரம்பக்கல்வி மூலமாக மாணவர்களின் ஆரம்ப அறிவைப் புகட்டி மிகச் சரியான அறிவு இருப்பினை உறுதிப்படுத்தும் முகாம் ஆரம்பப் பள்ளிக் கூடங்களே. ஒரு காலகட்டத்தில் அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை இடம் கிடைப்பது அரிதாக இருந்தது. ஆனால் இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. அரசுப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை குறைந்திருப்பது உண்மை தான். அதே போல் ஊரகப் பகுதிகளில் உள்ள அரசுத் தொடக்கப் பள்ளிகளில் தங்களது குழந்தைகளைச் சேர்க்க முன்வருவதில்லை. அரசுப் பள்ளிகளுக்கு இப்படி ஒரு நிலைமை ஏற்படுவது நமக்கு மிகவும் வருத்தமான உண்மையாகும்.

அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை குறைவதற்கான காரணம் என்ன? என்பது பற்றி தமிழக அரசு அறிவுப்பூர்வமாக சிந்திக்க வேண்டும். தனியார் பள்ளிகளில் படித்தால் மட்டுமே தரமான கல்வி கிடைக்கும் என்ற மூடநம்பிக்கை விதைக்கப் பட்டது.

மேலும் அரசுப் பள்ளிகளில் போதிய கட்டமைப்பு வசதி ( தூய்மையான கழிவறை உட்பட) இல்லாததும் ஒரு காரணம் ஆகும்.இதன் காரணமாக அனைத்து ஊர்களிலும் ஆங்கில வழிப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. ஆங்கிலம் படித்தால் மட்டுமே அறிவாளியாக முடியும் என்ற தவறான நம்பிக்கை

பெற்றோர் மனதில் விதைக்கப்பட்டது. இத்தகைய முறையில் மாணவர் இருப்பிடத்திற்கே வந்து அழைத்துச் சென்று விடும் பேருந்துகள் என பெற்றோர் ஆங்கிலப் பள்ளிகளை நோக்கி ஆட்டு மந்தையாகச் செல்கின்றனர்.

இவற்றையெல்லாம் தமிழக அரசு கணக்கில் கொள்ளாமல் அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வி முறையைக் கொண்டு வந்தது. அடித்தளத்தை வலிமையானதாக அமைக்காமல் அதன் மேல் தளங்களை அமைத்து என்ன பயன்? அரசுப் பள்ளிகள் அனைத்திலும் கட்டமைப்பு வசதியை மேம்படுத்துவதும், போதிய ஆசிரியர்களை நியமிப்பதும் சாலச் சிறந்ததாகும். இவ்வாறான வழிமுறைகளில்தான் அரசு தரமான கல்வியைத் தரமுடியும் என்ற நம்பிக்கையைப் பெற்றோர்களிடம் ஏற்படுத்த முடியும். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தங்களின் குழந்தைகளை அரசுப் பள்ளிகளில் சேர்ப்பதைக் கட்டாயமாக்க வேண்டும்.

தமிழகத்தில் கிராமங்களில் 48 சதம் தொடக்கப்பள்ளிகளில் 5 வகுப்புகளுக்கு இரு வகுப்பறைகள் மட்டுமே இருப்பதாகவும், இரு ஆசிரியர்கள் மட்டுமே அனைவருக்கும் பாடம் எடுக்க வேண்டிய சூழல் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

7 ஆயிரத்திற்கு மேற்பட்ட அரசுப் பள்ளிகளில் அடிப்படைத் தேவையான கழிப்பறை வசதி செய்து தரப்படவில்லை. மேலும் அரசுப் பள்ளிகளில் மாணவர் விகிதம் 1:24 ஆக குறைந்திருப்பதாகப் பள்ளிக் கல்வித்துறை ஆவணங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

ஆசிரியர்கள் நியமனம்கூட நகர்புறப் பள்ளிகளில்தான் அதிகமாக நியமிக்கப்படுகின்றனர். கிராமப்புறப் பள்ளிகளில் குறைவான ஆசிரியர்களே உள்ளனர். 5 வகுப்புகளுக்கு இரு ஆசிரியர்கள், கழிப்பறை, குடிநீர் வசதியின்மை, போன்ற காரணங்களே பெற்றோர்களைத் தனியார் பள்ளிகளை நோக்கி இட்டுச் செல்கிறது.

இத்தகைய அவலங்களை நீக்காமல், பள்ளிகளை மூடுவது, அதுவும் ஆரம்ப - நடுநிலைப் பள்ளிகளை மூடுவது என்பது அவலமான செயலாகும். பொறுப்பற்ற செயல்பாடாகும். ஆரம்பக்கல்வி என்பது அறிவின் ஆரம்பமாகும். எனவேதான் தோழர் பெரியார் தனது கல்விப் பணியாக தொடக்கப்பள்ளி ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தை முதன் முதலாகத் தொடங்கினார். ஆசிரியர்களை பகுத்தறிவு உள்ளவர்களாக மாற்றிவிட்டால், மாணவர்கள் எளிதில் உரிய சிந்தனை அறிவை பெறுவார்கள் என நம்பினார்.

மேலும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டப்படி 300 குடியிருப்புகளுடைய ஊரில் 1 கிலோ மீட்டர் இடைவெளியில் தொடக்கப் பள்ளியும், 2 கி.மீட்டர் இடைவெளியில் நடுநிலைப்பள்ளியும், 3 கி.மீட்டர் இடைவெளியில் உயர்நிலைப்பள்ளியும், 5 கி.மீட்டர் இடைவெளியில் மேல்நிலைப்பள்ளியும் இருக்க வேண்டும். இவ்வாறாக கட்டாயக் கல்வி உரிமை சட்டம் அருகாமைப் பள்ளிகளை (Neighbor schools) வலியுறுத்துகிறது. அப்போதுதான் மாணவர்கள் சரியானக் நேரக் கட்டுப்பாடுடனும், எளிமையாகப் பயன்படுத்த ஏதுவாக பள்ளிகள் அமையும். கல்வித்தரம் உயரும், கல்வி கற்போர் எண்ணிக்கை கூடும். தூரம் என்பது மாணவர்களைச் சோர் வடையச் செய்யும், கற்றல் குறைபாடு ஏற்படும்.

இத்தகைய பொதுக்கல்வி முறையை அருகாமைப் பள்ளிகளை நடைமுறைப்படுத்த 1966-ஆம் ஆண்டே கோத்தாரிக் கல்விக்குழு பரிந்துரைத்துள்ளது. 1968 ஆம் ஆண்டு இக்கருத்தை - பரிந்துரையை இந்தியக் கல்விக் கொள்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பொதுப்பள்ளிமுறை என்பது குழந்தைகளைப் பாகுபாடில்லாமல் கல்வி வழங்கக்கூடிய முறைமையாகும். அது இன்னும் நடைமுறைப்படுத்தாமலேயே கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதனைக் கல்வியாளர்கள் அனைவரும் வலியுறுத்தியே வருகின்றனர். கல்வி என்ற அடிப்படை உரிமையானது ஆளும் அரசு செயல்படுத்தினால்தான், அதனுடைய ஆளுகைக்குள் இருந்தால்தான் அதற்குரிய உரிமைகளைக் கோரிப் பெறமுடியும். தனியார் வசமானால் நாம் எந்த உரிமைகளும் பெறமுடியாது.

மேலே நாம் குறிப்பிட்டுள்ள கூறுகள் தொடர்ந்தால், அடுத்த சில ஆண்டுகளில் அரசுப் பள்ளிகள் மூடப்பட்டு, தனியார் பள்ளிகள் மட்டுமே ஆதிக்கம் செலுத்தும் நிலை ஏற்படும். இது மிகவும் ஆபத்தான போக்காகும்.

**எனவே மாணவர்கள் எண்ணிக்கையைக் காரணம் காட்டிப் பள்ளிகளை மூடும் எண்ணத்தை அரசு கைவிட வேண்டும். மேலும் அரசுப் பள்ளிகளின் தரத்தை மேம்படுத்துவதன் மூலமும், கட்டமைப்பைச் சீர்திருத்தம் செய்வதன் மூலமும், அரசு ஊழியர்களின் குழந்தைகள் அரசுப் பள்ளிகளில் பயில்வதைக் கட்டாயமாக்குவதும் மட்டுமே அரசுப் பள்ளிகள் மேம்பாடு அடையும். குறிப்பாக தொடக்கப் பள்ளிகள் ஒரு நாட்டின் மூலாதாரமாகும். அவற்றைப் பேணிக் காப்பதும், வளர்த்தெடுப்பதும் நம் முன் உள்ள முக்கியமான கடமையாகும்.**






கணியூர் தமிழ்ச்செல்வன்

# பொதுவுடைமை பரவுவதைத் தடுக்கவே பொதுவுடைமைக் கட்சிகளா ?

பல நேரங்களில் நம்முடைய இந்தியப் பொதுவுடைமைக் கட்சிகளின் செயல்பாடுகளைப் பார்க்கும் போது ஏதோ இந்திய முதலாளிகளால் பணம் கொடுத்து இந்தியாவில் வெகுமக்களிடம் பொதுவுடைமைக் கருத்து பரவுவதைத் தடுக்கவும், எக்காலத்திலும் இந்தியா ஒரு பொதுவுடைமை நாடு ஆகிவிடக்கூடாது என்பதற்காக நடத்தப்படும் கட்சி போலவே தெரிகிறது. இப்போது கர்நாடக சட்டமன்றத் தேர்தலில் நாம் மூழ்கியுள்ளதால், நேற்று மேற்கு வங்கத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல் ரிசல்ட்டை பற்றிய விவாதம் பெருமளவில் இல்லை. ஆனால் மிக கவனிக்கத்தக்க வகையில் அந்த உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் வந்துள்ளன.

மேலோட்டமாகப் பார்க்கும் போது திரிணாமுல் காங்கிரஸ் மிகப்பெரிய வெற்றி பெற்றிந்தாலும், அதற்கு அடுத்து பி.ஜே.பி இருப்பதும், மூன்றாம் இடத்திற்கு சி.பி.எம். வந்துள்ளதும் மிகப்பெரிய எச்சரிக்கையாகும்.

வெற்றி எண்ணிக்கை அடிப்படையில் திரிணாமுல் காங்கிரஸ்க்கும், பி.ஜே.பி.க்கும் மிகப்பெரிய இடைவெளி இருந்தாலும், அதேபோல் பி.ஜே.பி.க்கும், சி.பி.எம் முக்கும் பெரிய இடைவெளி உள்ளது. வரப்போகும் மேற்கு வங்க சட்டமன்றத் தேர்தலில் கூட பி.ஜே.பி சி.பி.எம். மைவிட அதிக இடங்கள் பெற்று ஒரு எதிர்க்கட்சியாக வருவதற்கான வாய்ப்புகள் தெளிவாக உள்ளன. இதேபோல் கேரளாவிலும் பி.ஜே.பி நன்கு வளர்ந்து வருகிறது .

பி.ஜே.பி காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் எப்படி வளர்ந்து வந்ததோ அதேபோல் இந்தியப் பொதுவுடைமைக் கட்சிகள் ஆளும் மாநிலங்களிலும் வளர்த்து வருகிறது. அது அந்த மாநில மக்களிடம் உள்ள மிக மோசமான சமூகஅநீதிக் கருத்துக்களின் சாட்சியே. அதற்கு மிகப்பெரிய பொறுப்பை பொதுவுடைமைக் கட்சிகள் ஏற்க வேண்டும்.

திராவிடர் இயக்கங்களின் இந்துக் கடவுள் - அமைப்பு முறை பற்றிய விமர்சனங்களை மக்களுக்கு ஒவ்வாத நாத்திகம், வறட்டு நாத்திகம் என்றும், பார்ப்பனர் எதிப்புக் கருத்தியலை மாற்றிக் கொள்ளவேண்டும் என்றும் நீட்டி முழக்குகிற இந்தியப் பொதுவுடைமைவாதிகளின் செயற்பாடுகள் எல்லாமே தற்போது பி.ஜே.பிக்கு அரசியல் ரீதியாக வால் பிடிப்பது போலவே அமைந்துள்ளது.

நாம் மீண்டும் மீண்டும் சொல்கிறோம். இந்தியாவில் பார்ப்பனியத்தை மறைமுகமாகக் கூட விமர்சிக்காத எந்த ஒரு கருத்தியலாலும் - கட்சியாலும் எந்தஒரு காலத்திலும் மிகப்பெரும் பான்மையான இந்திய மக்களுக்கு (திராவிடர்) - அவர்களின் சமூக சமத்துவ வாழ்விற்குச் சிறு விடுதலையைக் கூடப் பெற்றுத்தர முடியாது.

சரி, நூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்து மதத்தில், வர்ணாசிரமதர்மத்தில் பற்றுக்கொண்ட காந்தியார் அவர்கள் கூறிய தீண்டாமை ஒழிப்பை ஏதோ ஒரு பெரிய புதிய கருத்தியல் போலத் தீண்டாமை ஒழிப்பு முன்னணி (அதாவது சாதி ஒழிப்பு என்று கூடப் பெயரிடாத) என்று சொல்லி சமூகப் புரட்சி செய்பவர்களிடம் நாம் என்ன எதிர்பார்ப்பது?



விமல் பிரகாஷ்,
கோவை அரசுக் கலைக்கல்லூரி

# துப்பாக்கிச் சூடுகள் தொடரும்

தோழர் பெரியார் இந்திய விடுதலையைப் பார்ப்பன - பனியாக்களின் ஒப்பந்த முறை என்று கூறினார். “வெள்ளத்துரைமார் ஆதிக்கஞ்செலுத்திய இடங்களை கறுப்புத் துரைமார் பிடித்துக் கொண்டு, ஆதிக்கஞ் செலுத்துவார்கள், பிற நாட்டார் சுரண்டியதற்கு பதில் நம் நாட்டவர் சுரண்டுவர்” என்று மதிப்பீடு செய்தார். இதுதான் இன்று எதார்த்த உண்மை.

ஸ்டெர்லைட் இன்டஸ்ட்ரிஸ் - அனில் அகர்வால் (பனியா) என்றவரால் நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிறுவனம் மட்டுமல்ல இந்தியாவில் பெருமளவு நிறுவனங்கள் பார்ப்பன - பனியாக் கும்பல்களால் தான் நடத்தப்பட்டு வருகின்றன. கார்ப்பரேட் நிறுவனங்கள் பெருமளவு இவர்களின் கட்டுப்பாட்டில் தான் உள்ளன. இது ஏதோ எதேச்சையான நிகழ்வு அல்ல. இது காலம் காலமாக இருந்துவரும் பார்ப்பனிய உற்பத்தி முறையே ஆகும். இந்த உற்பத்தி முறை வெறும் பிறப்பின் அடிப்படையிலேயே மட்டுமே நடந்து வருகின்றன.

பிராமணனின் வேலை ஓதுதலும் ஓது வித்தலும், சத்திரியனின் வேலை அரசனாக ஆட்சி செய்வதும், வைஷியனின் வேலை வணிகம் செய்வதும், சூத்திரனின் வேலை மேற்கண்ட மூன்று வர்ணங்களுக்கு சேவை செய்வதும் என்கின்ற சாதியப் படிநிலை அமைப்பை ஏற்படுத்தி, இன்று வரை பார்ப்பனர்கள் தனது சுக போக வாழ்க்கையை வாழ்ந்துவருகின்றனர். சூத்திரர்கள் இன்றும் சுரண்டப்படும் மக்களாகவே இருந்துவருகின்றனர். பார்ப்பனர்கள் மனுதர்மம் போன்ற சட்டங்களை உண்டாக்கி தங்களின் மேலாதிக்கத்தை நிலை நாட்டிக்கொண்டனர். இன்றும் அதே நிலை தான் தொடர்கின்றன.

“பொறாமையின்றி மூன்று வருணத்தாருக்கும் பணிவிடை செய்தலே சூத்திரனுக்குத் தொழில் என்று கடவுள் கட்டளையிட்டிருக்கிறார்”. என்கின்றது மனு.

“தர்மேண்லப் துமீஹேத,
லப்தம்யத்நேன பாலயேத்;
பாலிதம் வர்த்தயேந் நித்யம்
வருத்தம் பாத்ரேஷு நிக்ஷிபேத்”
(யாக்ஞவல்கியர்)

இதன் பொருள்: தருமமுறைப்படி (தன் குலத்திற்குரிய நெறிப்படியே) பொருளை ஈட்டுக. ஈட்டியதைக் காத்து மேன்மேலும் பெருக்குக. அங்ஙனம் பெருக்கிய பொருளைப் பிராமணனுக்குக் கொடுத்துவிடுக.

கஷ்டப்பட்டு பாடுபட்டு உழைத்த பணத்தைச் சடங்குகளின் பெயராலும், கடவுள்களின் பெயராலும் பார்ப்பனர்கள் நம்மைச் சுரண்டுகின்றனர். இப்படிப்பட்ட இந்தப் பார்ப்பனிய உற்பத்தி முறையையும், சுரண்டல் முறையையும் ஒழித்துக் கட்டியாக வேண்டும். வெறும் பிறப்பின் அடிப் படையில் பிறவி அந்தஸ்த்துக்காரர்களாக வாழும் பார்ப்பனர்களும் பனியாக்கும்பல்களும் (வைஷியர்). பொருளாதாரத்தைத் தங்களின் கட்டுப்பாட்டி லேயே வைத்துக் கொண்டு பாடுபடும் மக்களைச் சுரண்டிவருகின்றனர். பல வணிக நிறுவனங்களும் இவர்களின் கட்டுப்பாட்டில் தான் உள்ளன. அதை 2009 ஆம் ஆண்டு வெளிவந்த ஒரு புள்ளி விவரத்தின் மூலம் காணலாம்.

### வணிக நிறுவனங்கள்

* ஏ.சி.சி பார்ப்பனரால் நடத்தப்படுகிறது (சுமித் பானர்ஜி),
* பெல் நிறுவனம் பார்ப்பனரால் நடத்தப்படுகிறது (ரவிக்குமார் கிருணணசாமி),
* பார்தி ஏர்டெல் பனியாவால் நடத்தப்படுகிறது (சுனில் மித்தல்),
* கிராசிம் மற்றும் ஹிண்டால்கோ பனியாவால் நடத்தப்படுகிறது (குமார் மங்கலம் பிர்லா),
* ஹெச்.டி.எஃப்.சி பனியாவால் நடத்தப்படுகிறது (தீபக் பரேக்),

* ஹிந்துஸ்தான் யூனிலீவர் லிமிடெட் பார்ப்பனரால் நடத்தப்படுகிறது (நிதின் பராஞ்பே),
* ஐ.சி.ஐ.சி.ஐ பார்ப்பனரின் தலைமையில் நடத்தப்படுகிறது (கே.வி காமத்),
* ஜெயபிரகாஷ் அசோசியேட்ஸ் பார்ப்பனரால் நடத்தப்படுகிறது (யோகேஸ் கௌர்),
* லார்சன் அன்ட் டூப்ரோ பார்ப்பனரால் நடத்தப்படுகிறது (ஏ.எம் நாயக்),
* என்.டி.பி.சி பார்ப்பனரால் நடத்தப்படுகிறது (ஆர்.எஸ். சர்மா),
* ஓ.என்.ஜி.சி பார்ப்பனரால் நடத்தப்படுகிறது (ஆர்.எஸ் சர்மா),
* ரிலையன்ஸ் குழு நிறுவனம் பனியாவால் நடத்தப்படுகிறது (முகேஸ் மற்றும் அனில் அம்பானி),
* ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா பார்ப்பனரால் நடத்தப்படுகிறது (ஓ.பி பாட்),
* ஸ்டெர்லைட் பனியாவால் நடத்தப்படுகிறது (அனில் அஹர்வால்),
* சன் பார்மா பனியாவால் நடத்தப்படுகிறது (திலிப் சங்வி) ,
* டாட்டா ஸ்டீல் பார்ப்பனரால் நடத்தப்படுகிறது (முத்துராமன்),
* பஞ்சாப் நேசனல் வங்கி பார்ப்பனரால் நடத்தப்படுகிறது (கே.சி சக்கரவர்த்தி),
* பேங்க் ஆஃப் பரோடா பார்ப்பனரால் நடத்தப்படுகிறது (எம்.டி மல்யா),
* கனரா வங்கி பனியாவால் நடத்தப்படுகிறது (ஏ.சி மஹாஜன்),

**இந்தியாவின் மென்பொருள்- தொலைபேசி நிறுவனங்கள்**

* இன்ஃபோசிஸ் பார்ப்பனரால் நடத்தப்படுகிறது (கிரிஸ் கோபாலகிருஸ்ணன் மற்றும் நாராயண மூர்த்தி மற்றும் நந்தன் நிலெக்கணி),
* டாடா கன்ஸல்டன்ஸி சர்வீஸஸ் பார்ப்பனரால் நடத்தப்படுகிறது
* ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் (அம்பானி),
* ஏர்டெல் (மித்தல்),
* வோடபோன் (எஸ் ஸார் ருயா),
* ஐடியா (பிர்லா),
* ஸ்பைஸ் (மோடி) ஆகிய நிறுவனங்கள் பனியாக்களுக்குச் சொந்தமானவை.
* கிங் ஃபிசர் பார்ப்பனரால் நடத்தப்படுகிறது (விஜய் மல்லையா),
* ஜெட் ஏர்வேஸ் பனியாவால் நடத்தப்படுகிறது (நரேஷ் கோயல்),
* இந்தியன் கிரிக்கெட் பனியாவால் நடத்தப்பட்டு வருகிறது. (லலித் மோடி) அவருக்கு முன்னாள் அது மற்றொரு பனியாவால் நடத்தப்பட்டது (ஜக்மோகன் டால்மியா),

*https://www.livemint.com/Leisure/3u2QUPuXBEFPaBQXU2R8mJ/When-will-the-BrahminBania-hegemony-end.html*

**மனுசாஸ்திரக் காலம் தொடர்கிறது**

“பார்ப்பனருக்கு வசதியான, பொது நலத்துக்குக் கேடான, நீதிக்குக் கேடான குற்றமான காரியங்கள் நிறைந்த, தர்மங்கள் கொண்ட நூல், எப்படி மத (மநு) தர்மமாக இருக்கிறதோ, அதுபோல் சமுதாயக் கேடானதும், பார்ப்பனருக்குக் கேடாயிருந்தால் ஆட்சியையே பாழ் பண்ணக் கூடியதுமான தன்மைகள் நிறைந்ததே அரசியல் (சட்ட) தர்மமாக இன்று விளங்குகிறது. ஒன்று பார்ப்பனர், இல்லாவிட்டால் தமிழர் அல்லாதவர், இல்லாவிட்டால் பார்ப்பன தாசர் தவிர, வேறு யாரும் பதவிக்கு வரமுடியாததான தன்மையில் அரசியல் சட்டம், நடவடிக்கை இருப்பதால், என்றென்றும் திருத்த முடியாத தன்மையில் ‘ஜனநாயக ஆட்சி தர்மம்’ இருந்து வருகிறது.

இவற்றிற்கு ஒரு பரிகாரம் வேண்டுமானால், ‘ஜனநாயகம்’ ஒழிக்கப்பட்டு, ‘அரச நாயகம்’ ஏற்பட வேண்டும். அது எளிதில் முடியாத காரிய மானால், தமிழ்நாடு தனி முழுச்சுதந்திரமுள்ள நாடாக ஆக்கப்பட வேண்டும். அது முடிய வில்லையானால், இந்தியா அன்னியனுடைய ஆட்சிக்கு வர வேண்டும். இந்தியாவானது ‘இந்தியர்கள்’ ஆட்சி புரிகிறவரை, மேல்கண்ட மாதிரியான மநு தர்மம் தான் ஆட்சி தர்மமாக இருக்க முடியும். ஆதலால் மக்கள் மனிததர்ம ஆட்சியில் இருக்க வேண்டுமானால், இந்தியாவுக்கு அன்னிய ஆட்சிதான் தகுதி உடையதாகும்.”

*- தோழர் பெரியார் ‘விடுதலை’ 28.12.1968*

*பார்ப்பனர்கள் எல்லா உரிமையையும் தன்வசப் படுத்திக்கொண்டு, சில உரிமைகளை சத்திரியர்களுக்கும் அதைவிடக் குறைவான உரிமை வைஷியனுக்கும் வழங்கினர். சூத்திரர்களுக்கு எந்த விதமான உரிமையும் வழங்கவில்லை. பார்ப்பனர்களை எதிர்த்து ஏதேனும் உரிமை பெற நினைத்தால் அக்கணமே சூத்திரர்களுக்குக் கொலை முதலியன தண்டனைகள் விதிக்கப்படும் என்கின்ற மனு சாஸ்திரக் காலத்து நிலை இன்றும் மாறவில்லை.*

*சூத்திரன் குற்றம் செய்தால் மரண தண்டனையும் பார்ப்பான் கொலை செய்தால் அவனின் தலை முடியை மட்டும் வெட்டினால் போதுமானது என்கிறது மனுச்சட்டம். பார்ப்பன எஸ்.வி சேகர் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காத அரசு. சூத்திரர்கள் உரிமைக்காகவும் தங்கள் நலனுக்காகவும் போராடும் போது பார பட்சம் இல்லாமல் சுட்டுக்கொல்லப் படுகின்றனர். பார்ப்பனர்களும் பார்ப்பன தாசர்களும் இருக்கின்ற வரையில் மனுசாஸ்திர ஆட்சிதான் நடக்கும். எனவே இன்றைய ஆட்சி முறையும் இன்றைய சமூக அமைப்பு முறையும் ஒழியவேண்டும் வேண்டும்.*

**பார்ப்பன - பனியாக்களின் மேலாதிக்கங்கள் இருக்கும் வரை, பார்ப்பனிய நலனுக்கான அரசுகள் இருக்கும் வரை, பார்ப்பனிய சாதிய முறையைப் பின்பற்றும் மக்கள் இருக்கும் வரை, பார்ப்பனிய மனநிலை இருக்கும் வரை, பார்ப்பனியச் சிந்தனை இம்மண்ணில் இருக்கும் வரை, இவற்றைக் காக்கும் கடவுள், மதம், சாஸ்திரம் இருக்கும் வரை - சூத்திரர்களின் உயிர் பார்ப்பனர்களின் தலை மயிருக்கு ஒப்பாகும். சூத்திரனுக்கு நீதி என்பது கேள்விக்குறியாகும்.**

சி.இராவணன்

# நூல் அறிமுகம்

"மாட்டுக்கறி அரசியலும் மக்கள் மன்ற வழக்கும்" என்ற தலைப்பில் தமிழக மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் தோழர் கே.எம் செரீப் அவர்கள் பல்வேறு செய்திகளைத் தொகுத்து நூலாகக் கொண்டுவந்துள்ளார். அழகிய அட்டை வடிவமைப்புடன் பல்வேறு வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கி இன்றைய காலச் சூழலில் ஆதிக்கவாதிகள் உணவை வைத்து எப்படி வெறுப்பரசியலை வளர்க்கிறார்கள் என்பதைத் தெளிவாக விளக்குகிறார்.

பொதுவாக சமூக, அரசியல் விடுதலைக்குப் போராடுபவர்கள் தங்களின் இறுதி நம்பிக்கையாகக் கருதுவது நீதித்துறையைத் தான். ஆனால் தோழர் கே.எம். செரீப் அவர்கள் நீதித்துறையை நம்பாமல் மக்கள் மன்றத்தில் தனது வழக்கைத் தொடுக்கிறார். ஏனென்றால் நீதித்துறை ஆதிக்கவாதிகளின் கைம்பொம்மையாக மாறிவிட்டது என்பதால்தான்.

இந்தியத் துணைக் கண்டத்தில் உச்சபதவிகளில் இருப்பவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டால் உங்களுக்கு ஓய்வு பெற்ற பிறகும் பதவிகள் வந்து குவியும். அவர்களுக்கு எதிராகச் செயல்பட்டால் மர்ம மரணங்கள் தொடரும். இந்த நாட்டு நீதிபதிகளுக்கே இந்த நிலை என்றால் சாமானிய மக்களின் நிலை என்னவென்று சொல்வது? இதனால்தான் பெரியார் உச்ச நீதி மன்றத்தை உச்சிக்குடுமி மன்றம் என்றார். இன்று ஒரு நீதிபதிக்கு எதிராக நான்கு நீதிபதிகள் பத்திரிகையாளர்களைச் சந்தித்து குற்றம் சாட்டும் அளவில்தான் நமது நீதித்துறை இருக்கிறது. நீதித்துறை மட்டுமல்ல இந்தியாவின் அனைத்துப் பதவிகளும் ஆரிய ஆதிக்கத்தை நிலை நிறுத்தத் துடிக்கும் ஆர்.எஸ்.எஸ் கும்பல்களால் நிரப்பப் படுகிறது. ஜனாதிபதி முதல் தாசில்தார் வரை தங்களுக்குச் சாதகமானவர்களைக் கொண்டு அதிகாரத்தை வளைக்கிறார்கள். இதனால்தான் தோழர் செரீப் அவர்கள் மக்கள் மன்றத்தை நாடுகிறார்.

**மாட்டுக்கறியும் பார்ப்பனர்களும்**

கோமாதா எங்கள் குலமாதா என்று பாட்டு பாடும் பார்ப்பனர்களும் அவர்களின் அடிமைகளும் பசுவின் புனிதம் காப்பாற்றப்பட வேண்டும் என்றும் பசு இந்துக்களின் புனித விலங்கு என்றும் (எருமை அல்ல) பரப்புரை செய்து பசுமடங்களை ஏற்படுத்தி காப்பதாக நடிக்கிறார்கள். உண்மையில் இவர்கள் மாட்டுக்கறி உண்ணாதவர்களா?

இந்த நூலின் 15 ஆம் பக்கத்தில் இறந்தவர் களுக்கு எப்படி திவசம் செய்ய வேண்டும் என்று மனு கூறியுள்ளதை நூலாசிரியர் எடுத்துக் காட்டுகிறார். சொர்க்கத்தில் எந்த எந்தக் கறியால் திவசம் செய்தால் எவ்வளவு நாள் உயிர் வாழலாம் என மனு வரிசைப் படுத்துகிறார். அதில் முக்கியமாக "சிவந்த மாட்டின் கறியால் திவசம் செய்தால் அவன் சொர்க்கத்தில் இருக்கும் நாள்வரையிலும் திருப்தியடைவார்கள்" என்று ஆதாரம் காட்டுகிறார். அது மட்டுமல்ல ஆரியர்களின் புனித நூலான ரிக் வேதத்திலும், தைத்ரிய பிராமணம் என்றும் நூலிலும் மாட்டுக்கறி சாப்பிட்டதற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளதை எடுத்துக்காட்டுகிறார்.




புத்த சமண மதங்களின் எழுச்சியால் யாகத்தில் உயிர்கள் பலியிடுவதை ஆரியரல்லாத மக்கள் எதிர்க்க ஆரம்பித்தனர். மக்களிடம் உயிர்ப்பலிக்கு எதிரான சிந்தனை இருந்ததால் அந்தக் கருத்தைத் தங்களுடையதாக மாற்றி தங்களை உயர்குடியாக மாற்றிக் கொண்டனர். இன்றைக்கும் இவர்களால் 'இந்து' சொல்லப்படும் அப்பாவி பிற்படுத்தப்பட்ட மக்கள் தங்கள் விவசாயத்திற்குப் பயன்படாத

மாடுகளை விற்கின்றனர். அதை வாங்கும் வியாபாரிகளிடம் சண்டை போடுகின்றனர் இந்து முன்னணி மற்றும் பஜ்ரங்தள் குண்டர்கள். ஆனால் இந்த நாட்டின் மிகப் பெரிய மாட்டுக்கறி ஏற்றுமதி நிறுவனமாகச் செயல்படுபவைகளில் முக்கியமான நிறுவனங்கள் அனைத்தும் பார்ப்பன பனியாக்களுக்குச் சொந்தமானது. ஆனால் அவர்களின் நிறுவனப் பெயர் இஸ்லாமியப் பெயராக இருக்கும். என்றைக்காவது இவர்கள் அந்த நிறுவனங்களுக்கு எதிராகப் போராடியிருக்கிறார்களா?

பசுப் பாதுகாவலர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் இவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் தான் இந்தியா மாட்டுக்கறி ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கிறது என்பதை நூலாசிரியர் ஆதாரத்துடன் விளக்குகிறார். இந்த நூலின் 5 ஆம் பக்கத்தில் "கடந்த 2007 - 08 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் 3,533 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்தது. இந்த பசுப்புனிதர்கள் ஆட்சியில் 2015-16 ஆண்டுகளில் 26,682 கோடிக்கு வர்த்தகம் உயர்ந்துள்ளது." என ஆதாரத்துடன் விளக்குகிறார்.

### மாட்டுக்கறி அரசியல்

மாட்டுக் கறிக்கு எதிராக இவர்கள் ஏதோ இன்று ஆட்சிக்கு வந்தவுடன் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆட்டம் போடுகிறார்கள் என்று அல்ல. இவர்கள் இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து மட்டுமல்ல அதற்கு முன்பும் தங்கள் சமூக ஆதிக்கத்தை தக்க வைக்க மனித உணவில் மதத்தைத் திணித்து சமூகத்தைக் கூறுபோடுகிறார்கள் என்பதை நூலாசிரியர் வரலாற்று ஆதாரங்களுடன் விளக்குகிறார்.

1954 ஆம் ஆண்டுகளிலேயே இவர்கள் தங்கள் சதியைத் துவக்கி விட்டனர். காங்கிரஸில் உள்ள பார்ப்பனர்களைப் பயன்படுத்தி பசுவதைக்கு எதிராக சட்டம் செய்ய முயற்சித்தனர். காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தங்களுடைய ஜாதி ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயற்சித்தனர். ஆனால் நேரு அதற்கு சம்மதிக்க வில்லை என்பதை இந்தப் புத்தகத்தின் 9 ஆம் பக்கத்தில் "இந்து சனாதன வாதிகள் என்னை சிந்திக்க அனுமதிக்க மறுக்கின்றனர். இதை என்னால் ஏற்றுக் கொள்ள இயலாது" என்று ஜனாதிபதிக்கு தனது ராஜினாமாக் கடிதத்தை அளித்துவிட்டு கூறிய வார்த்தையைப் பதிவு செய்கிறார்.

மேலும் 1966 ஆம் ஆண்டு அன்றைய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்த காமராஜர் பசுவதைத் தடை சட்டத்திற்கு எதிராகக் கருத்துச் சொன்னதற்காக அவர் தங்கியிருந்த தமிழ்நாடு இல்லத்தில் அவரைக் கொலை செய்யும் நோக்கத்தோடு சாதுக்கள் என்ற பெயரில் இந்துமதக் குண்டர்கள் அவர் இல்லத்தில் புகுந்து தாக்க முயற்சித்தனர். அவர் வீட்டுக்குத் தீயிட்டனர். அன்று முதல் இன்றுவரை தங்களுக்கு எதிரானவர்களைக் கொல்வதில் இவர்கள் பலே கில்லாடிகள். மாட்டுக்கறி வைத்திருந்ததாகச் சொல்லி உத்திரப் பிரதேசத்தில் ஒரு முதியவரை அடித்துக் கொன்றனர். சில ஆண்டுகளுக்கு முன்பு செத்த மாட்டின் தோலை உரித்ததற்காக 5 தாழ்த்தப்பட்ட இளைஞர்களை அடித்துக் கொன்றனர்.

### இவர்களின் நோக்கம் என்ன?

மாட்டுக்கறி ஏற்றுமதி நிறுவனத்திற்கு எதிராக எதுவுமே பேசாத இவர்கள் உழைக்கும் மக்களின் உணவில் மதத்தைக் கலந்து அரசியல் செய்வது ஏன்? இந்தக் கேள்விக்கு விடை தேடினால் இவர்களின் நோக்கம் உழைக்கும் மக்கள் ஆரோக்கியமாக வாழக்கூடாது என்பதுதான். அசைவ உணவுகளிலே அதிக புரோட்டின் உள்ள கறியாக மாட்டுக்கறி உள்ளது. மேலை நாடுகளில் அனைவரும் அதைத்தான் உண்ணுகிறார்கள். அவர்கள்தான் அறிவியல் கண்டுபிடிப்பு முதல் விளையாட்டு வரை அனைத்திலும் முதன்மையாக இருக்கிறார்கள். ரியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் பெற்ற பிவி சிந்து அவர்களின் பயிற்சியாளர் கோபி சந்த் (முன்னாள் பேட்மிட்டன் வீரர்) அவர்கள் ஒரு பேட்டியில் "இறைச்சியைத் தவிர்க்கச் சொல்லும் இந்திய உணவுப் பழக்கம் விளையாட்டு வீரர்களுக்கு உகந்ததல்ல" என்று கூறியுள்ளார். எனவே இந்தியா உலக அரங்கில் முன்னேற வேண்டுமென்றால் அதிக கலோரி உள்ள மாட்டிறைச்சியை மக்கள் உணவாக மாற்ற வேண்டும்.

### நாம் என்ன செய்ய வேண்டும்?

பார்ப்பனர்கள் எப்பொழுதும் தங்கள் பிரச்சனையைச் சமூகப் பிரச்சனையாக மாற்றி ஒட்டுமொத்த மக்களையும் பேச வைப்பார்கள். தங்களுடைய சைவ உணவை இந்தியாவின் உணவாக மாற்ற நினைக்கிறார்கள். குஜராத்தில் பொது உணவு விடுதிகளில் ஆட்டுக்கறி உள்பட எந்த அசைவ உணவும் கிடைக்காது. அதை இந்தியா முழுமைக்கும் நடைமுறைப்படுத்த முனைகிறார்கள். அதற்கு மோடி ஆட்சி அவர்களுக்குத் தைரியத்தை வழங்கியுள்ளது. இதற்கு எதிராக முற்போக்காளர்களாகிய நாம் என்ன செய்யப் போகிறோம். மேடைகளில் மாட்டிறைச்சிக்கு ஆதரவாகப் பேசும் எத்தனை தோழர்களின் வீடுகளில் மாட்டிறைச்சி சமைக்கின்றோம்?

தமிழகத்தில் பெரியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சுயமரியாதை மாநாடுகளில் மாட்டுக் கறி உணவு பறிமாறப்பட்டது. இன்றைக்கும் பெரியாரியக்க மாநாடுகளில் மாட்டிறைச்சி உணவு உண்பதை ஒரு கலக நிகழ்வாக நடத்திக் கொண்டிருக்கின்றனர். ஆனால் மற்ற முற்போக்கு பேசுபவர்களிடையே இந்தப் பழக்கம் மிகக் குறைவாக உள்ளது. எனவே ஆரிய ஆதிக்கத்தை எதிர்க்கும் அனைவரும் தங்கள் இல்லங்களில் மாட்டிறைச்சி சமைத்து உண்ண ஆரம்பித்தால், இது மக்கள் உணவாக மாறும். அப்போது ஆரிய ஆதிக்கம் நடுநடுங்கும்.

வெளியீடு: தமிழக மக்கள் ஜனநாயகக் கட்சி,
100, ஆதித்தனார் சாலை, புதுப்பேட்டை, சென்னை-2

அதி அசுரன்

# பெரியார் பார்வையில் அரசியல்



**"அரசியல் கட்சிகளை நம்ப வேண்டாம். தேர்தல் அரசியல் நமக்குத் தீர்வு அல்ல. தேர்தலில் நிற்காத இயக்க அரசியலே அவசியம்", "சமுதாய விடுதலைக்கு சமுதாய இயக்கங்கள் தான் தேவை, அரசியல் கட்சிகள் தேவையில்லை" "ஓட்டுப்போடாதே புரட்சி செய்"**

என்பது போன்ற வாதங்கள் சில சிறுசிறு அமைப்புகளால் பரப்பப்படுகின்றன. அந்த வாதங்கள் அனைத்தும் பரப்பப்பட வேண்டியவை தான். ஆனால், இதுபோன்ற வாதங்களுக்கு நெருக்கமாகத் தோழர் பெரியார் பேசியவைகளைக் காண்போம்.

"பல மதமாய், பல ஜாதியாய், பல வகுப்பாய், பல லட்சியமாய்ப் பிரிந்து சராசரி 100 க்கு 10 பேருக்குக் கூடக் கல்வியறிவில்லாமல் இருக்கும் இந்தியா வுக்கு, இன்று ஜனநாயக ஆட்சி என்பது சிறிதும் பயன்படாது"

"ஒரு வருஷத்திற்கு முன் இந்திய சட்டசபையில் நிறைவேறின பாலிய விவாகத்தடுப்புச் சட்டமானது ஜனநாயகத்தால் நிறைவேற்றப்பட முடியாமல், தனி நாயகத்துவத்தின் உதவியாலேயே நிறைவேற்றப் பட்டது."

"லெனின் ஆட்சியோ, கமால்பாஷா ஆட்சியோதான் மனிதத் தர்ம – மனித நாயக ஆட்சியாக இருக்க முடியுமே அல்லாமல் மற்றபடி எந்தச் சீர்திருத்தம் கொடுத்து, எந்த ஜனநாயக ஆட்சி கொடுத்து, அதை எந்த மகாத்மா ஒப்புக்கொண்டு அதை எந்த வெள்ளைப் பார்ப்பானோ, கருப்புப் பார்ப்பானோ மொட்டைப் பார்ப்பானோ மனப்பூர்வமாய் ஒப்புக் கொண்டு நடத்திக் கொடுப்பதாயிருந்தாலும் அது ஒரு நாளும் மனித தர்ம ஆட்சி யாயிருக்க முடியவே முடியாது என்று உறுதியாய்ச் சொல்லுவோம்.

*- குடி அரசு - 08.02.1931*

இவை போல, ஜனநாயகத்தைப் பற்றியும், தேர்தல் அரசியலைப் பற்றியும் மிகக்கடுமையான வாதங்களை எழுதியுள்ள பெரியார், இவற்றுக்கு மாற்றாக, லெனின், கமால் பாட்சா போன்ற தலைவர்களின் சர்வாதிகாரப் புரட்சியை முன்வைக்கிறார். பல நேரங்களில் தனித் தமிழ்நாடு, தனித் திராவிடநாடு, திராவிடஸ்தான், ப்ரிட்டிஷ் அரசுக்கு நேரடியாகக் கட்டுப்பட்டு, இந்தியா விலிருந்து மட்டும் விடுதலைபெற்ற தனிநாடு, அகில இந்திய அளவிலான திராவிடநாடு எனப் பல நிலைப்பாடுகளை எடுத்துள்ளார்.

இவை மட்டுமல்லாமல், இன்னும் பல கொள்கைகளைத் தனது சுயமரியாதை இயக்கத்தின் இலட்சியங்களாக வரையறுத்து அறிவித்திருக்கிறார். இக்கருத்துக்களை முன்வைத்து, பெரியார் தேர்தல் அரசியலே கூடாது என்றார் என்றும், யாரும் அதிகாரங்கள் அற்ற அரசியல் கட்சிகளைநம்ப வேண்டாம் என்றும் ஒரு பரப்புரை நடந்து வருகிறது.

சமுதாயம் பெற்ற பிள்ளைகள் தான் அரசியலும், பொருளாதாரமும் என்றும், "ஜன நாயகம் ஒரு முட்டாள்தனம்" என்றும் கூறினார் பெரியார். இந்தக் கருத்துக்களை முன் வைத்துத்தான் இப்போது பரப்புரை நடக்கிறது. பெரியாரின் எழுத்துக்களை வெட்டி, ஒட்டிப் பேசும் பலரைப் பார்த்திருப்போம். இப்போது, வெட்டி, ஒட்டுவ தோடு நிற்காமல் பெரியாரைப் புகழ்ந்து கொண்டும், நாங்களும் பெரியாரிஸ்ட்டுகள் தான் என்று வாயளவில் கூறிக்கொண்டும் பெரியாரியலை அழிக்க ஒரு கூட்டம் புறப்பட்டுள்ளது. அக் கூட்டத்தின் தவறான வாதங்களுக்கு பதில் தான் இக்கட்டுரை.

*ஜனநாயகம், தேர்தல் அரசியல் இவற்றைப் பற்றிக் கடும் எதிர்க்கருத்துக்களைக் கொண்டிருந்த பெரியார், அதே ஜனநாயகத்தையும், தேர்தல் அரசியலையும் எவ்வாறு கையாண்டார், எப்படி அணுகினார் என்பதை விரிவாகப் பார்ப்போம்.*

**நமக்கென்று தனி அரசியல் கட்சி வேண்டும்: பெரியார்**

*பெரியார், தனது சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஜஸ்டிஸ் கட்சியை நம்பி இருந்தார். அவர்களை வேலை வாங்கினார். 1928 இல் அக்கட்சியை முழுமையாக நம்ப முடியாது என்று கருதி, தனியாக அரசியல் கட்சி தொடங்க வேண்டும் என்றும் எண்ணினார். அதை அவரது வரிகளிலேயே படிப்போம்.*

> "அநேக விஷயங்களில் சுயமரியாதைக்கு விரோதமாக எவ்வளவோ கொடுமைகள் சட்டத்தில் இருக்கின்றன. இவைகளை எல்லாம் சட்டசபைகள் மூலம் மாற்றி னாலன்றி நமது லட்சியம் நிறைவேற்றுவதற்கு மார்க்க மில்லை என்றே சொல்லுவோம். சட்டத்தினால் தடைகளை வைத்துக் கொண்டு விபரமில்லாமல் வெள்ளைக்காரர் மீதும் பொது ஜனங்கள் மீதும் குற்றம் சொல்லிக் கொண்டிருப்பதில் ஒரு பலனும் இல்லை. ஆகையால் நாம் நமது இலட்சியத்தை அடைய வேண்டுமானால், வைதீகர்கள் வசமும், வைதீகத்தின் அடிமைகள் வசமும் அதிகாரங்களை ஒருநாளும் விட்டுவைத்தல் கூடவே கூடாது என்பதே நமது அபிப்பிராயம்.
>
> ஜஸ்டிஸ் கட்சி என்பதான தென்இந்திய நல உரிமைச் சங்கம் பெரும்பாலும் சுயமரியாதை இலட்சியத்தை ஒப்புக் கொள்ளுகின்றதானாலும் அதிலுள்ள சிலர் அதிகாரத்தையும் உத்யோகத்தையும் பொருத்த வரையில் மாத்திரம் பார்ப்பனீயத்தை ஒழிக்க சம்மதிக்கிறார்களேயொழிய நித்திய வாழ்க்கையில் பார்ப்பனர் காலில் விழுவதையோ பார்ப்பனர் கால் கழுவின தண்ணீரை சாப்பிட்டு தலையில் தெளித்துக் கொள்வதையோ நீக்கிவிட அநேகர் சம்மதிப்பதில்லை.
>
> ...ஆதலால் நமது லக்ஷியத்திற்கு அக்கக்ஷியையே முழுவதும் நம்பி விட்டுவிடுவதற்கில்லாத நிலையில் இருக்கின்றோம். ஆதலால் நமக்கென்று தனிக்கட்சி ஒன்று சட்டசபையில் அதாவது நமது சுயமரியாதைக்கு இடையூறாக இருக்கும் சட்டத்தடையை ஒழிப்பதற் காவது அவசியம் வேண்டியிருக்கின்றது.
>
> இவ்விஷயத்தில் அலட்சியமாய் இருந்துவிட்டு எவ்வளவுதான் பிரசாரம் செய்தாலும், எவ்வளவு தான் தியாகமும் கஷ்டமும் நஷ்டமும் அடையத் தயாராயிருந்தாலும் ஒரு பலனையும் அடைந்து விட முடியாது. ஆதலால் இப்போதே ஆங்காங்குள்ள சுயமரியாதை வீரர்கள் ஆங்காங்கு சங்கங்கள் கண்டு அங்கத்தினர்கள் சேர்க்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகின்றோம்."

*- குடி அரசு - தலையங்கம் - 27.05.1928*

*தனிக்கட்சி வேண்டும் என்று கருதி, அதற்குரிய முயற்சிகளையும் மேற்கொண்டார். ஆனால் அப்படி எதுவும் தொடங்கப்படவில்லை. தொடர்ச்சியாக நீதிக்கட்சியை இயக்குவதிலேயே கவனமாக இருந்தார். ஜனநாயகம், தேர்தல் அரசியல் இவற்றிலேயே நம்பிக்கையற்ற பெரியார், அந்தத் தேர்தல் அரசியலில் வெற்றி பெற்ற கட்சியில், அதன் உட்கட்சி விவகாரங்களில்கூடச் செல்வாக்கைச் செலுத்தி மாற்றங்களை உண்டாக்குகிறார்.*

**பொப்பிலி அரசரை முதலமைச்சராக்கினார்**

*1930 - 1932 வரை முதலமைச்சராக இருந்த முனுசாமி நாயுடுவுக்கு நீதிக்கட்சிக்குள் எதிர்ப்பு உருவானது. முனுசாமி நாயுடுவை முதல்வர் பதவி யிலிருந்து நீக்கிவிட்டுத் தன்னை முதலமைச்சராக்கு மாறு பொப்பிலி அரசர் பெரியாரிடம் கோரிக்கை வைத்தார். பெரியாரும், அவரது அரசியல் தொடர்புகளின் வழியாக முனுசாமி நாயுடுவை நீக்கிவிட்டு, பொப்பிலி அரசர் முதலமைச்சராக உதவினார். 1932 இல் பொப்பிலி அரசர் முதலமைச்சரானார். 1936 வரை அப்பதவியில் நீடித்தார். அவரது ஆட்சிக்காலத்தில் தான் பெரியாரின் ஈரோடு வேலைத்திட்டத்தின் பலதீர் மானங்கள் நீதிக்கட்சி ஆட்சியால் செயல்படுத்தப் பட்டன. (கருணாநந்தம்.ப.120)*

**அநேக விஷயங்களில் சுயமரியாதைக்கு விரோதமாக எவ்வளவோ கொடுமைகள் சட்டத்தில் இருக்கின்றன. இவைகளை எல்லாம் சட்டசபைகள் மூலம் மாற்றினாலன்றி நமது லட்சியம் நிறைவேற்றுவதற்கு மார்க்கமில்லை என்றே சொல்லுவோம்.**

*1932 இல் மீண்டும் தனிக்கட்சி தொடங்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டார். அதற்கான ஒரு கலந்துரையாடலுக்காகக் குடி அரசில் ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.*

**சமுதாயம் - அரசியல்**

**இரு தளங்களிலும் தனித்தனி அமைப்புகள்**

> இப்பொழுது இரண்டுவகை திட்டங்கள் யோசனைக்கு கொண்டு வருவதற்காகச் சில தோழர்களால் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஒன்று **'சுயமரியாதை சமதர்மக் கட்சித் திட்டம்'** என்னும் பேராலும், மற்றொன்று **'சுயமரியாதைக்கட்சி'** இதுவரையில் செய்து வந்தது போலவே பிரசாரத்தின் மூலமாக பல துறையிலும் சீர்திருத்தங்கள் செய்து மக்களுக்கு உலக ஒற்றுமையையும் பகுத்தறிவையும், அன்பையும் உண்டாக்குவது என்பது.
>
> இரண்டைப் பற்றியும் சுருக்கமாக விளக்க வேண்டுமானால் முன்னையது சில **கொள்கைகளை வகுத்து அதை நிறைவேற்ற சட்டசபை முதலிய அரசியல் பொது ஸ்தாபனங்களைக் கைப்பற்றி அதன் மூலம் நடத்துவிப்பது** என்பது,
>
> பின்னையது அரசியல் ஸ்தாபனங்களை லட்சியம் செய்யாமல் **மக்களிடை பல கொள்கைகளைப்**

**பிரசாரம் செய்து கொண்டே உலகப் புரட்சியை எதிர் நோக்கிக் கொண்டிருக்க வேண்டுமென்பது** மற்றொன்று. இந்த இரண்டு வித வேலையும் தனித்தனியே நடத்தப்படலாம் என்பது.

ஆகவே இந்த விஷயங்கள் எல்லாம் நன்றாய் பொறுப்புடன் ஆலோசிக்கப்படப் பட்டு ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியமாகும்.

ஆதலால் உண்மை விடுதலையிலும், உண்மை சமத்துவத்திலும் பற்று கொண்ட சுயமரியாதைத் தோழர்கள் அவசியம் விஜயம் செய்து கூட்டத்தின் உத்தேசத்தை நிறைவேற்றிக்கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

*- குடி அரசு - தலையங்கம் - 25.12.1932*

*திட்டமிட்டபடி சுயமரியாதை இயக்கத்தின் கூட்டம் ஈரோட்டில் நடைபெறுகிறது. அக்கூட்டத்தில் சுயமரியாதை இயக்கத்தின் இலட்சியங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டன. இலட்சியங்கள் மட்டுமல்ல; அவற்றை அடைய ஒரு வேலைத் திட்டமும் உருவாக்கப்படுகிறது.*

**பாமர மக்களைப் பல அரசியல் ஸ்தாபனங்களும், சமூகக் கட்டுப்பாடுகளும் அந்தந்த விஷயங்களில் அடக்கியும், பொருளாதாரத் துறையில் ஒடுக்கியும் வைப்பதற்கு சாதனமாக "அரசியல் ஸ்தாபனங்களே" உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது என்பது ஆட்சேபிக்க முடியாத உண்மையாய் இருப்பதாலும், சுயமரியாதை இயக்கத்தாருக்குள் சமதர்ம (Socialist party) கட்சி என்பதாக ஒரு அரசியல் பிரிவை ஏற்படுத்த வேண்டும்**

*அடிப்படை இலட்சியங்களை நோக்கிச் சுயமரியாதை இயக்கம் செயல்படும். அந்தத் தொலைநோக்கு இலட்சியங்களை அடைவதற்கு முன் இடைக்கால ஏற்பாடாகச் செய்யவேண்டிய வேலைத்திட்டங்களைச் 'சுயமரியாதை - சமதர்மக் கட்சி' என்ற அரசியல் கட்சி செயல்படுத்தும் என்று முடிவெடுக்கின்றனர். பெரியார் காண விரும்பிய அரசியல் கட்சியான, சமதர்மக் கட்சியின் வேலைத்திட்டங்கள் தான் **'ஈரோடு வேலைத் திட்டம்'** என்று அழைக்கப்பட்டது.*

### சுயமரியாதை இயக்க இலட்சியம்

1. பிரிட்டிஷ் முதலிய எந்தவித முதலாளித் தன்மைகொண்ட ஆட்சியிலிருந்தும் இந்தியாவை பூரண விடுதலை அடையச் செய்வது.

2. தேசத்தின் பேரால் கொடுக்கப்படவேண்டிய எல்லா கடன்களை ரத்து செய்வது.

3. எல்லா தொழிற்சாலைகளையும், ரயில்வேக்களையும், பாங்கிகளையும், கப்பல் படகு நீர் வழி போக்குவரத்து சாதனங்களையும் பொது மக்களுக்கு உரிமை யாக்குவது.

4. எந்தவிதமான பிரதிப் பிரயோஜனமும் கொடுபடாமல் தேசத்தில் உள்ள எல்லா விவசாய நிலங்களையும், காடுகளையும் மற்ற ஸ்தாவர சொத்துக்களையும் பொது ஜனங்களுக்கு உரிமையாக்குவது.

5. குடியானவர்களும், தொழிலாளிகளும், லேவாதேவிக் காரர் களிடம் பட்டிருக்கும் கடன்களையெல்லாம் (கேன்சில்) செல்லுபடி யற்றதாக ஆக்கி விடுவது, அடிமை ஒப்பந்தங்களை ரத்து செய்து விடுவது.

6. சுதேச சமஸ்தானங்கள் என்பவைகளை யெல்லாம் மாற்றி இந்தியா முழுவதையும் தொழிலாளிகள், குடியானவர்கள், சரீர வேலைக்காரர்கள் என்பவர் களுடைய நேரடியான ஆட்சிக்கு கொண்டு வருவது.

7. தொழில் செய்பவர்கள் 7 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யக்கூடாது என்பதுடன், அவர்களுடைய வாழ்க்கை நிலை உயர்த்தப்படுவது. தொழிலாளி களுக்கு கூலியை உயர்த்தி, அவர்களது சுகவாழ்க் கைக்கு வேண்டிய சவுகரியங்களையும் இலவச நூல் நிலையங்கள் முதலிய வசதிகளையும் ஏற்படுத்துவது. தொழில் இல்லா மல் இருக்கின்றவர்களை சர்க்கார் போஷிக்கும் படியும் செய்வது.

*என்பவைகள் சுயமரியாதை இயக்கத்தின் அடிப் படையான இலட்சியங்களாகும். இந்த இலட்சியங் களுக்கான வேலைத்திட்டம் அரசியல் கட்சிக் குரியது. வேலைத்திட்டத்தை அறிவிப்பதற்கு முன்பு, தேர்தல் அரசியல் பற்றிக் கடுமையான எதிர்க்கருத்துக்களைக் கொண்ட பெரியார், கள நிலவரத்தின் அடிப்படையில் ஒரு முடிவு எடுத்து எழுதியுள்ளதைக் கவனமாகப் படியுங்கள்.*

### அரசியல் அமைப்புகளின் முக்கியத்துவம்

சுயமரியாதை இயக்கமானது தென் இந்தியாவில் சென்ற 7, 8 வருஷ காலமாக பாமர மக்களிடையே ஏராளமாய் புதைந்து கிடந்த ஜாதி, மதம் முதலியவைகளைப் பற்றிய குருட்டு நம்பிக்கைகள் மூடப் பழக்க வழக்கங்கள் ஆகியவைகளைப் பற்றியும், பொருளாதாரத் தன்மையின் கீழ்நிலையைப் பற்றியும் செய்து வந்த புரட்சி பிரசாரத்தின் பலனாய் ஒரு பெருத்த உணர்ச்சியைக் கிளப்பி விட்டிருப்பதாலும், **பகுத்தறிவுக்கு ஏற்காத முறையில் நடை பெற்று வரும் மேல்கண்ட பழக்க வழக்க முறைகளை சட்ட மூலமாகவன்றி வேறு வழியில் ஒழிப்பது என்பது முடியாது என்கின்ற அபிப்பிராயம் நாளுக்கு நாள் பலப்பட்டு வருவதாலும்,**

**பாமர மக்களைப் பல அரசியல் ஸ்தாபனங்களும், சமூகக் கட்டுப்பாடுகளும் அந்தந்த விஷயங்களில் அடக்கியும், பொருளாதாரத் துறையில் ஒடுக்கியும் வைப்பதற்கு சாதனமாக "அரசியல் ஸ்தாபனங்களே" உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது என்பது ஆட்சேபிக்க முடியாத உண்மையாய் இருப்பதாலும்,**

**சுயமரியாதை இயக்கத்தாருக்குள் சமதர்ம (Socialist party) கட்சி என்பதாக ஒரு அரசியல் பிரிவை ஏற்படுத்தி, அதற்கு அடியிற்கண்ட திட்டத்தை**

வகுத்து, அதன் மூலம் பரிகாரம் தேடுவது என்று தீர்மானிக்கப்படுகிறது.

வேலைத்திட்டத் தீர்மானம்

1. பொது ஜன சௌகரியங்களுக்கு ஏற்பட்ட சாதனங்களை தனிப்பட்ட மனிதர்கள் அனுபவிப்ப தென்பதற்கும் ஜாதிமத சம்பந்தமான கொடுமை களுக்கும் பாதுகாப்புகளாய் இருக்கும் அறிவுக்கு ஒவ்வா முறைகளை ரத்து செய்ய வேண்டும். பாமர ஜனங்களை அவர்களது பொருளாதாரக் கொடுமையில் இருந்தும், ஜாதி மதக் கொடுமையில் இருந்தும் விடுவித்தும் சுதந்திர மனிதர்கள் ஆக்குவதற்கும், பொது ஜன அவசியத்திற்கு என்று ஏற்படுத்தப்படுகிற தொழில் முறைகள் போக்கு வரத்து சாதனங்கள் ஆகியவைகளின் நிர்வாகத் தையும் அதன் இலாபத்தையும் தனிப்பட்ட மனிதர்கள் அடையாமலிருப்பதற்கும் வேண்டிய காரியங்களை அரசியல் ஸ்தாபனங்களின் மூலமாகச் செய்ய வேண்டும்.

....மேல்கண்ட சட்டங்கள், சீர்திருத்தங்கள் முதலிய வைகளை எல்லாம் சட்டசபைப் பிரவேசம் மூலம், பிரசங்க மூலம், சொல்லுவதன் மூலம், பத்திரிகைத் துண்டுப் பிரசுரம் முதலியவைகள் மூலம் சட்டத்தை அனுசரித்துச் செய்ய வேண்டியது.

*-குடி அரசு - 01.01.1933*

*இவ்வாறு இரு தளங்களிலும் ஆற்ற வேண்டிய பணிகளைத் தெளிவாகத் திட்டமிடுகிறார். சமுதாயத்துறைக்கு சுயமரியாதை இயக்கம். அரசியல் துறைக்கு சமதர்மக்கட்சி. இரண்டையும் ஒன்றுக் கொன்று எதிராகக் கொண்டு நிறுத்தவில்லை. அரசியலை நம்பாதே, ஒட்டுப்போடாதே, சமுதாய இயக்கத்தை மட்டும் நம்பு என்று வறட்டுவாதம் பேசிக்கொண்டிருக்கவில்லை. அரசியல் கட்சிக்கான ஈரோடு வேலைத்திட்டம் முழுக்க முழுக்கச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு, சட்டத்தினால் மட்டுமே நடத்தப்பட வேண்டும் என்றும் தெளிவாக விளக்கி விட்டார்.*

*இதில் மிக முக்கியமான செய்தி என்ன வென்றால், அவர் அரசியல் கட்சி வேண்டும் என எண்ணிய காலத்தில் மாகாணங்களுக்கு இருந்த அதிகாரங்கள் இப்போது இந்த 2018 ஆம் ஆண்டில் இருப்பதைவிட மிக மிகக் குறைவான அதிகாரங்கள் தான். அந்த நிலையிலேயே அரசியல் துறையை அவர் ஒதுக்கிவிடவில்லை.*

*திட்டங்கள் சரியாக இருந்தாலும், அவற்றைச் செயல்படுத்துவதற்குப் பெரியார் நம்பியிருந்த தோழர்கள் சரியாக இல்லை. அரசியல் கட்சியை யார், யாரையெல்லாம் நம்பித் தொடங்கலாம் என எண்ணியிருந்தாரோ, அவர்களெல்லாம் பெரியாரை விட்டு விலகினார்கள். எனவே 'சமதர்மக் கட்சி' என்ற அரசியல் திட்டம் தள்ளிப் போடப்பட்டது.*

**சிங்காரவேலரின் கடும் எதிர்ப்பு**

*தனது திட்டம் தோற்றுவிட்டது. தான் நம்பிய தோழர்கள் துரோகம் இழைத்துவிட்டனர் என்ற நிலையில் தனது கருத்தை மாற்றிக்கொண்டு, சமுதாய இயக்கம் தான் முக்கியம், அரசியல் கட்சி தேவையில்லை என்று பேசவில்லை. உடனடியாக அடுத்த வாய்ப்பு என்ன? என்று யோசித்து மீண்டும் நீதிக்கட்சியை வேலை வாங்கத் தயாரானார்.*

*ஏற்கனவே, அதாவது 1928 லேயே "பார்ப்பனர் காலில் விழுவதையோ பார்ப்பனர் கால் கழுவின தண்ணீரை சாப்பிட்டு தலையில் தெளித்துக் கொள்வதையோ நீக்கிவிட அநேக (நீதிக்கட்சியினர்) சம்மதிப்பதில்லை" என்று தானே குற்றம் சாட்டியிருந்த நீதிக்கட்சியையே மீண்டும் நாடுகிறார். தான் தொடங்க நினைத்த அரசியல் கட்சிக்காகத் திட்டமிட்டிருந்த ஈரோடு வேலைத்திட்டத்தில் சில மாற்றங்கள் செய்து நீதிக்கட்சிக்கு அனுப்புகிறார்.*

**தேர்தல் அரசியலை முற்று முழுதாக எதிர்ப்பவர். தனிநாட்டுக்காக இந்தியா முழுவதும் சுற்றிச்சுழன்று கொண்டிருக்கிறார். முதலமைச்சர் பதவியே மூன்று முறை தேடிவந்த போதும் அதை துரத்தி அடிக்கிறார் அந்த நிலையிலும், 1951 ஆம் ஆண்டு நவம்பர் 25, 26, 27 தேதிகளில் திருச்சியில், திராவிடர் கழகத் தோழர்களுக்கு, தேர்தல் பிரச்சாரப் பயிற்சி வகுப்பை நடத்தினார் பெரியார்.**

*அப்படி நீதிக்கட்சிக்கு வேலைத்திட்டத்தை அனுப்பியதற்கு தோழர் சிங்காரவேலர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார். சிங்காரவேலரின் கடுமையான எதிர்வினையை முழுமையாகத் தனது குடி அரசு ஏட்டில் பதிவு செய்து - அவரது கருத்துக்குத் தனது மறுப்பையும் வெளியிட்டார் பெரியார். அதைச் சுருக்கமாகப் பார்ப்போம்.*

**சிங்காரவேலரின் எதிர்ப்பு:** "நாம் செய்ய வேண்டிய வேலை என்னவென்று கேட்கலாம்? பல கட்டுரைகளில் நமது கடமையைப் பற்றியும், நாம் செய்து வரவேண்டிய வேலையைப் பற்றியும் எழுதியுள்ளோம். ஈரோட்டில் 2 வருஷங் களுக்கு முன் வகுக்கப்பட்ட திட்டங்களும் இருக்கின்றன. அந்த திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வராமல் அந்த திட்டங்களைக் கனவிலும் நினையாத கட்சிக்காரரோடு சரச சல்லாப வார்த்தைகளைப் பேசுவதால் யாது பயனென்று கேட்கின்றோம்? நாம் நல்ல பிள்ளையென்று பெயரெடுக்க வேண்டுமானால் அது வெகு சுளுவில் அடையலாம்!

**பெரியாரின் விளக்கம்: "எனது பிரேரேபணைகள் ஜஸ்டிஸ் கட்சி வேலைத்திட்டத்திற்கே ஒழிய சுயமரியாதைக்கட்சி வேலைத் திட்டத்திற்கல்ல.** இக்கொள்கைகளை ஜஸ்டிஸ் கட்சி ஒப்புக்கொள்ளா விட்டால் நமக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை. இதை அவர்கள் ஒப்புக் கொண்டால் மேலால் நடக்க வேண்டிய விஷயங்களைப் பற்றி நாம் எல்லோரும்

யோசிப்போம். இதனால் சுயமரியாதை இயக்கத்திற்கு வகுத்த திட்டங்கள் பாதிக்கப்பட்டுவிடாது.

சுயமரியாதை இயக்கத் திட்டத்தில் கண்டபடியே தான் இத்திட்டத்திலும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு என்று எழுதி இருப்பதுடன் நமக்கு அதிகாரம் இல்லாத விஷயங்களில் கிளர்ச்சி செய்து அதிகாரம் பெறுவது என்றும் குறிப்பிட்டிருக்கிறதே ஒழிய வேறில்லை. எந்த இயக்கத்தின் மூலம் எந்தத் திட்டம் வகுக்கப்பட்டாலும் இன்று இந்த முறையில் தான் வகுக்கக் கூடும்.

- பகுத்தறிவு ஆசிரியர் குறிப்பு 30.09.1934

### ஈரோடு வேலைத்திட்டம் ஏற்பு - பெரியார் தேர்தல் பிரச்சாரம்

சென்னையில் நீதிக்கட்சியின் மாநில மாநாடு 1934 ஆம் ஆண்டு செப்டம்பர் 29, 30 தேதிகளில் நடைபெற்றது. அதில் 'ஈரோடு வேலைத்திட்டம்' விவாதத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. பொப்பிலி அரசர் பெரியாரின் வேலைத்திட்டத்தை ஒரு தனிக்குழு அமைத்து ஆராய்ந்து, பிறகு ஏற்றுக்கொண்டார். அதன் பிறகு நடைபெற்ற அகில இந்திய சட்டசபைத் தேர்தலில் பெரியார் நீதிக்கட்சிக்கு ஆதரவாகத் தேர்தல் பிரச்சாரத்தை நடத்தினார். அதுதான் பெரியார் நேரடியாக நடத்திய முதல் தேர்தல் பிரச்சாரம் என கவிஞர் கருணானந்தம் அவர்கள் எழுதிய 'தந்தைபெரியார் வாழ்க்கை வரலாறு' நூல் பதிவு செய்துள்ளது.

### "தமிழ்நாடு தமிழருக்கே"

இப்படி மக்கள் விடுதலைக்காகத் தேர்தல் அரசியலிலும், தான் நினைத்ததைச் சாதிக்கும் வழிவகை களைத் தேடிக் கொண்டிருந்த நிலையில், 1937 இல் நீதிக்கட்சி தோல்வி அடைந்து காங்கிரஸ் கட்சி வெற்றிபெறுகிறது. அப்போது இராஜாஜி முதல்வரானார். அரசு, நீதிமன்ற, காவல்துறை நிர்வாகங்கள் அனைத்திலும் பார்ப்பனர்கள் திட்ட மிட்டு நியமிக்கப்படுகின்றனர். கல்வி நிலையங்கள் மூடப்படுகின்றன. பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக இந்தித் திணிப்பும் நடக்கிறது. அனைத்துப் பார்ப்பன ஆதிக்க வெறிகளுக்கும் எதிராகத்தான் இந்தி எதிர்ப்பை ஒரு கருவியாகக்கொண்டு, 1938 ஆம் ஆண்டு "தமிழ்நாடு தமிழருக்கே" எனத் தனித் தமிழ்நாடு முழக்கத்தை வரலாற்றில் முதன்முதலாகத் தொடங்கினார் பெரியார்.

**எனது 92 ஆம் ஆண்டு செய்தி என்பதாக எனது 91 ஆண்டு அனுபவ அறிவைக் கொண்டு சொல்லுகிறேன். மக்ககள் எல்லோரும் பகுத்திவுவாதி களாக மாறுங்கள். எப்பாடுபட்டாவது இன்றைய தி.மு.க. ஆட்சியை இனியும் ஒரு பத்தாண்டுக்கு நல்ல பலம் பொருந்திய ஆட்சியாக இருக்கப் பாடுபடுங்கள் என்பது தான்.**

அதன்பிறகு, **"திராவிட நாடு திராவிடருக்கே"** எனும் தலைப்பில் 1939 டிசம்பர் 17 குடி அரசு இதழில் தலையங்கம் தீட்டி, திராவிட நாடு கோரிக்கைக்குச் செயல்திட்டமும் தீட்டினார். 1940 ஆம் ஆண்டு ஜனவரி 6 முதல் 10 வரை திராவிட நாடு பிரிவினைக் காக டாக்டர் அம்பேத்கர், முகமது அலி ஜின்னா ஆகியோரைச் சந்தித்து ஆதரவு திரட்டினார். அறிஞர் அண்ணா, டி.ஏ.வி. நாதன், பாலசுப்பிர மணியன் ஆகியோர் உடன் சென்றனர். இங்கிலாந்தில் இருந்து வந்த க்ரிப்ஸ் குழுவைச் சந்தித்து, தனித்திராவிட நாட்டுக்குக் கோரிக்கை வைக்கிறார்.

1944 ஆகஸ்ட் 28 இல் திராவிடர் கழகம் உருவாகிறது. அதிலும் தனி திராவிட நாடே இலக்கு எனத் தீர்மானம் நிறைவேற்றுகிறார். தீர்மானத்தோடு நிற்கவில்லை. இந்தியா முழுவதும் அனைத்துக் கட்சி, அனைத்து சமுதாயத் தலைவர்களையும் சந்தித்துத் தனிதிராவிட நாட்டுக்கு ஆதரவு திரட்டுகிறார். எம்.என்.ராய், இந்து மகாசபாவின் மூஞ்சே போன்றவர்கள் தமிழ்நாட்டுக்கு நேரடியாக வந்து பெரியாரைச் சந்தித்து திராவிட நாட்டுக்கு ஆதரவைத் தெரிவிக்கின்றனர். இப்படி நாட்டு விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த காலங்களில், முதலமைச்சர் பதவி பெரியாரைத் தேடிவருகிறது.

### மூன்று முறை முதலமைச்சர் பதவி மறுப்பு

இரண்டாம் உலகப்போரில், இந்தியப் படைகளை ஆங்கிலேய அரசு ஈடுபடுத்தியது. இந்தியத் தலைவர்களைக் கலந்துபேசாமல் ஆங்கிலேய அரசு மேற்கொண்ட இந்த நடவடிக் கையைக் கண்டித்து காங்கிரசு அரசாங்கங்கள் பதவி விலகின. அந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் இராஜகோபாலாச்சாரி 1939 அக்டோபர் 27 இல் பதவி விலகினார். அப்போதைய கவர்னர் ஆர்தர் ஹோப் அவர்கள் பெரியாரை அணுகி ஆட்சி அமைக்க அழைத்தார். இந்நிலை உருவாகும் எனக் கணித்திருந்த பெரியார் அக்டோபர் 25 ஆம் நாளிலேயே நீதிக்கட்சியின் நிர்வாகக்குழுவைக் கூட்டி அதில் முதலமைச்சர் பதவியை ஏற்பதில்லை என முடிவு செய்தார். அம்முடிவை அக்டோபர் 29 இல் கவர்னரிடம் நேரில் தெரிவித்தார்.

1940 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் நாள் மீண்டும் இராஜாஜி, முதலமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு பெரியாரிடம் வேண்டுகோள் விடுத்தார். அப்போதும் பெரியார் அதை மறுத்தார்.

1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு கலவரங்களைக் கட்டுப்படுத்தக் கோரி அக்டோபர் 18 இல் கவர்னரையும், வைசிராயையும் பெரியார் சந்தித்தார். அப்போது இருவரும் பெரியாரிடம் ஆட்சியை ஏற்றுக்கொள்ளக்கூறினர். அதையும் பெரியார் மறுத்தார். இவ்வாறு மூன்று முறை முதலமைச்சர் பதவி அவருக்குத் தேடி வந்தபோதும், மூன்று முறையும் அதை மறுத்தார்.

**மீண்டும் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே அரசியல்**

முதலமைச்சர் பதவி என்பதில் அதிக அதிகாரம் இல்லை என்பதை நன்கு அறிந்திருந்த பெரியார் அதை மறுக்கிறார். அந்த நேரத்தில் தனிநாட்டுக்காகக் களமாடிக்கொண்டிருந்தார். 1947 இல் இந்தியா விடுதலை பெற்றபோதும்கூட அந்த விடுதலையைத் ‘துக்கநாள்’ என்று அறிவித்து, தனித் தமிழ்நாட்டுக்கான முயற்சிகளிலேயே தொடர்ந்து இயங்கினார்.

அதேகாலத்தில், 1946 இல் ஆந்திரப் பார்ப்பனரான பிரகாசம் காரு சென்னை ராஜதானியின் முதலமைச்சராக வந்தபோது, காங்கிரஸ் கட்சிக் குள்ளேயே தமது செல்வாக்கையும், காமராசரின் நட்பையும் பயன்படுத்தி, பிரகாசம்காருவைப் பதவியில் இருந்து அகற்றி, ஓமந்தூர் இராமசாமியை முதலமைச்சராக்கினார்.

தனிநாட்டுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் காலத்தில், அதிகாரங்கள் எதுவும் அற்ற முதலமைச்சர் பதவியில் யார் இருக்க வேண்டும்? யார் இருக்கக்கூடாது என்ற நிர்ணயிக்கும் இடத்திலும் வெற்றிபெற்று தனது அரசியல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கொண்டே இருந்தார். தானே மூன்றுமுறை தூக்கி எறிந்த முதலமைச்சர் பதவி தான், என்றாலும், ஆந்திரப் பார்ப்பனப் பிரகாசம் வந்துவிடக் கூடாது என்று அரசியல் சதுரங்கத்திலும் தடம் பதிக்கிறார். ஓட்டுப் போடாதே, அரசியல் கட்சிகளை நம்பாதே, புரட்சி செய் என்று பேசிக்கொண்டு மட்டும் நிற்க வில்லை. கள யதார்த்தத்தைக் கணக்கில் கொண்டு அரசியல் நகர்வுகளை மேற்கொள்கிறார்.

**1952 தேர்தலில் ‘ஐக்கிய முன்னணி’ உருவாக்கம்**

1952 இல் குடி அரசு அடைந்த இந்தியாவில் முதல் பொதுத்தேர்தல் நடைபெற்றது. அதற்கு முன்பு கம்யூனிஸ்ட் தலைவர் எஸ்.ஏ.டாங்கே 30.05.1951 இல் பெரியாரை நேரில் வந்து சந்தித்து காங்கிரசை வீழ்த்த ஆதரவு கோரினார். அதன்பிறகு கம்யூனிஸ்ட்டுகளுக்கு ஆதரவாக - காங்கிரசுக்கு எதிராக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து எதிர்க் கட்சிகளையும் ‘ஐக்கிய முன்னணி’ என்ற பெயரில் ஓரணியில் திரட்டினார் பெரியார்.

திராவிடர் கழகத்திலிருந்து, திராவிட முன்னேற்றக்கழகம் (1949 இல் பிரிந்தது) இரு அமைப்புகளுக்கும் இடையே கடும் எதிர்வினைகள் இருந்த காலம் அது. அந்நிலையிலும் பெரியார் தி.மு.க வின் ஆதரவைத் தேடிப் பெற்றார். அப்போது தி.மு.க தனது ஆதரவைத் தருவதற்கு ஒரு முன் நிபந்தனை விதிக்கிறது. பெரியார் உருவாக்கிய கூட்டணியில் இணைந்த காமன்வீல் கட்சி, உழைப்பாளர் கட்சி போன்றவை போட்டியிடும் தொகுதிகளில் தி.மு.க வினரின் ஆதரவைப்பெற ஒரு நிபந்தனை விதித்தது.

அதாவது, “தேர்தலில் வெற்றி பெற்றால், திராவிட நாட்டுப் பிரிவினைக்குப் பாடுபடுவேன்” என்று எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுக்கும் கட்சிகளுக்கு மட்டுமே தி.மு.க ஆதரவளிக்கும் என நிபந்தனை விதித்தது. அதை ஏற்றுக்கொண்டு, கையொப்பமிட்டுக் கொடுத்துத்தான் காமன்வீல் கட்சியும், உழைப்பாளர் கட்சியும் தேர்தலைச் சந்தித்தன. பெரியார் தி.மு.க வின் அந்த நிபந்தனையைக் கடுமையாக எதிர்க்கிறார்.

“காங்கிரஸ் எதிர்ப்பு முயற்சிகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். எதிர்க்கட்சிகளுக்குள் கட்டுப்பாடு தேவை.

> **சமுதாயத்தில் இந்து மதத்திற்குப் பெரும் பலம் இருந்தும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு, அரசியல் பலத்தை உருவாக்குவதற்காகத் தேர்தல் அரசியலிலும் கடுமையாக உழைக்கிறது. ஆர்.எஸ்.எஸ்.ஸின் அரசியல்வெறிச்செயல்பாடுகளை நேரடியாகக் கண்டபிறகும் - ‘தேர்தல் அரசியலை’ நம்ப வேண்டாம் எனப் பிரச்சாரம் செய்வது ஆர்.எஸ்.எஸ். ஸின் குரலாகவே இருக்கும்.**

சட்டசபைக்குச் செல்கின்றவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினையில் நம்பிக்கை வைத்து, அதற்காகப் பாடுபடுவேன் என்று கையெழுத்துப் போடவேண்டும் என்பதில் அர்த்தமே இல்லை. அவர்கள் வாக்குத் தவறமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? தவறினால் எப்படி? என்ன? நடவடிக்கை எடுக்க முடியும்?”

- விடுதலை 05.11.1951

என்கிறார். தேர்தல் அரசியலில், இதுபோன்ற நிபந்தனைகள் கம்யூனிஸ்ட்டுகளின் வெற்றியைப் பாதிக்கும். காங்கிரஸ் வெற்றிக்கு வழிவகுத்துவிடும் என அஞ்சினார். எந்த விலை கொடுத்தாவது காங்கிரஸ் தோற்க வேண்டும் என்ற நிலையில் இருந்தார்.

**தேர்தல் பிரச்சாரப் பயிற்சி வகுப்பு**

இந்தத் தேர்தலில் தான் பெரியாரின் அரசியல் அணுகுமுறையை நாம் நன்றாகக் கவனிக்க வேண்டும். 1951 ஆம் ஆண்டு நவம்பர் 25, 26, 27 தேதிகளில் திருச்சியில், திராவிடர் கழகத் தோழர்களுக்கு, தேர்தல் பிரச்சாரப் பயிற்சி வகுப்பை நடத்தினார் பெரியார். எனக்குத் தெரிந்து, அதற்கு முன்போ, பிறகோ, இன்று வரையில் திராவிடர் கழகம்கூட **‘தேர்தல் பிரச்சாரப் பயிற்சி வகுப்பு’** என்று ஒரு நிகழ்வை நடத்தியதாகத் தெரியவில்லை.

தேர்தல் அரசியலை முற்று முழுதாக எதிர்ப்பவர். தனிநாட்டுக்காக இந்தியா முழுவதும் சுற்றிச்சுழன்று கொண்டிருக்கிறார். முதலமைச்சர் பதவியே மூன்று முறை தேடிவந்த போதும் அதை துரத்தி அடிக்கிறார் அந்த நிலையிலும், சமுதாய இயக்கத்தின் எல்லை என்ன? தேர்தல் அரசியலின் எல்லை என்ன? இரண்டு தளங்களின் அவசியம் என்ன? என்பவற்றைப் புரிந்து இரண்டு தளங்களிலும் ஒரே அளவு ஆற்றலைக் கொடுத்து உழைத்தார். ஜனநாயகமா? பணநாயகமா? எனப் பரப்புரை செய்துகொண்டிருந்தவர், 1952 தேர்தலில்

தனது தோழர்களுக்குத் தேர்தல் பிரச்சாரத்திற்கென்று தனியாகப் பயிற்சி வகுப்பையே நடத்தினார் என்பது மிக முக்கியமான செய்தி.

**கம்யூனிஸ்ட்டுகளின் துரோகம் - அடுத்த கட்ட அரசியல்**

குறிப்பாக, இந்தத் தேர்தலில் பல பார்ப்பன வேட்பாளர்களைக்கூட ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார். பல தொகுதிகளில் தி.க வும், தி.மு.க வும் இணைந்து பொது வேட்பாளர்களை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தன. மொத்தமிருந்த 375 இடங்களில் காங்கிரசு 152 இடங்களைப் பெற்றது. காங்கிரஸ் எதிர்ப்புக்கூட்டணி 223 இடங்களைப் பெற்றது. நேருவின் நண்பரான ஸ்ரீபிரகாசா என்ற கவர்னர் காங்கிரசை ஆட்சி அமைக்க அழைத்தார்.

2018 கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் பெரும்பான்மை பெற்ற காங்கிரசுக் கூட்டணியை ஆட்சி அமைக்க அழைப்பதற்குப் பதிலாக - குறைந்த இடங்களில் வென்ற பி.ஜே.பி யை கர்நாடகக் கவர்னர் அழைத்ததற்கு முன்னுதாரணம் இந்த 1952 தேர்தல் தான். கவர்னரின் சட்டவிரோத நடவடிக்கையை எதிர்த்து திராவிடர் கழகம் 12.03.1952 இல் கவர்னருக்குக் கருப்புக்கொடி காட்டும் போராட்டத்தை நடத்தியது.

தேர்தல் அரசியல் தான் முக்கியம் என்று கூறி அரசியலுக்குச் சென்ற தி.மு.க அந்தப் போராட்டத்தை நடத்தவில்லை. பங்கேற்கவே இல்லை. ஆதரவு மட்டும் தெரிவித்தது. தேடி வந்த முதலமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்த - தனி நாட்டுக்காகப் போராடிக்கொண்டிருந்த பெரியார், தேர்தல் அரசியலில் தனது திட்டம் வெற்றி பெறுவதற்காக கவர்னரை எதிர்த்துப் போராட்டம் நடத்துகிறார்.

**நமக்கென்று தனிக்கட்சி ஒன்று சட்டசபையில் அதாவது நமது சுயமரியாதைக்கு இடையூறாக இருக்கும் சட்டத்தடையை ஒழிப்பதற்காவது அவசியம் வேண்டியிருக்கின்றது. இவ்விஷயத்தில் அலட்சியமாய் இருந்துவிட்டு எவ்வளவுதான் பிரசாரம் செய்தாலும், எவ்வளவு தான் தியாகமும் கஷ்டமும் நஷ்டமும் அடையத் தயாராயிருந்தாலும் ஒரு பலனையும் அடைந்து விட முடியாது.**

வெற்றி பெற்றால் திராவிடநாட்டுப் பிரிவினைக்குப் பாடுபடுவதாக ஒப்பந்தம் போட்டு, தி.மு.க வின் ஆதரவு பெற்று வெற்றி பெற்றிருந்த உழைப்பாளர் கட்சியின் எஸ்.எஸ்.இராமசாமி படையாச்சி, காமல்வீல் கட்சியின் மாணிக்கவேல் நாயகர் ஆகியோர் காங்கிரசுடன் இணைந்து துரோகமிழைத்து காங்கிரஸ் ஆட்சி அமைக்க வழி அமைத்தனர். காங்கிரஸ் சார்பில் மீண்டும் ஆந்திரப் பார்ப்பனரான பிரகாசம் முதலமைச்சராகும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்குக் கம்யூனிஸ்ட்டுகளே ஆதரவாக நின்றனர்.

பிரகாசம் ஆட்சியில் தான் கம்யூனிஸ்ட்டுகள் கடுமையாக ஒடுக்கப்பட்டனர். பல தலைவர்கள் தலைமறைவாக்கப்பட்டனர். அதை எதிர்த்துத்தான் அய்க்கிய முன்னணியே உருவானது. ஆனால், அதே பிரகாசம் முதலமைச்சராக வருவதற்குக் கம்யூனிஸ்ட்டுகள் முயன்றனர். அப்போது, பிரகாசம் மிகவும் கொடிய ஜாதி, மத வெறி பிடித்தவர். அவரை விட இராஜாஜியே மேல் என்ற ஒரு நிலையை எடுத்தார் பெரியார். இராஜாஜி மேலவை உறுப்பினராகி, முதல்வரானார்.

இராஜாஜி முதல்வரான உடன் பெரியாரின் ஆதரவைக் கோரிப்பெற்றார். திராவிடர் விவசாயத் தொழிலாளர் சங்கம் உருவாக்கப்பட்டது. அதன் முக்கியக் கோரிக்கையாகப் பண்ணையாள் பாது காப்புச் சட்டம், விவசாயத் தொழிலாளர் நீதிமன்றங்கள் போன்ற பல நன்மைகளை அந்த ஆட்சியின் மூலம் நடத்திக்காட்டினார் பெரியார்.

**சமுதாயப் புரட்சியும் அரசியல் மாற்றமும்**

1952 இல் ஆட்சி அமைத்து, பெரியாரின் ஆதரவைப் பெற்று ஒரு சில காரியங்களைச் செய்தார் இராஜாஜி. ஆனால் அவரது பிறவிப்புத்தி மீண்டும் தலையெடுத்தது. 6000 பள்ளிகளை இழுத்து மூடினார். குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார்.

பெரியார் அதற்கு எதிர்வினையாக சமுதாயப் புரட்சியைத்தான் நடத்தினார். அவர் நடத்திய சமுதாயப் புரட்சியில் அரசியல் கட்சியான தி.மு.க வும் பெரும்பங்கு வகித்தது. சுமார் இரண்டு ஆண்டுகாலம் தொடர்ச்சியான மக்கள்திரள் போராட்டங்கள் - அக்ரஹார எரிப்புப்போராட்ட அறிவிப்புகள் போன்றவற்றால் குலக்கல்வித் திட்டம் ஒழிக்கப்பட்டு, 1954 ஆம் ஆண்டு இராஜாஜி பதவியை விட்டு விலகினார். 1954 ஏப்ரல் 14 ஆம் நாள் காமராசர் முதலமைச்சரானார்.

இப்போராட்டம் அரசியல் தளத்தில் நடக்க வில்லை. ஒட்டு மொத்த சமுதாயத்தைத் திரட்டி னால், அதன் விளைவாக அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதை உணர்த்திய போராட்டம். இது மட்டுமல்ல 1951 இல் நடந்த முதல் அரசியல் சட்டத் திருத்தமும் பெரியாரின் நேரடியான சமுதாயப்புரட்சிக்குச் சான்று. அரசியலை எதிர்பார்க்காமல் நடத்திய புரட்சி.

அதே நேரத்தில் அரசியல் தளத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வரலாறும் நடந்தது. 1957 ஆம் ஆண்டு நடந்த சட்ட எரிப்புப் போராட்டத்தின் காரணமாக 4000 தோழர்கள் 3 ஆண்டு கடுங்காவல் தண்டனை அடைந்தனர். 18 தோழர்கள் வீரமரணம் அடைந்தனர். பெரியாரும் போராட்டத்திற்கு முன்பே சிறையில் அடைக்கப்பட்டார். அந்தக் கொடுமையான நிலையிலும், அப்போது இருந்த காமராசர் ஆட்சியை ஆதரித்துக் கொண்டு தான் இருந்தார். தானே நேரடியாக முன்னின்று 1951 லும், 1954 லும் சமுதாயப் புரட்சியை நடத்தி அதன் நோக்கத்தில் வெற்றியும் பெற்றிருந்த பெரியார் - தனது இயக்கமும், தோழர்களும் மிகப்பெரும்

இழப்புகளைச் சந்தித்த காலத்திலும் தேர்தல் அரசியலால் முதல்வரான காமராசர் ஆட்சிக்கு எந்த ஆபத்தும் இல்லாமல் பார்த்துக்கொண்டார்.

**இந்தி எதிர்ப்புக் காலத்தில் காமராசர் தலைமைக்கு ஆதரவு**

1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முழுக்க முழுக்க அப்போது வாழ்ந்த இளைஞர் சமுதாயமே திரண்டு எழுந்து போராடிக்கொண்டிருந்தது. இன்றைய ஜல்லிக்கட்டுப் போராட்டத்தைப் போன்ற போராட்டம் அது. அப்போராட்டத்திற்குப் பெரியார் எதிராக நின்றார். 1965 இல் முதல்வர் பக்தவச்சலம். ஆனால் காங்கிரசின் தலைவராக, ஆட்சியை இயக்குபவராகக் காமராசர் தான் இருந்தார். ஒட்டுமொத்த சமுதாயமும் இந்திக்கு எதிராகப் போராடிக்கொண்டிருந்தபோது, தேர்தல் அரசியல் வழியாகக் காமராசர் உருவாக்கிய ஆட்சியைக் காப்பாற்றுவதில் பெரியார் கவனம் செலுத்தினார். இப்போராட்டம் காமராசரை வீழ்த்துவதற்காகத் திட்டமிடப்பட்ட போராட்டம் என்றார்.

**"இந்தி எதிர்ப்பு அரசியல் பிரச்சனையே:** "இந்திய யூனியனில் தமிழ்நாடு இருக்கும்வரை இங்கிலீஷ் ஒரு சமயம் ஒழிந்தாலும் ஒழியுமே அல்லாமல் இந்தி ஒரு நாளும் ஒழியாது. அது எங்காவது ஒளிந்து கொண்டே இருக்கும். இன்றைக்கும் சொல்லுகிறேன் காமராஜர் கையை விட்டு, அவர் செல்வாக்கை விட்டுத் தமிழ்நாட்டு அரசியல் ஆதிக்கம் பார்ப்பனர் கைக்குப் போய்விடுமேயானால் இன்று இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடத்திய கண்ணீர்த்துளிகள் (தி.மு.க), சுதந்திராக்கள் (இராஜாஜி), பத்திரிகைகள் தினத்தந்தி உள்பட பார்ப்பனர்கள் இன்றுள்ள தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் யாவரும் கதரைப் போலவே இந்தியை ஆதிக்கத்திற்குக் கொண்டு வந்துவிடுவார்கள் இது சத்தியம். (உறுதி, உறுதி)

ஆகவே இந்தி எதிர்ப்பு என்பது "வரியை ஒழிக்கிறோம்", "ரூபாய்க்கு 3 படி அரிசி அளக்கின்றோம்" என்பது போன்ற ஓர் அரசியல் பிரச்சனையே ஒழிய மொழிப் பிரச்சனை அல்ல.

...நான் சுமார் இரண்டாண்டுகளுக்கு முன்னாலேயே பொதுமக்களுக்கு என் கருத்தைத் தெரிவித்திருக் கிறேன். அதாவது, "காமராஜர் ஆட்சி அவசியமா? இந்தி ஒழிய வேண்டியது அவசியமா? என்று என்னை யாராவது கேட்டால் , காமராஜர் ஆட்சிதான் அவசியம்" என்று பலமாகச் சொல்லுவேன். காமராஜர் ஆட்சி நிலைத்தால் இந்தித் திணிப்பை மாத்திரமல்ல, மற்ற அநேகக் காரியங்களை ஒழித்துக்கட்டலாம். இனியும் ஒரு 5 அல்லது 10 அண்டுகளில் இதன் இரகசியத்தை பார்க்கலாம்.

*- 03.03.1965 விடுதலை*

சமுதாயப் புரட்சியை நம்பும் பெரியார், அந்த சமுதாயம் இந்திக்கு எதிராகத் திரண்ட போது அரசியல் தலைமையைக் காப்பாற்றவே முயன்றார். அதன் அடிப்படைக் காரணம் பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு - பார்ப்பனரல்லாத சமுதாயத்தின் விடுதலை. அந்த விடுதலை முயற்சிக்கு இந்தி எதிர்ப்பு என்ற சமுதாயப் புரட்சி எதிராக அமைந்து விடக்கூடாது. சமுதாய விடுதலைக்கான காமராசரின் அரசியல் முயற்சி தோற்றுவிடக் கூடாது என்ற அக்கறை ஆகும்.

**காமராசருக்கு மாற்றாக தி.மு.க. ஆதரவு**

இந்தியா குடிஅரசு நாடாகியபிறகு நடந்த 1952 தேர்தலில் தொடங்கி, பெரியாரின் இறுதிக்காலம் வரையிலும் தேர்தல் அரசியலில் தனக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும் - அது நிரந்தரத் தீர்வு அல்ல என்று நன்கு அறிந்திருந்தாலும், அரசியல் தளத்தில் தொடர்ச்சியாக இயங்கிக்கொண்டே இருந்தார். தேர்தல் பிரச்சாரங்களில் நேரடியாகவே ஈடு பட்டார்.

1970 ஆம் ஆண்டு தனது 92 வது பிறந்தநாள் அறிக்கையில்கூடப் பெரியார், தேர்தல் அரசியலுக்கு ஆதரவாக விரிவாகப் பேசியுள்ளார். குறிப்பாக, காமராசரை நம்பிப் பயனில்லை. அவரது பலம் குறைந்து விட்டது. தி.மு.க பத்தாண்டுகள் நிலையான ஆட்சி அமைக்க உதவுங்கள் என்கிறார்.

**"காமராஜர் ஆட்சி அவசியமா? இந்தி ஒழிய வேண்டியது அவசியமா? என்று என்னை யாராவது கேட்டால் , காமராஜர் ஆட்சிதான் அவசியம்" என்று பலமாகச் சொல்லுவேன். காமராஜர் ஆட்சி நிலைத்தால் இந்தித் திணிப்பை மாத்திரமல்ல, மற்ற அநேகக் காரியங்களை ஒழித்துக்கட்டலாம்.**

"இந்த நிலையில் எனது 92 வது ஆண்டு செய்தியாக மக்களுக்கு தெரிவித்துக் கொள்வது என்னவென்றால் இந்த ஆட்சியை இன்னும் ஒரு பத்தாண்டுக்கு பாதுகாத்து வரவேண்டுமென்பதே ஆகும்.

தேசம் மிருகப்பிராயத்திற்குப் போய்க் கொண்டி ருக்கிறது. யாரும், எப்படிப்பட்டவரும் எந்த இழிவான காரியத்தைச் செய்யவும் பயப்படுவதில்லை. ஒழுக்கம், நேர்மை, நாணயம், அமைதி என்பது பெரும் பாலோரிடம் காண முடிவதில்லை. பொதுவில் பார்த்தால் நமது நாடு தான் இந்தியாவிலேயே பாது காப்பான நாடு என்று கருதத் தக்கதாய் இருந்து வருகிறது.

இதற்குக் காரணம் தி.மு.க. ஆட்சி தான் என்று உறுதியாய்க் கூறுகின்றேன். எனவே இதற்கு ஏதாவது மாற்றம் ஏற்படுமானால் அதை வேறு எந்த ஆட்சிவந்து மக்களை இன்றைய நிலைக்கு கேடில்லாமல் ஆளமுடியும் ?

**காமராஜர் மாறி வருகிறார்**

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இந்த ஆட்சிக்கு மாற்றம் ஏற்படுமானால் அடுத்துவர இருப்பது பார்ப்பன ஆட்சிதான். அதாவது வர்ணாசிரமத்தை நிலை நிறுத்தும் ஆட்சிதான். இது உறுதி; உறுதியேயாகும். ஏனிப்படிச் சொல்லுகிறேன் என்றால், இந்தியா முழுவதற்குமே இன்று வர்ணாசிரமப் பாதுகாப்பு

ஆட்சி, கட்சி, மக்கள் என்பவர்கள் அல்லாமல், வேறு கட்சியும் இல்லை, மக்களும் இல்லை, கொள்கையும் இல்லை. காமராஜர் பலமற்றுப் போய்விட்டார். இவரது எண்ணங்களும் மாற்றமடைந்து வருகிறது; பார்ப்ப னனைத் தஞ்சமடைய வேண்டிய நிலைமைக்குப் போய்க் கொண்டிருக்கிறார். அவரது கட்சியும் (காங்கிரசும்) உருக்குலைந்துவிட்டது. அவருக்கு உதவியாளரும் யாரும் தகுதியானவரில்லை.

இவை மாத்திரமா? நமது பொது எதிரியான பார்ப்பனத் தலைவர் நம் சமுதாயத்தை அழித்து, ஒழித்துக் கட்ட கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் இராஜாஜி பலம் பெற்று வருகிறார். இதற்குக் காரணம் காங்கிரசு பிளவு பட்டதேயாகும்.

**ஆட்சி மாறினால் பலாத்கார தாண்டவம்**

இந்த நிலையில் இன்றைய நமது நாட்டு ஆட்சிக்கு ஏதாவது மாறுதல் ஏற்படுமானால் காமராஜர் ஆட்சி ஒரு நாளும் அந்த இடத்திற்கு வராது; மற்றெது வருமென்றால் பார்ப்பனராட்சி இராஜாஜி ஆதிக்க ஆட்சி தான் வரும். அதுவோ வேறு எதுவோ வந்தாலும் பழிவாங்கும் ஆட்சியாய்த் தானிருக்கும் அல்லது அசல் காலித்தன -பலாத்காரத்தாண்டவ ஆட்சியாகத்தானிருக்கும். இதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம்.

ஆகவே எனது 92 ஆம் ஆண்டு செய்தி என்பதாக எனது 91 ஆண்டு அனுபவ அறிவைக் கொண்டு சொல்லுகிறேன். மக்கள் எல்லோரும் பகுத்தறிவுவாதி களாக மாறுங்கள்.

எப்பாடுபட்டாவது இன்றைய தி.மு.க. ஆட்சியை இனியும் ஒரு பத்தாண்டுக்கு நல்ல பலம் பொருந்திய ஆட்சியாக இருக்கப் பாடுபடுங்கள் என்பது தான்.

*-17.09.1970 பெரியார் பிறந்த நாள் அறிக்கை.*

*பெரியார் விரும்பியபடி 1971 இல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க மிக அதிகமான இடங்களை வென்று ஆட்சி அமைத்தது. தி.மு.க ஆட்சியால், பெரியார் இயக்கத்திற்கும் கொள்கைகளுக்கும் சில தொல்லைகள் வந்த போதிலும் தனது இறுதிக்காலம் வரை தி.மு.க ஆட்சியைத் தொடர்ந்து ஆதரித்தே வந்தார். தி.மு.க வை உடைக்க எம்.ஜி.ஆர் எடுத்த முயற்சிகளுக்கு எதிராக, எம்.ஜி.ஆரை நேரிலும், விடுதலை வாயிலாகவும் கடுமையாக எதிர்த்தார்.*

**சுதந்திரத் தமிழ்நாடே இலட்சியம்**

*தனது இறுதிப் பிறந்தநாள் அறிக்கையில் (17.09.1973) அதேசமயம், தனது இயக்க இலட்சி யமான தனித்தமிழ்நாட்டுக்குத் தி.மு.க ஆதரவளிக் காது. அவர்களுக்கு மாகாண சுயாட்சிதான் முக்கியம். நாம் தனிநாட்டுக்காகப் போராடுவோம் என்று அறிக்கை வெளியிட்டார்.*

“நாம் உடனடியாக விடுதலை அதாவது இந்தியக் கூட்டாச்சியிலிருந்து விலகி சுதந்திரத் தமிழ் நாட்டை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டாக வேண்டியவர் களாக இருக்கிறோம். இம்முயற்சிக்கு இன்றைய நம் தி.மு.க. ஆட்சி இணங்கும் என்று கருதமுடியாது. ஏனெனில், தி.மு.க. ஆட்சி விரும்புவதெல்லாம் இந்தியக் கூட்டாச்சி ஆதிக்கத்திற்கு உள்பட்ட மாகாண சுயாட்சி தான் அது விரும்புகிறது. மாகாண சுயாட்சி என்றால், அரசியலில் தான் ஏதோ சில மாறுதல்களைச் செய்து கொள்ள முடியுமே தவிர, சமுதாயத் துறையில் அரசியல் சட்டத்திற்கு விரோதமாக ஒரு காரியமும் செய்ய முடியாது. சுதந்திரத் தமிழ்நாடே எனது இலட்சியம்”

*என அறிவிக்கிறார். 1938 லிருந்து 1973 வரை இடை விடாமல் தொடர்ச்சியாகத் தனித்தமிழ்நாட்டுக் காகப் போராடி வந்தார். 1925 இல் இருந்தே சமுதாய விடுதலைக்குப் போராடிக்கொண்டிருந்தார். அதே காலக் கட்டங்களில் அரசியல் துறையிலும், தேர்தல் அரசியலிலும் களப்பணி ஆற்றிவந்தார்.*

*சமுதாய இயக்கத்தையும் - அரசியல் செயல் பாடுகளையும் ஒன்றுக்கொன்று எதிரானவைகளாக என்றுமே அவர் அணுகியதில்லை. அரசியல் இயக்கங்களையும் செயல்பாடுகளை நம்ப வேண்டாம். ஓட்டுப்போட வேண்டாம், புரட்சிசெய் என்று அவர் பேசியதில்லை. சில நேரங்களில் சமுதாயக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, தேர்தல் அரசியலை விமர்சிக்க நேர்ந்தாலும், தேர்தல் அரசியல் செயல்பாடுகளை அவர் நிறுத்தியதே இல்லை. இரண்டு தளங்களின் எல்லைகளை நன்கு அறிந்து, அவற்றின் தன்மைக் கேற்ற வேலைத் திட்டங்களை வகுத்து, அவற்றைச் செயல்படுத்தி வெற்றியும் கண்டார். இரண்டு தளங்களிலும் விருப்பு, வெறுப்புகள் இன்றித் தனது சமுதாய இலட்சியங்களை அடிப்படையாக வைத்து மட்டுமே ஆதரவு, எதிர்ப்புகளை இயக்கிவந்தார்.*

**தனிநாடுகளும் சர்வதேசச் சூழலும்**

*தனிநாட்டுக்கான புரட்சி தான் முக்கியம் - அரசியல் கட்சிகளை நம்ப வேண்டாம் என்று பேசிக் கொண்டிருப்பவர்கள் பெரும்பாலும் 2009 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஈழவிடுதலை பேசுபவர்கள் ஆகும். அதைத் தவிர மற்ற சில புதியவர்களும், இளைஞர்களும் இவ்வாறு பேசி வருகிறார்கள். 2009 க்கு முன்பு ஈழவிடுதலைக்காக உண்மையாகவே களமாடியவர்களும், தமிழீழம் சென்றே களமாடிய தாகக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறைப்பட்டவர்களும் இப்படிப் பேசுவதில்லை. ஏதோ ஒரு அரசியல் அமைப்பை அல்லது ஏதோ ஒரு தேர்தல் அரசியல் முறையை ஆதரித்து, அதன் தன்மைக்கேற்ப வேலை வாங்கித்தான் வருகிறார்கள்.*

*இந்தப் புதிய போராளிகள் ஒரு உண்மையைப் புரிந்தும் மறைக்கிறார்கள். தமிழீழத்தில் 2009-க்கு முன் இருந்த சமுதாயப் புரட்சியைப் போன்ற ஒரு சரியான மக்கள் புரட்சியை நாம் கண்டிருக்க முடியாது. மண் விடுதலை, மக்கள் விடுதலை என்ற இரு தளத்திலும் மிகச்சரியான நகர்வுகளைக் கொண்டிருந்த அந்தப் புரட்சி தோல்வி அடைந்தது ஏன்?*

*ஒரு நாட்டின் விடுதலை என்பது அந்த நாட்டில் புரட்சி உண்டாவதால் மட்டும் கிடைத்து*

விடாது. அதற்குரிய சர்வதேச அரசியல் - பொருளாதார உறவுகளில் விடுதலைக்கு ஆதரவான போக்கு இருக்க வேண்டும். தமிழீழ விடுதலையில், சர்வதேச வளர்ந்த நாடுகள் எதிரான நிலையில் இருந்தன, இருக்கின்றன. அது தான் அடிப்படைக் காரணம்.

இந்த அடிப்படையில் தமிழ்நாட்டில், தனித் தமிழ்நாட்டுக்கோ, திராவிட நாட்டுக்கோ, குறைந்த பட்சம் இந்தியாவுக்குக் கட்டுப்பட்ட 'தென்மாநிலங்களின் கூட்டமைப்பு' என்ற நிலைக்காவது ஏதாவது முயற்சிகள் நடக்கிறதா? அப்படியே நடந்தாலும் இன்றுள்ள சர்வதேச அரசியல் - பொருளாதாரச் சூழல் அதை ஏற்கும் நிலையில் இருக்கிறதா? நிச்சயமாக இரண்டுமே இல்லை. இந்த நிலையில் எதை நம்பி, யாரை நம்பி அரசியல் தளச் செயல்பாடுகளைப் புறக்கணிக்க முடியும்?

இல்லை, இல்லை. சர்வ தேசச் சூழலும், தமிழ்நாட்டுச் சூழலும் அதற்கு ஏற்பச் சரியாகவே உள்ளது. தனித்தமிழ்நாடு என்பதை ஐ.நா அவை அங்கீகரிப்பது ஒன்று தான் பாக்கி. மற்ற புரட்சிகள் எல்லாம் முடிந்து விட்டது. எங்கள் அண்ணன் ஐ.நா வில் பேசி நாட்டை வாங்கிக் கொடுத்து விடுவார் என்றரீதியில் பேசுபவர்களையும், நம்புபவர்களையும் வாழ்த்துகிறோம். நீங்கள் அந்தப் பணியைத் தொடர்ச்சியாகப் பாருங்கள். முடிந்த அளவு உங்களுக்கு ஒத்துழைப்பையும் வழங்குகிறோம். ஆனால், அதுவரை அரசியல்தளச் செயல்பாடுகளை நிறுத்தச் சொல்லாதீர்கள். எங்கள் தலைவர் தோழர் பெரியார் அப்படிச் செயல்படவில்லை.

### தேர்தல் அரசியலில் ஆர்.எஸ்.எஸ்.ஸின் ஆதிக்கம்

பா.ஜ.க எனும் அரசியல் கட்சி, அந்தக் குறைந்த அதிகாரங்கள் உள்ள அரசியலைக் கைப்பற்றி, அதன் வழியாக, சமுதாயத்தில் பார்ப்பன ஆதிக்கத்தை மீண்டும் நீண்ட நெடிய காலத்திற்கு நிலைநாட்டத் துடித்துக்கொண்டிருக்கிறது.

2018 கர்நாடகச் சட்டசபைத் தேர்தலில், வழக்கமான கோடைகாலப் பயிற்சி முகாம்களைக் கூட தள்ளிவைத்து விட்டு, மூன்று மாதங்கள் தேர்தல் பணிகளில் மட்டுமே ஆர்எஸ்எஸ் கவனம் செலுத்தியது. இதனால்தான் பலமாக இருந்த காங்கிரஸைப் பின்னுக்குத்தள்ளி, பாஜகவால் தனிப் பெரும் கட்சியாக உருவெடுக்க முடிந்தது.

*-http://tamil.thehindu.com/opinion/columns/article23922270.ece*

குஜராத் தேர்தலில், காங்கிரஸ் வகுத்த வெற்றி வியூகத்தை குலைப்பதற்காக, அம்மாநிலத்தில் ஆர்.எஸ்.எஸ். கடுமையான பிரச்சார யுக்திகளை உருவாக்கி அதற்கேற்ப பணியாற்றியது. பாஜகவின் வெற்றியை தக்க வைக்கும் வகையில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் 12 அணிகளும் தீவிரமாகச் செயல்பட்டன.

*-https://tamil.indianexpress.com/india/gujarat-elections-rss-on-active-mode-to-unite-hindus-against-caste-politics/*

2019 பாராளுமன்றத் தேர்தலுக்காக வேட்பாளர் தேர்வு முதற்கொண்டு. தேர்தல் காலத்தில் நடக்க வேண்டிய அரசியல் நடவடிக்கைகள் வரை அனைத்தையும் இப்போதே திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது ஆர்.எஸ்.எஸ். இந்தக் காலத்தில், அரசியலால் ஒன்றுமே நடக்காது. அதில் அதிகாரமே இல்லை என்று எங்களைத் திசைதிருப்ப முயலாதீர்கள். இந்து மத, ஜாதி ஆதிக்கத்தை நிலைநிறுத்த, நீங்கள் புறக்கணிக்கக் கோரும் அதே தேர்தல் அரசியல் வழியாகத்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒரு சமுதாய இயக்கமாக - தேர்தலை நம்பாத இயக்கமான ஆர்.எஸ்.எஸ் அதைச் செய்து வருகிறது.

### ஆர்.எஸ்.எஸ்.ஸின் குரலே!

இறுதியாக, எல்லோரும் அரசியலுக்குச் செல்லுங்கள் என்றோ, இப்போதுள்ள தேர்தல் முறை வழியாகப் பெறும் அதிகாரம் தான் பலம் வாய்ந்தது என்றோ உறுதிசெய்ய இதை எழுதவில்லை. சமுதாய மாற்றம்தான் நிரந்தரத் தீர்வுக்கு வழி. அதற்கு எந்தெந்த முறைகளை - எந்ததெந்த அமைப்புகளை - என்னென்ன வாய்ப்புகளை எல்லாம் பயன்படுத்த முடியுமோ, அவை அனைத்தையும் பயன்படுத்தி, இலக்கை நோக்கி சமுதாயத்தை நகர்த்துவதே ஒரு சரியான 'சமுதாய இயக்கத்'தின் அடையாளம்.

தோழர் பெரியார் நமது விடுதலைக்காக, தேர்தல் அரசியல், பொருளாதாரம், அரசு நிர்வாகம், நீதி, காவல், கல்வி, மருத்துவம், ஊடகம், கலை, இலக்கியம், பண்பாடு என அனைத்துத் தளங்களிலும் தனித்தனியாகக் கவனம் செலுத்தித் தீவிரமாகப் பணியாற்றியுள்ளார். இதை எதையும் செய்யாமல், "பொதுக்கூட்டம் நடத்தி, போராட்டம் நடத்தி மக்களைத் திரட்டிக்கொண்டிருந்தால் மட்டும் போதும் - பிரச்சாரம் செய்தால் மட்டும் போதும் - மக்களே எல்லாச் சிக்கல்களுக்கு தீர்வு கண்டுவிடுவார்கள்" என்று தவறாக வழிநடத்தக் கூடாது. பெரியார் அப்படி இயங்கவில்லை.

இந்தியாவில் உள்ள அனைத்து இந்து மக்களும் இந்து மதப்பண்பாட்டை மீறாமல்தான் வாழ்கின்றனர். இஸ்லாமியர், கிறிஸ்தவர், பல பௌத்தர்களும், பகுத்தறிவாளர்களும்கூட, தங்களது வாழ்க்கைமுறையில், பண்பாடு, பழக்க வழக்கங்களில் இந்துமதத்தைப் பின்பற்றியே வாழ்கின்றனர். சமுதாயத்தில் மதத்திற்கு இவ்வளவு பலம் இருந்தும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு, தனக்கு அரசியல் பலத்தை உருவாக்குவதற்காகத் தேர்தல் அரசியலிலும் கடுமையாக உழைக்கிறது. ஆர்.எஸ்.எஸ்.ஸின் அரசியல்வெறிச்செயல் பாடுகளை நேரடியாகக் கண்டபிறகும் - 'தேர்தல் அரசியலை' நம்பவேண்டாம் எனப் பிரச்சாரம் செய்வது ஆர்.எஸ்.எஸ்.ஸின் குரலாகவே இருக்கும்.

**சான்றுகள்:** கவிஞர் கருணாநந்தம் எழுதிய 'தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு', எஸ்.வி.இராஜதுரை - வ.கீதா எழுதிய 'பெரியார்: சுயமரியாதை சமதர்மம்' நூல்கள், குடி அரசு, புரட்சி ஏடகள்.

தாராபுரம் பூங்கொடி



# உடன்போக்கும் உச்சநீதிமன்றமும்

நம்ம இந்தியச் சமூக மைண்ட்செட் எப்படின்னா பப்ளிக்ல பிஸ் அடிக்கலாம், பொண்டாட்டி கூட சண்டை போடலாம், கெட்ட வார்த்தையில் திட்டலாம், மூஞ்சி முகரை எல்லாம் கிழிக்கலாம், யாரும் வந்து ஏன்னு கூடக் கேட்க மாட்டாங்க. அது அவங்க குடும்பச் சண்டைன்னு கண்டுக்காம போவாங்க. ஆனால் அதே சமயம் பப்ளிக்ல கிஸ் அடிக்கக்கூட வேண்டாம், நெருக்கமாக இணைந்து போனாலே, ஏதோ வேற்றுக்கிரக வாசியப் பார்க்கிற மாதிரியே பார்ப்பாங்க. பப்ளிக்ல எப்படி வெட்கமேயில்லாம நடந்துக்குதுக பாருன்னு வியாக்கியானம் வேறு பேசுவாங்க. இது எல்லாருக்கும் தெரிஞ்ச விசயம் தான, நீ என்னம்மா சொல்ல வரேன்னு கேட்கிறீங்களா?

இதே மாதிரி மெண்டாலிட்டி தான் இந்தியத் திருமண முறையில் இருக்குன்னு சொல்ல வரேன். முன்ன, பின்ன அறிமுகமில்லாத இரண்டு நபர்களை நாள், நட்சத்திரம், கோள், ஜாதகம் மற்றும் ஜாதிப் பொருத்தம் பார்த்து திருமணம் பண்ணி வைக்கிறதும், உறவினர்கள் எனில் உறவு முறை விடுபடக் கூடாது, சொத்து கைய விட்டுப்போகக் கூடாது, சாகப்போகிற ஒரு கிழவனோ, கிழவியோ பேரன், பேத்தி கல்யாணத்தைப் பார்க்க ஆசைப் படுதுன்னு ஒன்றுக்குமே உதவாத காரணங்களைச் சொல்லி திருமணப் பந்தத்தில் இருவரை நுழைப்பது என்பது காலம் காலமாக நடக்கிறது.

கூடவே குடும்பப் பந்தத்தில் நுழையறதுங்கிறது சின்னக்காரியமில்லை. விளையாட்டை எல்லாம் மூட்டை கட்டி வைச்சுட்டு பொறுப்பா குடும்பம் நடத்துற வழிய பாருங்கன்னு அறிவுரைகளை அள்ளிவிடுவாங்க. சரி இதோட நிறுத்துவாங்களான்னு பார்த்தால் அது தான் இல்லை. பெற்றவர்களும் மற்றவர்களும் எது தங்களுடைய எல்லை என்பதையே மறந்து, இருவர் உணர்வும் ஒத்துப் போய் இணைய வேண்டிய தாம்பத்யத்திற்கு ஒட்டு மொத்தக் குடும்பமும் ஒன்று கூடி நல்ல நேரம், நாள் பார்த்து அனுப்பி வைப்பாங்க. அடுத்தவர் அந்தரங்க விஷயத்தில் (பெற்ற மகள் அல்லது மகனாக இருப்பினும்) தலையிடக்கூடாது என்கிற புரிதலே இல்லாமல், அரைவேக்காட்டுத்தனமாக காலையில் எல்லாம் நல்லபடியா முடிந்ததான்னு வெட்கமேயில்லாம கேள்வி கேட்பாங்க.

### ஜாதிமுறையை விடக் கேவலமானது திருமணமுறை

இப்படிப்பட்டவர்களுக்கு மத்தியில் ஒரு ஆணோ, பெண்ணோ திருமண பந்தத்தில் இணையாமல் சேர்ந்து வாழ முற்பட்டால் ( எந்த ஜாதியோ, எந்தக் குலமோ இரண்டும் சேர்ந்து கல்யாணம் பண்ணாம கூத்தடிக்கிதுன்னு உள்ள மைண்ட் வாய்ஸ் ஓடும்கிறது வேற விசயம்). இருவரும் உடல் தேவைகளுக்காக மட்டுமே சேர்ந்து வாழ்கிறார்கள். இதெல்லாம் ரொம்ப காலத்துக்கு நீடிக்காது என்று வார்த்தைகளால் வசைபாடுவார்கள்.

சம்பந்தப்பட்ட ஆணிடம் “மச்சான் உன் காட்ல மழைடா, எந்தக் கமிட்மெண்டும் இல்லாம வாழ்க்கையை ஜாலியாக அனுபவிக்கிற”

என்று கூறும் சமூகம், சம்பந்தப்பட்ட பெண்ணிடம் “திருமண அமைப்பு தான் பெண்களுக்குப் பாதுகாப்பு தரும். தேவை தீர்ந்தவுடன் உன்னை விட்டுட்டுப் போய்ட்டாருன்னா என்ன பண்றது, ‘இழப்பு’ உனக்குத் தான்” என்றும் பாடம் எடுக்கும்.

மொத்தத்தில் ஒன்னு தெளிவாகத் தெரியுது. திருமண அமைப்புக்குள் வராமல் 'சேர்ந்து வாழ்பவர்களை' குடும்ப அமைப்புக்குக் குந்தகம் விளைவிக்க வந்தவர்கள் என்கிற ரீதியில் முரட்டுத் தனமாக எதிர்க்கின்றனர்.

என்னமோ திருமண அமைப்புக்குள் இருக்கும் ஒருவரும் பிரிந்து செல்லாதது போலவும், திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழ்பவர்கள் மட்டும் தான் விட்டுட்டுப் போய் விடுவார்கள் என்பது போலவும் கூறுவார்கள். நடைமுறையில் பார்த்தால் 'லிவிங் டுகெதர்' முறையில் வாழும் பெண்களின் நடைமுறை வாழ்க்கை மாற்றமின்றி அப்படியே தொடர்கிறதுன்னு சொல்வேன்.

விருப்பம் இல்லாத இருவர் திருமணம் செய்து கொண்டோம் என்ற கட்டாயத்தின் பேரில் இணைந்து இருப்பதைவிட உணர்வுப்பூர்வமாக, இருவர் சேர்ந்து வாழ முடிவெடுப்பதையோ, பிடிக்கவில்லை என்று விலகிச் செல்வதையோ எந்த விதத்தில் தவறாகக் கூற முடியும்?

திருமண முறை எனும் அடிமை முறையை விட 'லிவிங் டுகெதர்' முறை எவ்வளவோ மேலானது என்று கூறுவேன். ஜாதி முறையைவிடக் கேடானது இந்தக் கணவன் மனைவி முறை என்று தந்தை பெரியார் கூறியது தான் என் நினைவுக்கு வருகிறது.

**உடன்போக்கும், உச்சநீதிமன்றமும்**

சமீபத்தில் கேரளஉயர்நீதிமன்றம் வயது வந்த இருவர் திருமணம் செய்து கொள்ளாமல் இணைந்து வாழ்வதற்கு உரிமை இருக்கிறது என்று தீர்ப்புக் கூறிய விசயத்தைச் சற்றே பார்க்கலாம். கேரளாவைச் சேர்ந்த 20 வயதான தன் மகள் துசாரா என்பவரை 21 வயது பூர்த்தியாகாத நந்தகுமார் என்பவர் கடத்திச் சென்று விட்டார் என்றும், அவர்கள் திருமணம் செய்தது இந்துத் திருமணச் சட்டப்படி செல்லாது என்றும் பெண்ணின் தந்தை வழக்கு தொடுத்திருந்தார்.

முன்னதாக இவ்வழக்கை விசாரித்த கேரள உயர்நீதிமன்றம் 'இந்துத் திருமணச் சட்டப்படி' ஆணின் திருமண வயதான 21 பூர்த்தியாகாததால் துசாராவை தந்தையுடன் செல்ல அறிவுறுத்தியிருந்தது. பின்னர் இந்த வழக்கை விசாரித்த உச்சமன்ற நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பானது அதிமுக்கியத்துவம் வாய்ந்தது.

துசாரா, தான் விரும்பியவருடன் இணைந்து வாழலாம் என்றும், வயது வந்த இருவர் திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழ்வதற்கு உரிமை இருக்கிறது என்றும், தற்போது இம்முறையில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்கள் 'குடும்ப வன்முறைச் சட்டம் 2005' மூலம் பாதுகாப்புக் கோரலாம் என்று கூறிய தீர்ப்பானது 'திருமண அமைப்பு முறையை' உயர்த்திப் பிடிப்பவர்களுக்கு அதிர்ச்சியையும், 'லிவிங் டுகெதர்' இணையர்களுக்கு மகிழ்ச்சியையும் ஒருங்கே தந்திருக்கிறது.

திருமண அமைப்பு முறைக்கு வேட்டு வைக்கிற மாதிரி இப்படிச் சொல்லி விட்டார்களே, எல்லோரும் இப்படித் திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழக் கிளம்பிட்டா, திருமணம்ங்கிற பேரில் நமக்குக் கிடைக்கும் நிரந்தர 'அடிமை போச்சே' என்கிற மனநிலையில் இருக்கிறார்கள். ஆணாதிக்கவாதிகளும், ஜாதி-மத ஆதிக்கவாதிகளும். எதற்கெடுத்தாலும் பழந்தமிழர் பெருமை பேசுகிறவர்கள் இந்தத் தீர்ப்புக்கு அதிர்ச்சி அடைவது தான் வேடிக்கையாக இருக்கிறது. ஆதித் தமிழர் பண்பாடே 'உடன்போக்கும், களவுமனமும்' தானே.

> "திருமணமுறை, கல்யாணமுறை, கணவன்-மனைவியாக வாழும் முறை தமிழனுக்கு இருந்தது கிடையாது. ஆணும், பெண்ணும் சம உரிமையோடு, நண்பர்களாக, காதலன் - காதலியாக வாழும் முறை தான் இருந்தது. இடையில் பார்ப்பான் வந்து புகுந்த பின் தான் தமிழன் அறிவு இழக்கவும், இது போன்ற முறைகள் பார்ப்பானால் புகுத்தப்பட்டது. நம் வாழ்க்கையில் பார்ப்பானுக்கு நிரந்தர அடிமையாக்க சூத்திரத்தன்மை புகுத்தப்பட்டதுபோல, பெண்கள் ஆண்களுக்கு நிபந்தனையற்ற அடிமைகளாக்கப் புகுத்தப்பட்டதே திருமண முறையாகும்"
>
> *10.11.1968 நடராசன் யசோதா*
> *திருமண உரை,விடுதலை 15.11.1968*

**நேர்மையைத் தொலைத்துவிட்ட குடும்பஅமைப்பு**

திருமண வயதில் இருக்கும் ஒரு ஆணும், பெண்ணும் திருமண அமைப்புக்குள் வராமல் சேர்ந்து வாழ்வதை முறையான ஒரு உறவாகவே கருதாத இதே சமூகம் தான், குடும்ப அமைப்பில் இருந்து கொண்டு நேர்மையற்ற முறையில் இன்னொரு உறவு வைத்துக் கொள்ளும் கணவன் அல்லது மனைவி விசயத்தில் குடும்பம் கெட்டுப் போய்விடும், இது அவங்க குடும்ப விவகாரம் நாம் தலையிடக்கூடாது என்று கூறிக் கண்டும் காணாமல் கடந்து போகின்றனர்.

எந்த உறவும் நீடிப்பதற்கு அடிப்படைத் தேவையான நேர்மையைத் தொலைத்துவிட்டு 'குடும்பம் என்கிற போலிப் பிம்பத்தை'க் காப்பாற்றத் துடிக்கிற சமூகத்தைப் பார்த்தால், என்ன தோன்றுகிறது என்றால் குடும்பம்ங்கிற பிராண்டுக்குள் இருந்து கொண்டு நீ என்ன வேண்டுமானாலும் பண்ணிக்க என்று சொல்வது போல் உள்ளது. இதைத்தான் அன்றே தோழர் பெரியார் கேட்டார்.

> "இல்வாழ்வு, குடும்பம் என்று இப்படியே 1,000 வருஷத்திற்கு இருந்து பலன் என்ன? உன்னால் ஆனது என்ன? உன்னுடைய அறிவிற்கு என்ன பயன்? மனித ஜீவனுடைய நிலை இதுதானா? குறைந்த அளவு ஒழுக்கத்தோடு, நாணயத்தோடு வாழ வேண்டுமென்றில்லையே!
>
> *- விடுதலை 02.05.1969*

அடுத்து இவர்கள் கூறுகிற குற்றச்சாட்டு என்னவென்றால், அவரவர் தன் இயல்பில் வாழ்கிற இந்த 'லிவிங் டுகெதர்' முறையால் நீ உன் வேலைய மட்டும் பாரு, என்னோட வழியில் குறுக்க நிக்காதே என்கிற மனப்பான்மை தான் இருக்குமே தவிர, பொறுமையோ, சகிப்புத்தன்மையோ அறவே இருக்காது. ஆனால் திருமண அமைப்பு முறையில் சரி விடு, கோவத்துல ஏதோ பேசிட்டேன்னு, கொஞ்ச நேரம் கழிச்சு அவர்களே நார்மல் ஆகிவிடுவார்கள் என்றும் வலியுறுத்துகிறார்கள்.

ஆனால் உண்மை என்னவென்றால் திருமண அமைப்பு முறையில் இருக்கும் பெரும்பாலான இணையர்களின் மனதுக்குள் "என்ன பண்ணித் தொலையறது குடும்பம் கெட்டுப் போயிரும்னு பார்க்கிறேன், குழந்தை இருக்கேனு பல்லைக் கடிச்சிட்டுப் பொறுத்துப் போறேன்" என்கிற வேண்டா வெறுப்பான மன நிலையால் தான் நீடிக்கிறது என்பதை வசதியாக மறந்து விடு கிறார்கள்.

இப்படி உண்மை அன்போ, காதலோ இல்லாமல் சமூகத்தின் நிர்ப்பந்தத்தின் பொருட்டு இணைந்து இருப்பதைவிட - உண்மை, அன்பு, காதல், சுதந்திர உணர்வோடு இருக்கிறவரை இருப்போம். எந்த நிர்ப்பந்தத்திற்காகவும் தொடர்ந்து இணைந்து வாழவேண்டாம். மனம் ஒத்து வரவில்லை என்றால், பிரிந்து விடுவோம் என்பது தான் நேர்மையான செயலாக இருக்க முடியும்.

"இல்வாழ்க்கை குடும்பம் என்பதெல்லாம் மனிதன் காட்டுமிராண்டியாக இருந்த காலத்தில் இருந்திருக் கலாம். இன்றைக்கு ஏன் இந்தத் தொல்லை? இதை அறிவுள்ள மனிதன் சிந்திக்க வேண்டாமா?"

*- 23.04.1969 தஞ்சைத் திருமண விழா உரை.*

"மனிதன் கல்யாணம், திருமணம், வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் என்பனவற்றில் எதையும் செய்து கொள்ளாமல் இருந்தால் அதுவே போதும். அதுதான் மனிதனுக்கு விடுதலை என்பது. அதனால் குடும்பமே ஏற்படாது, தேவையுமிருக்காது. மனிதனுக்கு (ஆணுக்கோ, பெண்ணுக்கோ) திருமணம் செய்து கொள்ளாவிட்டால் தொல்லையோ, கவலையோகூட இருக்காது, இருக்க இடமும் ஏற்படாது. சுயநலமற்ற பொதுத்தொண்டுக்கு ஏராளமான மக்கள் ஏற்படு வார்கள். மக்களுக்கும் நிபந்தனையற்ற பகுத்தறிவு வளர்ச்சி ஏற்பட முடியும். நாட்டில் மக்களிடம் சமுதாயத்தில், ஒழுக்கமும், நாணயமும், நேர்மையும் பரவும். சாகும் போதும் கவலையற்றுச் சாவான். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு சமுதாயமாகிய பெண்கள் சமுதாயம் பேரறிஞர் சமுதாயமாக உயரும். விஞ்ஞானத் தத்துவப்படிப் பார்த்தால் இல்வாழ்வில் பெண் மாத்திரம் அடிமை அல்ல, ஆணும் அடிமையே ஆவான். இல்லறம் என்றாலே சுதந்திரமற்ற வாழ்வு என்பது தான் தத்துவம்.

*- ஞாயிறு மலர், விடுதலை 02.03.1969*

## கருத்துக் கந்தசாமி விவேக்கின் ஆம்பளப் புத்தி

பெண் குழந்தைகள் அம்மாவுக்கு உதவியாக சமையலறைக்குச் சென்று சமையலைக் கற்றுக் கொள்ளுங்கள். ஆண் குழந்தைகள் அப்பாவுடன் வெளியே வேலைக்குச் சென்று குடும்பத்திற்காக அவர் படும் பாட்டைப் புரிந்துகொள்ளுங்கள். இது கருத்துக் கந்தசாமியான நடிகர் விவேக்கின் ட்விட்டர் பதிவு. அம்மாவோ, குழந்தையோ பெண்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு உரிய வேலை சமையல் மட்டுமே. வெளிஉலகத் தொடர்புகள் பெண்களுக்குத் தேவை இல்லை. ஆண்தான் குடும்பத்திற்காக வெளியில் சென்று உழைக்கிறான். அதுதான் குடும்பத்திற்கான உழைப்பு. பெண் வீட்டில் உழைப்பது?.... அதெல்லாம் கணக்கி லேயே வராது.

இது ஏதோ அறிவே இல்லாத அப்பாவி மனிதன் பேசியது அல்ல. அணுகுண்டு அப்துல் கலாம் வரை செல்வாக்குப் பெற்ற விவேக் பேசியது. பெண்களை வெறும் பொருளாக, உணர்ச்சிகளற்ற பண்டமாக (Object) மூளையிலேயே பதிந்து வைத்துள்ளவர்களால் இப்படித்தான் பேசமுடியும். ஆங்கிலேயர்கள் இந்த நாட்டிற்கு வரும்வரை, இந்த நாட்டில் சிவில், கிரிமினல் சட்டத்தொகுப்பாக இருந்த மேற்கண்ட மனுசாஸ்திர வரிகள்தான் விவேக்கின் கருத்துக்கு அடிப்படை

"வீட்டிற்கு வேண்டிய பாத்திரம் முதலிய வற்றையும், தட்டு முட்டுச் சாமான்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ளச் செய்தும், வீட்டைத் துப்புரவாக்கி வைத்தல், தேவ பூசைக் கான ஏற்பாடுகளைச் செய்தல், அடுக்க ளைப் பொறுப்பு, பாத்திரம் படுக்கை முதலியவற்றைச் சரியாகக் கவனித்துக் கொள்ளல் போன்ற இல்லத்துக் காரியங்களை மனைவிக்குக் கற்பித்து அவற்றை அவளைக் கொண்டு செய்வித்தல் போன்றவற்றால் அவளது மனம் வேறிடம் செல்லாமற் செய்க!"

*-மனு சாஸ்திரம், அத்தியாயம் 9 ஸ்லோகம் 11*

பெண்களைப் பற்றிய இந்த மனநிலைதான் பாலியல் வன்கொடுமைகளுக்கும், அனைத்து வகையான பாலினப் பாகுபாடுகளுக்கு காரணமாக உள்ளது. இதில் விவேக் பல திரைப்படங்களில் பெரியார் கருத்துக்களைப் பேசியவர் என்பது தான் நமக்கு மானக்கேடு. இன்றையச் சூழலில், பெரியார் என்ற தனிநபரைப் புகழ்ந்து - ஆதரித்துப் பேசிக் கொண்டே, பெரியாரின் அடிப்படைக் கருத்துக் களை அழிப்பவர்கள் பெருகிக் கொண்டிருக் கிறார்கள் என்பதற்கு விவேக்கும் ஒரு எடுத்துக் காட்டு.

**சமையல் மட்டுமே பெண்களுக்கு;**
**சமையலறை மட்டுமே பெண்களுக்கு**
**என்ற மன நிலைக்கு எதிராகத்தான்**
**#DemolishKitchen 24.12.2018**





# புத்த ஜயந்தி கொண்டாட பொம்மை தயாரித்துக் கொள்ளுங்கள்!

## தோழர்களே 27.05.1953 ஞாபகமிருக்கட்டும்!

பிள்ளையார் உருவத்தை உடைப்பதில் ஒன்றும் அதிசயப்பட வேண்டியதில்லை. தயங்கவேண்டியதில்லை! பிள்ளையார் சதுர்த்தி பண்டிகையின் போது நாடு முழுவதும் எத்தனை எத்தனை ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான மண்ணு பிள்ளையாரை மக்கள் குயவனிடம் வாங்கி பிள்ளையார் சதுர்த்தி முடிந்தவுடன் கடலில் ஆற்றில் ஓடையில் ஏரியில் குளத்தில் கிணற்றில் புனலில் வயலில் எறிந்துவிடுகிறார்கள். அது உடன் கரைந்து நீரோடு நீராக மண்ணோடு மண்ணாக ஆகிவிடுவதில்லையா? இது தெரிந்தே மக்கள் நீரில் போடுவதில்லையா? அதுபோன்ற செய்கை தான் இந்த உடைத்துத் தூளாக்கி மண்ணோடு மண் ஆக்குவதுமாகும்.

நாம் காசு போட்டு வாங்குகிறோமே ஒழிய வேறு எந்த மனிதனுக்கும் உரிமை இருக்கிற வஸ்துவிடமும் நாம் செல்லவில்லை. தொடவில்லை. நாமாக வாங்கி உடைப்பதும் நமக்குப் பிள்ளையார் கடவுளல்ல! வேதசாஸ்திர ஆதாரம் என்பதின் படியும் அது கணபதி கடவுளல்ல! கடவுளுக்கு எந்த உருவமும் இல்லை! கணபதி கடவுள் என்பதால் மனிதன் காட்டுமிராண்டி ஆக்கப்படுகிறான். அதற்கு கோவில் பூசை நைவேத்தியம் உற்சவம் முதலியவைகளால் நம் அறிவும் செல்வமும் நேரமும் முற்போக்கும் பாழாகிறது. உண்மையான கடவுள் என்பதும் நாஸ்திகமாகிறது.

கணபதிக்குக் கற்பிக்கப்பட்டிருக்கிற பிறப்புக்கும் குணங்களுக்கும் மிகுதியும் கீழ்த்தரமானவை அறிவுள்ள மானமுள்ள கடவுள் தன்மை அறிந்த மக்களுக்கு ஏற்றதல்ல. பொறுத்துக் கொள்ளக் கூடியதல்ல! காட்டுமிராண்டிக் காலத்தில் 1000-2000 ஆண்டுகளுக்கு முன் வெளிநாட்டினரால் ஏற்பட்ட இந்த தேவர் - தெய்வங்கள் உணர்ச்சியே தான் இந்த 1953- ஆம் (விஞ்ஞான) ஆண்டிலும் நமக்கு இருக்க வேண்டுமா?

ஆற்றங்கரையில் மூக்கைப்பிடித்து ஜெபித்துக் கொண்டு ஏழையாய்ப் பிச்சை எடுத்து வாழ்ந்து கொண்டிருக்க வேண்டிய பிராமணர் (பார்ப்பான்) இன்று சக்கரவர்த்தியாக அதாவது 565- தேசங்களுக்கு தேசாதிபதியாக பிரதமாக இருந்து உரிமை அடையும்படி தனது நிலையை மாற்றிக் கொண்டிருக்கும் போது கல்லை- செம்பை- மண்ணை- அழுக்கு உருண்டையை வணங்கிக் கொண்டிருக்கச் செய்யப்பட்ட காட்டுமிராண்டிகளான நாம் மனிதத் தன்மை பெற்று உண்மை சத்தியம் (சத்து) கண்டுபிடித்து மண் பொம்மையை அழிக்கப்படாதா என்று கேட்கிறேன்.

இதில் அக்கிரமம், அநீதி, அசத்தியம், அறிவில்லாமை, அடாது செய்தல் என்ன இருக்கிறது? யார் தான் ஆகட்டும்! ஆத்திரப்படக் காரணம் என்ன இருக்கிறது? மற்றும் இன்று ஆரியப் பார்ப்பனர்களில் சங்கராச்சாரி பார்ப்பனர் முதல் மடிசந்தி பார்ப்பனர் ஈறாக அரசியல் பார்ப்பனர் முதல் சீர்திருத்த பார்ப்பனர் ஈறாக ஜட்ஜீ பார்ப்பனர் முதல் அட்டண்டர் பார்ப்பனர் ஈறாக லஞ்சம் ஃபோர்ஜரி பாங்கி மோசடிப் பார்ப்பனர் முதல் குச்சு நுழைவு மாமா, குடி சூதாட்டப் பார்ப்பனர் வரை கட்டுப்பாடாக தமிழர்களை மனுகால சூத்திரராகச் செய்து வரும் பார்ப்பன ஆதிக்கப் பிரச்சாரத்திற்கு அரசியல், கல்வி, இயல், மத இயல் களில் செய்துவரும் நிரந்தரப் பந்தோபஸ்தான, சுயநல ஏற்பாட்டிற்குத் தமிழர்களே சூத்திரர்கள், பஞ்சமர் என்பவர்களே என்ன செய்யப் போகிறீர்கள்? இதைவிட வேறு வழி இருந்தால் சொல்லுங்கள் - சூத்திர மந்திரிகளே!

சூத்திர பார்லிமெண்ட் சட்டசபை மெம்பர்களே! வைஸ் சேன்ஸ்லர் முதல் கல்விமான்களே! உலகப்பிரசித்திக் கோடீஸ்வரர்களே! புலவர்களே! பிரபுக்களே! மாஜி ஜமீன்தார்களே! மாஜி மகாராஜாக்களே ஸ்ரீ-ல-ஸ்ரீ! ஸ்ரீ-ல-ஸ்ரீ!! பண்டார சந்நிதிகளே சொல்லுங்கள். கேட்க, தலை வணங்கச் சித்தமாக இருக்கிறேன்!

- தோழர் பெரியார் 07.05.1953 விடுதலை ஏடு

ராயல் சேலஞ்ச்

# ‘தியா’ காட்டுமிராண்டித்தனம்

பேய்ப்படங்களின் தொடர்ச்சியாக, இயக்குநர் விஜய் ஒரு புதுவகையான பேயை அறிமுகப்படுத்தியுள்ளார். ‘பிரேமம்’ என்ற மலையாளப்படத்தை தமிழ்நாட்டில் மலையாள மொழியிலேயே 200 நாட்களைக் கடந்தும் ஓடவைத்த சாய்பல்லவி கதாநாயகியாக வருகிறார். கல்லூரிக் காலத்தில் காதலின் விளைவாக, கருவுறுகிறார். அந்தக் கருவைக் கலைத்துவிட்டுப் படிப்பைப் பார்க்கவேண்டும் என காதலன், காதலி இரண்டு குடும்பங்களும் அறிவுப்பூர்வமாகப் பேசுகின்றன. சாய்பல்லவி மறுக்கிறார். ஆனாலும் கட்டாயப் படுத்திக் கருக்கலைப்பு நடக்கிறது. கல்விப்பயணம் தொடர்கிறது. படிப்பு முடிந்து சம்பாதிக்கத் தொடங்கிய பிறகு, அதே காதலர்கள் திருமணம் செய்கிறார்கள்.

படிப்புக் காலத்தில் காதல், அதனால் கரு உண்டாதல் என்பதில் இந்த அணுகுமுறைதான் சரியானது. முடிந்த அளவு, உடலுறவைத் தவிர்க்க முயற்சி செய்யலாம். தவிர்க்க முடியாவிட்டால் அதற்கேற்ற கருத்தடைச் சாதனங்களைப் பயன் படுத்தலாம். அதிலும் தோற்று விட்டோம் என்றால் கருக்கலைப்பு தான் சரியான தீர்வு. ஆனால், கரு உண்டாகிவிட்டது என்பதை, அது உருவாகிய உடனேயே கண்டுபிடித்துக் கலைக்க வேண்டும். இல்லாவிட்டால் பெண்ணின் உடலுக்கு ஆபத்தையும் விளைவிக்கும். மருத்துவர்களும் அதில் தயக்கம் காட்டுவார்கள்.

காதல்வாழ்க்கை என்று இல்லாமல், பெற்றோர் பார்த்து நடத்தி வைக்கும் திருமண வாழ்க்கையில் கூட பிள்ளைபெறும் தொல்லையைத் தவிர்க்க ஆண் கருத்தடை அறுவைச்சிகிச்சை செய்து கொண்டால், பாலியல் தேவைக்கும் தொல்லை இருக்காது. நிம்மதியான வாழ்க்கைக்கும் தொல்லை இருக்காது. இன்றைய மக்கள்தொகைப் பெருக்கச் சூழலில், பெண்ணடிமைச் சூழலில் இது தான் நியாயமானது.

இந்த அறிவியல் அணுகுமுறைக்கு எதிராக வந்துள்ள படம் தான் தியா. கல்லூரிக்காலத்தில் கலைக்கப்பட்ட ‘கரு’ பேயாக வந்து, கருக்கலைப்பை நடத்திய குடும்பத்தினரையும், மருத்துவரையும் பழிவாங்குகிறது. இறந்தவர்கள் எல்லாம் பேயாக வந்தகாலம் போய், கலைக்கப்பட்ட கருக்கள்கூட பேயாக வருகிறது என்பது நாட்டில் பேய்களின் மார்க்கெட் அதிகரித்துள்ளது என்பதைக் காட்டுகிறது.

**அயர்லாந்தின் கருக்கலைப்புச் சட்டம்**

இந்தப் படம் வந்த இதேநேரத்தில், அயர் லாந்து நாட்டில் கருக்கலைப்புக்கு ஆதரவாகப் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டு, அதில் கருக் கலைப்புக்கு ஆதரவாகப் பெருவாரியான மக்கள் வாக்களித்தார்கள் என்ற செய்தி வெளியானது.

அயர்லாந்து நாட்டின் பழைய கருக்கலைப்புத் தடைச்சட்டத்தின்படி, கருவில் உள்ள குழந்தைக்கும், கருவைச் சுமக்கும் பெண்களுக்கு உள்ளது போன்றே வாழ்வுரிமை உண்டு என்று கூறுகிறது. இந்தச்சட்ட வரைவை நீக்க வேண்டுமா அல்லது தக்கவைக்க வேண்டுமா என மக்கள் தங்களது வாக்குகளைப் பதிவு செய்தனர். தற்போதைய சட்டப்படி தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் மட்டுமே கருக்கலைப்பு செய்யப்படும்.

2012 ஆம் ஆண்டு இந்திய வம்சாவளிப் பெண்ணான சவீதா என்பவருக்குக் கருக்கலைப்பு செய்ய இந்தச் சட்டம் தடையாக இருந்ததால் சவீதா மரணமடைந்தார். சவீதாவின் மரணம், அயர்லாந்து மக்களைப் பண்பாட்டுப் புரட்சிக்குத் தள்ளியது. அதன் விளைவாக, கருக்கலைப்புத் தடைச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவது தொடர்பான வாக்கெடுப்பில் 66.4 சதவீத வாக்குகள் ஆதரவாகவும், எதிராக 33.6 சதவீத வாக்குகளும் பெறப்பட்டுள்ளன. இந்த வாக்கெடுப்பின் அடிப்படையில் புதிய கருக்கலைப்பு ஆதரவுச்சட்டம் விரைவில் வெளியிடப்பட உள்ளது.(பி.பி.சி தமிழ் 26 மே 2018)

அயர்லாந்தின் அமைதிப்புரட்சியை வாழ்த்தி வரவேற்கிறோம். அதேசமயம் இவ்வளவு காட்டு மிராண்டித்தனமான சட்டத்தை இந்த 2018 ஆம் ஆண்டிலும் அறிவாளிகள், கல்வியாளர்கள், ஜனநாயகவாதிகள், புரட்சியாளர்கள் எல்லாம் வாழ்வதாகப் பேசப்படும் நாடுகளில் ஒன்றான அயர்லாந்தில் - இவ்வளவு காட்டுமிராண்டித் தனமான சட்டத்தை இன்றுவரை மாற்றாமல் வைத்திருக்கிறார்கள் என்பது நமக்கு ஆச்சரியத்தை உண்டாக்கவில்லை. ஏனென்றால், அயர்லாந்து கிறித்துவ மதவாதிகளின் ஆதிக்கத்தில் உள்ள நாடு.

**1931 லேயே பெரியாரின் கருக்கலைப்பு ஆதரவு**

தோழர் பெரியார் தனது சுயமரியாதை இயக்கக்காலத்தில், இந்துமத ஆதிக்கவாதிகளிடம் அடைந்த எதிர்ப்புகளைப்போலவே, இந்த ரோமன் கத்தோலிக்கர்களின் எதிர்ப்பையும், கடும் நெருக்கடி களையும் சந்தித்தார். தனது குடிஅரசு இதழையே நிறுத்த வேண்டிய அளவுக்குத் துன்பங்களைச் சந்தித்தார்.

**அறிவியல் அணுகுமுறைக்கு எதிராக வந்துள்ள படம் தான் தியா. கல்லூரிக்காலத்தில் கலைக்கப்பட்ட 'கரு' பேயாக வந்து, கருக்கலைப்பை நடத்திய குடும்பத்தினரையும், மருத்துவரையும் பழிவாங்குகிறது. இறந்தவர்கள் எல்லாம் பேயாக வந்தகாலம் போய், கலைக்கப்பட்ட கருக்கள்கூட பேயாக வருகிறது...**



"கர்ப்பத்தடை முறையைக் கத்தோலிக்கர் மதத்தின் பேரால் எதிர்ப்பதில் மூன்று முக்கிய காரணங்கள் எடுத்துச்சொல்லி வருகிறார்கள்.

1.கடவுளுக்கு விரோதமாம். 2.வேதத்துக்கு விரோதமாம். 3.இயற்கைக்கு விரோதமாம். இந்த மூன்று காரணங்களும் முற்றும் முட்டாள் தனமும், மோசமும் நிறைந்த கற்பனைக் காரணங்கள் என்பதுடன் முன்னுக்குப்பின் முரணான காரியங்கள் என்பதுமாகும் என்பதே நமதபிப்பிராயம். இதைப்பற்றி அடுத்தவாரம் விளக்குவோம்"

*-தோழர் பெரியார், குடி அரசு - 05.11.1933*

*கிறித்தவர்களின் இந்த முட்டாள்தனத்தின் விளைவாகத்தான் அயர்லாந்தில் இந்த 2018 வரை கருக்கலைப்புக்குத் தடை இருந்துள்ளது. குறிப்பாக பெரியார், 1930 ஆம் ஆண்டிலிருந்தே கருத்தடைக்கு ஆதரவாகக் 'கர்ப்பத்தடை' என்ற பெயரில் விரிவான தொடர்கட்டுரையை எழுதினார்.*

*1930 இல் குடி அரசில் எழுதும் போது கருத்தடையை ஆதரித்தார் என்றாலும், 'கருக் கலைப்பு' என்பதை ஆதரிக்கவில்லை. ஆனால், தொடர்ச்சியாக 1931 விருந்து கருக்கலைப்புக்கும் ஆதரவாக இருந்தார். கருத்தடையை ஆதரித்த போதுகூட பெரியாரின் பார்வை என்பது உலகில் உள்ள வேறு அனைத்துப் பெண்ணியவாதிகளைவிடவும் வேறுபட்டதாக இருந்தது. முழுமையான பெண் விடுதலையை அடிப்படையாகக் கொண்டிருந்தது.*

"கர்ப்பத் தடையின் அவசியத்தைப் பற்றி நாம் கருதும் காரணங்களுக்கும் மற்றவர்கள் கருதும் காரணத்திற்கும் அடிப்படையான வித்தியாசம் இருக்கின்றன. அதாவது பெண்கள் விடுதலை அடையவும் சுயேச்சை பெறவும் கர்ப்பத்தடை அவசியமென்று நாம் கூறகின்றோம். மற்றவர்கள் பெண்கள் உடல் நலத்தை உத்தேசித்தும் பிள்ளைகளின் தாஷ்டீகத்தை உத்தேசித்தும், நாட்டின் தரித்திர திசையை உத்தேசித்தும், குடும்பச்சொத்து குலையாமல் இருக்க வேண்டு மென்பதை உத்தேசித்தும், கர்ப்பத்தடை அவசியமென்று கருதுகிறார்கள். இதை மேல் நாட்டினர் பலர்கூட ஆதரிக்கின்றார்கள்.

ஆனால் நமது கருத்தோ இவைகள் எதையும் பிரதானமாய்க் கருதியது அல்ல. மற்றெதைக் கருதியென்றால் முன் சொன்னது போல், **பொதுவாக பெண்களின் விடுதலைக்கும் சுயேச்சைக்குமே கர்ப்பம் விரோதியாய் இருப்பதால் சாதாரணமாய் பெண்கள் பிள்ளை பெறுவது என்பதையே அடியோடு நிறுத்தி விட வேண்டும்** என்கிறோம்,

...மது விலக்கு பிரசாரத்தை விட, தொத்து வியாதிகளை ஒழிக்கும் பிரசாரத்தை விட, இந்த கர்ப்பத்தடை பிரசாரம் மிகவும் முக்கியமான தென்பதே நமது அபிப்பிராயம். ஆதலால் இந்த கர்ப்பத்தடைக்கு நமது நாட்டில் ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தி அதன் மூலம் பிரசாரம் செய்ய பொது ஜனங்களில் சிலராவது இது சமயம் முன் வரவேண்டுமென்றே வேண்டிக் கொள்ளுகின்றோம்.

*தோழர் பெரியார்,*
*குடி அரசு - தலையங்கம் - 06.04.1930*

*தூத்துக்குடியில் 04.04.1931 அன்று நடைபெற்ற திருநெல்வேலி ஜில்லா 4 வது சுயமரியாதை மாநாட்டில் கருத்தடைக்கு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற்றினார்.*

"நமது பெண்மக்கள் வாழ்விற்கு அவசியமான வகையில் உடைகளையும், நகைகளையும் சுருக்கிக் கொள்ளவேண்டுமெனவும், தேக சக்திக்கும், செல்வ நிலைக்கும் தகுந்த அளவில் குழந்தைகளைப் பெறுவதற்காகக் கர்ப்பத்தடைமுறைகளை அவசியம் கையாளவேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

*- குடி அரசு - 12.04.1931*

**தோழர் பெரியாரைப் பின்பற்றி, பண்பாட்டுப் புரட்சியாக தமிழ்நாட்டுக் 'கரு'ப்பேய்களை விரட்டுவோம். கல்விக் காலங்களில் கல்வியில் கவனம் செலுத்துவோம். தவறி 'கரு' உண்டாகும் நிலை வந்துவிட்டால், தயக்கமின்றி உடனடியாகக் கலைப்போம். எல்லாவற்றையும் விடப் படிப்பு முக்கியம்.**




# Kindle device களிலும் காட்டாறு

பெரும் பதிப்பகங்களே தங்களது வெளியீடுகளை 100 அல்லது 200 பிரதிகளை மட்டும் அச்சிட்டு வெளிடும் சூழலில் - வெளியீட்டு விழாக்கள், பிரபல ஏடுகளின் பரிந்துரைகள் எதுவும் இன்றி, நான்கே மாதங்களில் 6 நூல்கள் கொண்ட 800 தொகுப்புகள் விற்பனையாகி, சாதனையை நிகழ்த்தியுள்ளன காட்டாறு வெளியீடுகள்.
6 நூல்களைத் தயாரித்து வெளிடுவதற்கு உரிய நிதியைத் திரட்டிக்கொடுத்து - நூல் விற்பனை மூலம் அந்தத் தொகையை மீட்டும் கொடுத்த தோழர்கள் அனைவருக்கும் மிக்கநன்றி.
காட்டாறு குழுவின் சக்திக்கு இது சாதனை தான். அச்சுஊடகத்திலும், இணையதளங்களிலும், மொபைல் செயலிகளிலும் பெரியாரின் எழுத்துக்களையும், பெரியாரியலையும் கொண்டுசெல்லும் காட்டாறு அடுத்தகட்டமாக, **Kindle** பதிப்புகளையும் வெளியிட்டுள்ளது. இனி **Kindle device** களிலும் பெரியாரின் கருத்துக்களைப் படிக்கலாம்.

பெரியார், அண்ணா மற்றும்
திராவிடர் இயக்க எழுத்தாளர்களின்
நூல்கள் அனைத்தும்
இணையத்தில் பெறுவதற்கு:
www.periyarbooks.in
+91 8428 455 455
periyarbooks.in@gmail.com

மின்னூலாகப் பெறுவதற்கு:
http://www.periyarbooks.in/e-versions/ebooks.html

Owner and Publisher by : S.Vijayaragavan # 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001 Consulting Editor: C.Ragavan Kaattaaru2014@gmail.com